Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 215 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 15, சனி 29.06.2013

**இந்தியா**



பக். 06

இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு அசமந்தம் தா.பாண்டியன் குற்றச்சாட்டு

**உலகம்**



பக். 07

அதிருப்தியில் அமெரிக்கா ஸ்நோடன் விவகாரத்தில் சீனா, ரஷ்யா நாடுகள் மீது

**விளையாட்டு**



பக். 23

வென்றது ஸ்பெய்ன்

# கோத்தா குழுவினால் உருவாகும் தமிழீழம்

## ஆரூடம் சொல்கிறார் மங்கள சமரவீர



கொழும்பு, ஜூன் 29

''சயனைட் குப்பியை கழுத்தில் அணிந்தவர்களால் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. ஆனால் கோத்தபாயவின் குழுவினர் வாய் திறந்தாலே புலம்பெயர் தமிழர்களின் கனவான தமிழீழம் மலர்ந்துவிடும்.''

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. கொழும்பு ராஜகிரியவில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.ஆர். கொண்டுவந்த '13' ஆவது திருத்தத்தை ஆரம்பத்தில் சுதந்திரக்கட்சி எதிர்த்தாலும் பின்னர் அதனை ஏகமனதாக ஏற்று '13' க்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்தியது. சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் என்ற வகையில் அப்போது இருந்த மஹிந்தவும் இதனை ஏற்றுக்கொண்டிருந்தார். இதே தீர்மானம் 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட பின் மீண்டும் மஹிந்தவால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது '13' ஐ நீக்க முயற்சிகள் அரசால் எடுக்கப்படுகின்றன. மஹிந்த சுதந்திரமாக முடிவெடுப்பாராயின் ஒருபோதும் '13' ஐ நீக்க முனைந்திருக்க மாட்டார். அவர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார் என்று எமக்கு சந்தேகம் உண்டு.

இனப் பிரச்சினை விவகாரத்தில் இனியும் ஆக்கபூர்வமாக செயற்படா விட்டால் அடுத்த போராட்டத்தை வன்னியில் சயனைட் அணிந்தவர்கள் ஆரம்பிக்கவேண்டியதில்லை. மாறாக கோத்தபாய உள்ளிட்ட அடிப்படைவாத குழுவினர் வாய் திறந்தாலே புலம்பெயர் தமிழர்களின் கனவாக தமிழீழம் மலர்ந்துவிடும் - என்றார். (ங-சி)

## படைச் சிப்பாய் கிளிநொச்சியில் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சியில் கடமையில் இருந்த போது காணாமற்போன சிப்பாய் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி சிப்பாய் ஒருவர் காணாமற்போயுள்ளதாக இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த சிப்பாய், நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட சிப்பாய் விக்ரமசிங்க ( வயது-26) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சடலம் மீட்கப்பட்ட இடத்தை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவானும், சட்டத்தரணியுமான சி.சிவபால சுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டு சடலத்தை மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-6)

## தமிழகத்தில் தீக்குளித்த ஈழ அகதி சாவு

கொழும்பு , ஜூன் 29

தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதி ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளார். ஆரணி மில்லர்ஸ் வீதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்த அழகுராஜா (வயது32) என்பவரே கடந்த புதன் கிழமை தனக்குத்தானே தீமூட்டி உயிரிழந்தவர் ஆவார். குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே அழகுராஜா தீக்குளித்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ங-சி)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலராக நிசாந்த சிறிமன்ன

யாழ்ப்பாணம், ஜூன் 29

கரைதுறைப்பற்று பிரதேச செயலராக, வெலி ஓயாப் பிரதேச செயலர் தீபால் நிசாந்த சிறிமன்ன நேற்று வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய, யாழ். மாவட்ட முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, அவர் மீதான புலன் விசாரணைகள் முடியும் வரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் வெலி ஓயா பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய தீபால் நிசாந்த சிறிமன்ன , கரைதுறைப்பற்றுக்குப் பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (த-5)

# '13' ஐ ஒழிக்க அரசுக்கு பெரும்பான்மை கிடைக்காது

## தமிழ்க் கட்சிகளிடம் கூறினார் டியூ

யாழ்ப்பாணம், ஜூன் 29

13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது என்றும், மாகாண சபைகளுக்கு அதிகளவான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாகவும் சிரேஷ்ட அமைச்சர் டியூகுண சேகர தம்முடனான கலந்துரையாடலில் தெரிவித்ததாக புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகரவுக்கும், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பத்மநாபா - ஈ.பி.ஆர்.எல்.எப். பொதுச் செயலர் சிறீதரன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆவது திருத்த

தொடர்ச்சி: பக்கம் 21

# இலங்கையில் நல்லிணக்கத்துக்கு பொதுநலவாயம் உதவி வழங்கும்

## கமலேஷ் சர்மா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு பொது நலவாய அமைப்பு தொடர்ந்தும் இலங்கைக்கு உதவி புரிந்து வரும் என்று அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

'லண்டன் பினான்சியல் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். போருக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் விடயத்தில் இலங்கை அரசு இன்னமும் நிறையவே செய்ய வேண்டியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய விழுமியங்களை இலங்கையில் முன்னெடுப்பதில் நாங்கள் இன்னமும் மும்முரமாகச் செயல்பட்டு வருகிறோம். இதில் மனித உரிமைகள், ஊடகத்துறை, நீதித்துறை மற்றும் சமூகங்களுக்கிடையில் பரஸ்பர மதிப்பு, புரிந்துணர்வு என்பனவும் அடங்கும் என்றார் கமலேஷ் சர்மா.

அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி: பக்கம் 21

# தெரிவுக் குழுவுக்கு வராதோர் ஜனநாயக விரோதிகளாவர்

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



கொழும்பு , ஜூன் 29

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுக்குமாறு அரசு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. இதற்கு ஆதரவு வழங்காத அரசியல் கட்சிகள் ஜனநாயக விரோதிகளாகவே கருதப்படுவர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனை முன்னிறுத்தி அரசு மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளுக்குச் சகல கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு ஆதரவளிக்காதவர்கள் ஜனநாயக விரோதிகளாவர் என்றும் அவர் கூறினார்.

அரசு தெரிவுக் குழுவுக்கான திறந்த அழைப்பை விடுத்துள்ளது. இந்த வெளிப்படையான அழைப்பு தெரிவுக் குழுவை எதிர்க்கும் கட்சிகளுடன் நடத்திய பேச்சுக்கு சமனா

தொடர்ச்சி: பக்கம் 21

# தெரிவுக்குழுவை கூட்டமைப்பு எதற்காகப் புறக்கணித்தது?

## கொழும்பில் இன்று விளக்குவார் சம்பந்தன்



கொழும்பு , ஜூன் 29

13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பதில்லை என்று தீர்மானித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

எதற்காக இந்த முடிவை கூட்டமைப்பு எடுத்தது என்பதை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொழும்பு - பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் இன்று மாலை 5 மணியளவில் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் இடம்பெறும் கூட்டத்தில் வைத்து உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றின் மூலம் அறிவிக்க உள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச.சாரதியை வீட்டுக்கு அனுப்பி வைத்தது நீதிமன்றம்

## போதையில் பஸ்ஸைச் செலுத்தியதால்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பயணிகளை ஏற்றிக் கொண்டு போதையில் பஸ்ஸைச் செலுத்திச் சென்ற சாரதியின், சாரதி அனுமதிப்பத்திரத்தை 6 மாத காலத்துக்கு இரத்துச் செய்தது நீதிமன்றம்.

அவருக்கு 500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காரைநகரிலிருந்து குறித்த இ.போ.ச. பஸ் பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்.பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கும் பயணிகளை ஏற்றிய பின்னர் அந்த பஸ் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி நோக்கிப் புறப்பட்டது.

> கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஒருவரே அதன் சாரதியாக அன்று புணிபுரிந்தார். அவர் மது போதையில் தள்ளாடியவாறு பஸ்ஸைச் செலுத்திச் செல்வது தொடர்பில் பயணிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஒருவரே அதன் சாரதியாக அன்று புணிபுரிந்தார். அவர் மது போதையில் தள்ளாடியவாறு பஸ்ஸைச் செலுத்திச் செல்வது தொடர்பில் பயணிகள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பொலிஸார் குறித்த சாரதியைக் கைது செய்தனர். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து அவருக்கு 6 மாத தடையும் தண்டமும் விதிக்கப்பட்டது -என்றார். (த-4)

# 'உதயன்' அறளை பிடித்த பத்திரிகை

யாழ்ப்பாணம், ஜூன் 29

'உதயன் ஒரு அறளை பிடித்த பேப்பர்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தாவியுள்ள மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸ் தெரிவித்தார்.

''விபசார விடுதிகள் எங்கே இருக்கிறது? எனக்கும் காட்டுங்கள் நான் போக ஆசைப்படுகின்றேன்'' என்று நான் தெரிவித்ததாகக் குறிப்பிட்ட 'உதயன்' பத்திரிகை, நான் கதைத்த வேறு விடயங்களைப் பிரசுரிக்கவில்லை எனவும் அங்கு சாடினார் றெமிடியஸ்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நான் குறிப்பிட்ட விடயங்களைப் பிரசுரிக்காமல், விபசார விடுதிகளுக்கு போக விரும்புகின்றேன் எனக் கடந்த மாத கூட்டத்தில் நான் பேசியதாக உதயன் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. உதயன் ஒரு அறளை பிடித்த பேப்பர்' என்று றெமிடியஸ் கூட்டத்தில் கூறினார்.

இதற்கு மாநகர சபையின் எதிர்கட்சி உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், கு.இராஜதேவன் ஆகியோர் 'நீங்கள் விபசாரத்துக்குப் போக விரும்புவதாகத்தான் குறிப்பிட்டீர்கள். அதைத்தான் எழுதியுள்ளனர். பத்திரிகை மீது அநாவசியமாக எதையும் கூறுவது முறையல்ல' என்று றெமிடியஸுக்குப் பதிலடி கொடுத்தனர்.

இதன் போது றெமிடியஸுடன் சேர்ந்து முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் கடந்த கூட்டத்தில் நான் நிஷாந்தன் (மாநகரசபை முன்னாள் உறுப்பினர்) பற்றி குறிப்பிட்ட எதனையும் பிரசுரிக்காமல் ஒருவனுக்கு ஒருத்தி என்று தெரிவித்ததை மட்டும் பிரசுரித்துள்ளார்கள் என்று கூறினார்.

கடந்த மாநகர சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மு.றெமிடியஸ் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-7)

### யமலோகம் சென்ற கணவனை நாடினார் இல்லத் தலைவி

தென்மராட்சி, ஜூன் 29

அறுபது வருட இல்வாழ்க்கையில் ஒன்றாக வாழ்ந்த குடும்பத்தின் இல்லத் தலைவன் சாவடைந்ததால் விரக்தியுற்றிருந்த 80 வயது இல்லத் தலைவி அறுபதாவது நாளில் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வரணி இடைக்குறிச்சியில் இடம்பெற்றது. அதேஇடத்தைச் சேர்ந்த சிதம்பரநாதர் மீனாட்சி (வயது-80) என்னும் மூதாட்டியே சாவடைந்தவர் ஆவார்.

இவரது சடலம் செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து நீதிவானின் பணிப்பின் பேரில் கொடிகாமம் பிரதேச திடீர்ச்சாவு விசாரணை அதிகாரி செல்வி நா.தவமலர் விசாரணைகளை நடத்தினார். திடீர் சாவு விசாரணை அதிகாரியின் பணிப்பின் பேரில் சாவகச்சேரி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியினால் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-9)

# ஆள்களைக் கடத்திக் கப்பம் மூவர் தொடர்ந்தும் மறியலில்

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சியில் ஆள்களைக் கடத்திக் கப்பம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்த பெண் உட்பட மூவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் கடந்த மே மாதம் 25 ஆம் திகதி இரண்டு குடும்பஸ்தர்களைக் கடத்திச் சென்று அவர்களின் உறவினர்களிடம் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை யாழ். சாவகச்சேரிப் பகுதியில் வைத்து கடந்த மே மாதம் 29 ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவரையும் நீர்கொழும்புப் பகுதியில் வைத்து கடந்த மே மாதம் 30 ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் மூவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் சி.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த மூவரும் மன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த ஆள்கடத்தல் கப்பம் பெறுதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட பலரைக் கைது செய்ய வேண்டியதாகவும் அது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து குறித்த மூவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சி.சிவபாலசுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். (த-6)

# கவனவீனம் காரணமாக இரு உயிர்கள் காவு

## வாகனங்களை அவதானமாகச் செலுத்த பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

கவனவீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திய காரணத்தால் இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. வட்டுக்கோட்டை மற்றும் இளவாலைப் பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களிலேயே இந்த நிலை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். யாழ்.பொலிஸ் நிலையத்தில் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி சம்பவங்கள் தொடர்பில் தகவல் வெளியிட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில், மகன் ஒருவர் தனது 68 வயதான தாயை மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் ஏற்றிச் சென்ற வேளை அவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதேபோன்று இளவாலையில் கடந்த 20ஆம் திகதி மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த 16 வயதுச் சிறுமி கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்களும் கவனவீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதனாலேயே இடம்பெற்றவை. வாகனங்களை ஓட்டுபவர்கள் மிக அவதானமாகவும், நிதானமாகவும் போக்குவரத்து விதிமுறைகளை மீறாது பயணிக்க வேண்டும். இதன்மூலமே உயிரிழப்புக்களையும், உடைமை இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-4)

# வர்த்தகர்களிடம் கப்பம்; விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 29

பொலிஸ் உயர் அதிகாரி என்று கூறி யாழ். வர்த்தகரிடம் கப்பம் கோரியமை தொடர்பில் விசாரணை தொடர்கிறது.

குறித்த நபர் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி சம்பவ தினத்தன்று யாழ். நகர பஸ் நிலையம் முன்பாக நின்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் கைத்தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுள்ளார்.

அதன் பின் அந்தப் பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்தி அவர் மூலமாகவே வர்த்தகரிடம் கப்பம் கோரப்பட்டதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். நகர வர்த்தகர் ஒருவரிடம் இவ்வாறு முன்னரும் கப்பம் கோரப்பட்டது. அதனை அவர் கொடுத்துள்ளார். மீண்டும் அவரிடம் கப்பம் கோரப்பட்டது. தர மறுத்ததால் வவுனியாவுக்கு விசாரணைக்கு அழைக்க வேண்டி வரும் என்று அவருக்குக் கூறப்பட்டுள்ளது.

> யாழ். நகர வர்த்தகர் ஒருவரிடம் இவ்வாறு முன்னரும் கப்பம் கோரப்பட்டது.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய நபர் தன்னை பொலிஸ் உயர் அதிகாரி என்று கூறியே யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் பின்னர் நகர பஸ்நிலையம் முன்பாக உள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் நின்றிருந்த யாழ்.பொலிஸ் உத்தியோகத்தருடனும் பேசியுள்ளார்.

அதனாலேயே குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும் அவ்வாறு செய்ய வேண்டியேற்பட்டது.

எனினும் பொலிஸ் உயர் அதிகாரி என்று கூறிய நபர் மற்றும் அவர் தொடர்பு கொண்ட இலக்கம் என்பன தொடர்பில் விசாரணை தொடர்கிறது- என்றார். (த-4)

# வடக்கில் உள்ளக இடம்பெயர்ந்தோரின் ஊட்டச் சத்தை அதிகரிப்பதற்குத் திட்டம்

வடக்கில் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளானோரிடையே ஊட்டச்சத்தின்மையைக் குறைக்கும்வேலைத்திட்டம்சிறப்பாகமுன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு ஜப்பானின் சமூக அபிவிருத்தி நிதியம் ஊடாக 2.95 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக வங்கியினால் கடந்த [illegible] வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கில் உள்ளக இடப்பெயர்வு உள்ளானோரிடையே ஊட்டச் சத்து இன்மையைக் குறைக்கும் வேலைத்திட்டம்,கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது.

கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோரின் ஊட்டச் சத்தை இலக்கு வைத்தே இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இவர்களுக்கு உள்ளூர் கலப்பு உணவான 'ஜீவபோஷா' வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக ஊட்டச்சத்து தொடர்பான கண்காட்சி, வீட்டுத்தோட்டம், மிருக வளர்ப்பு இதனை விட 'ஜீவ போஷாவை' வீட்டிலேயே தயாரித்து வழங்கும் செயற்றிட்டம் என்பன முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்[illegible] என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# வவுனியாவில் தியாகிகள் தினம்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகரும் அதன் செயலாளர் நாயகமுமாகிய அமரர் கே.பத்மநாபாவின் 23 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, உயிர் நீத்த கட்சியின் அனைத்துத் தோழர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் போராளிகள், பொதுமக்கள், நாட்டுப்பற்றாளர்களை நினைவுகூறும் தியாகிகள் தின நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பனர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் சங்கத்துவக்கட்சிகளின் தலைவர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,செல்வம். அடைக்கலநாதன், சித்தார்த்தன்,ஆனந்தசங்கரி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரும், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில் லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் வழங்கப்பட்ட நிதியுதவியில், போரின் போது பெற்றோரை இழந்த 175 பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதற்கான சேமிப்புப் புத்தகங்கள் வழங்குதலும், போரினால் முள்ளம்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 20 பேருக்கு முதல் கட்டமாக சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்குதலும் இடம்பெறும். (த-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.90 லட்சம் வரையான மோசடி முறைப்பாடுகள்

### செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

இத்தாலிக்கு அனுப்புவதாகக் கூறி பணம் பெற்று மோசடி செய்தமை உட்பட 90 லட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது தொடர்பில் கடந்த வாரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மற்றொருவர் 20 லட்சம் ரூபா பணத்தை கடந்த செப்ரெம்பர் மாதம் பெற்றுள்ளார்.

எனினும் இன்று வரை அவரை இத்தாலிக்கு அனுப்பவில்லை. அந்தப் பணத்தையும் அவர் திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே பாதிக்கப்பட்டவர் இது தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிகரெட் நிறுவனம் ஒன்றிலிருந்து 12 லட்சத்து 54 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை பெற்ற கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வர்த்தகர் அதற்குரிய பணத்தைச் செலுத்தாது மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றையதினம் கைது செய்யப்பட்ட குறித்த வர்த்தகர் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வட்டுக்கோட்டை சின்னட்டி எனும் இடத்தில் புதிய வீடு ஒன்றை விற்பதாகக் கூறி ஒருவரிடமிருந்து 40 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று வீட்டைக் கொடுக்காது பண மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.

நெல்லியடியில் கடந்த ஜனவரி மாதம் 12 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையைப் பெற்று மோசடி செய்தமை தொடர்பில் கடந்த 22 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் போலி நகைகளைக் கொடுத்து 5 லட்சம் ரூபாவை பெற்று மோசடி செய்தமை தொடர்பில் கடந்த 16 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன – என்றார். (வ-4)

யாழ்ப்பாணத்தில் மஹிந்த அறிவித்த

# 24 மணி நேர மின்சாரத்துக்கு வேட்டு வைத்துவிட்டது மழை

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட 24 மணிநேர மின்சாரத்துக்கு வேட்டு வைத்துவிட்டது மழை.

''மின் கம்பிகளில் நாளாந்தம் படியும் தூசிகள் ஒட்டிப் பிடித்துக் கொள்கின்றன. இதனால்தான் அதிகாலை வேளைகளில் மின்சாரம் தடைப்படுகிறது'' இவ்வாறு கூறுகிறார் இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன்.

யாழ்.குடாநாட்டில் நகரப் பகுதிகள் தவிர்ந்த, ஏனைய பகுதிகளில் அதிகாலை வேளைகளில் தொடர்ச்சியாக மின் தடை ஏற்படுகிறது. அதிகாலை 3 மணி முதல் 7 மணிவரை இந்த மின்தடை தொடர்கின்றது. கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக 'அறிவிக்கப்படாத' இந்த மின் தடை தடையின்றி தடையின்றி தொடர்ந்து வருகிறது.

ஏன் இந்த மின்தடை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிரதேச மின்பொறியியலாளரிடம் 'உதயன்' வினவியது.

தற்போது பெரும்பாலான மின் கம்பிகளில் தூசி படிந்துள்ளது. அதே சமயம் அதிகாலை வேளைகளில் வளிமண்டலத்தில் ஈரப்பதன் அதிகரிக்கிறது. அதன் காரணமாக மின் ஒழுக்கு ஏற்படுகின்றது. இது தவிர்க்க முடியாத நிகழ்வு. மின் ஒழுக்கு ஏற்படுவதனால், மின் பிறப்பாக்கிகளிலிருந்து திடீரென அதிகூடிய வலுக் கொண்ட மின்சாரம் ஒரே சமயத்தில் வெளிப்பாச்சுகின்றது. இதனால் மின்பிறப்பாக்கிகள் செயலிழந்து விடுகின்றன. இதுதான் மின்சாரம் தடைப்படுவதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார்.

அடிக்கடி மழை பெய்தால் வயர்களிலுள்ள தூசிகள் கழுவப்பட்டுவிடும். மழை பெய்யாததாலேயே இந்த நிலைமை. இதனால் நாம் மின் கம்பிகளில் படிந்துள்ள தூசிகளை கழுவி அகற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் – என்றார்.

இது இவ்வாறிருக்க, மின்சாரம் கண்ட கண்ட நேரங்களிலும் தடைப்படுவதால், பாவனையாளர்கள் கொதிப்படைகின்றனர். அந்தக் கொதிப்புடன் தொலைபேசியைச் சுழற்றுவது உதயனுக்குத்தான்.

''என்ன மின்சார சபைக்காரர் தாங்கள் நினைத்தவாறு கண்டபடி மின்சாரத்தை நிறுத்தி விடுறாங்கள். நீங்கள் அதைப் பற்றி தட்டிக் கேட்பதில்லை. செய்திகளிலும் அதைப் பற்றி ஒன்றையும் காணோம். அவையளைக் கேட்டு, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வையுங்கோ'' என்று சீறுவார்கள்.

''பிள்ளையள் சோதனை எழுதிற காலத்தில தான், உவைக்கும் ஏதோ வந்து விடுது....! எங்கள் பிள்ளைகள் அதிகாலை எழுந்து எப்படி படிப்பது.... இது மின்சார சபையின் சதியா? அல்லது அரசின் சதியா? என்று நேற்று முன்தினம் ஒருவர் குமுறினார். (ஒ-5)

# ஓவியப் போட்டிக்கு சிறுவர்கள் தெரிவு

தென்மராட்சி, ஜூன் 29

கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான ஓவியப் போட்டியில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 25 மாணவர்கள் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போட்டிக்கு ஓவியங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 100 சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நேரடி ஓவியப் போட்டி எதிர்வரும் எட்டாம் திகதி மு.ப.10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் தத்தமது பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# 3 லட்சம் பெறுமதியான பொருள்கள் திருட்டு

### கடந்த வாரம் மட்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மடிக் கணினி மற்றும் பொருள்கள் உட்பட சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் குடாநாட்டில் கடந்த வாரம் திருடப்பட்டுள்ளன. இது வரை அவற்றில் எவையும் மீட்கப்படவில்லை என்று யாழ். பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மானிப்பாயில் உள்ள 'ஸ்ரூடியோ' ஒன்று கடந்த 21 ஆம் திகதி உடைக்கப்பட்டு ஒரு லட்சத்து 96 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரியில் கடந்த 21 ஆம் திகதி 60 ஆயிரம் பெறுமதியான மடிக் கணினி மற்றும் 5 ஆயிரம் ரூபா பணம் என்பன வீடு புகுந்து திருடப்பட்டுள்ளது. அதேபிரதேசத்தில்



மற்றொரு இடத்தில் கடந்த 16 ஆம் திகதி வீடு புகுந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

கொடிகாமம் ஜீ.ரீ.எம். பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்கலம் திருடப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.களவுபோன பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை. எவரும் கைது செய்யப்படவில்லை– என்றார். (வ-4)

# கடந்தவாரம் மட்டும் 60 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29

பிறருக்கு அடித்துக் காயப்படுத்தியமை மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கடந்தவாரம் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 37 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டில் 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 18 பேரும், சட்டவிரோதமாக மது விற்ற குற்றச்சாட்டில் 14 பேரும், கடமைகளுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரும், திருட்டுப் பொருள்களைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும், திருட்டு சம்பந்தமாக 2 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்– என்றார். (வ-4)

# மாற்று வலுவுடையோருக்கான தொழிற் சந்தை நேற்று



யாழ்ப்பாணம், ஜூன் 29

தொழில் வாய்ப்பின்றி இருக்கும் மாற்று வலுவுடையோருக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான தொழில் சந்தை ஒன்று நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சும் சமூக சேவைகள் அமைச்சும் இணைந்து இந்த தொழில் சந்தையை நடத்தியன.

இந்த தொழில் சந்தையில் முப்பதுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் பங்குபற்றியதோடு நூறுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 45 வரையிலான மாற்று வலுவுடையோர் தொழில் சந்தைக்கு வேலை வாய்ப்புத் தேடி வருகை தந்திருந்தனர்.

அவர்களுக்கான தொழில் வாய்ப்பை வழங்கும் நோக்கில் அவர்களுக்கான நேர்முக விளக்கங்களைத் தனியார் நிறுவன அதிகாரிகள் பதிலளித்தனர். இதன் போது மாற்று வலுவுடையோர் தராதரச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தனர்.

தொழில் சந்தைக்கு வருகை தந்த அனைவருக்கும் தொழில் நிலையங்களில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிக செயலாளர் கேரத்யாப்பா, வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ், யாழ்.மாவட்ட தொழில் உதவி ஆணையாளர் நீலலோஜினி ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் நிவேதிகா பேரின்பநாயகம் மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(வ-7-17)

# வலி.கிழக்கு பிரதேசத்தில் அனுமதியற்ற புனரமைப்புகள்

### எதிராக கடும் நடவடிக்கை என்கிறார் சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வலி.கிழக்கு பிரதேசத்தில் சபையின் அனுமதி பெற்றே எந்த அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அனுமதி பெறாது மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு எதிராக சபை நடவடிக்கை எடுக்கும் என்று சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள வீதிகள் மற்றும் மயானங்களை புனரமைக்க அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக சபைக்கு தெரிய வந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் யாவும் சபையின் சட்ட விதிகளுக்கு முரணான செயலாகும். அனுமதி இன்றிய புனரமைப்புப் பணிகள் எவையும் இடம்பெற்றால் [illegible] நடவடிக்கை எடுக்கப்படும்.–என்றார். (வ-17)

# இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பினர் பாடசாலை அதிபர்கள்

### கடமைக்கும் வந்தனர் நேற்று

படை முகாம்களில் இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சியைப் பெற்ற பாடசாலை அதிபர்கள் 32 நாள்கள் பயிற்சியின் பின்னர் நேற்று தமது கடமைகளுக்குத் திரும்பினர். இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள அதிபர்களுக்கு இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிகள் கடந்த மாதம் ஆரம்பமாகி நடைபெற்றன.

பயிற்சியில் தமிழ் பேசும் அதிபர்கள் 8 பேர் அடங்கலாக 47 பேர் அதிகாரிகளுக்கான பயிற்சியைப் பெற்று வெளியேறியுள்ளதாகவும் பயிற்சிக் காலத்தில் அவர்களின் செயற்பாட்டு மதிப்பீடுகளின் பிரகாரம் தரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசின் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அனைவரும் பாதுகாப்பு தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், புதிய நியமனம் பெறுவோர் ஆகியோருக்கு தலைமைத்துவப் பயிற்சி என்னும் பெயரில் இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவிலகிய மாணவர்கள் 82 பேர் பாடசாலையில் இணைப்பு

## வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில்

அச்சுவேலி, ஜூன் 29

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பாடசாலையை விட்டு இடைவிலகிய 82 மாணவர்கள் மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு தொடர்ந்து கல்வி கற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் தொடர்ந்து பாட சாலையில் கல்வி கற்பதற்கான உதவிகள் மற்றும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் எம்.பிரதீபனின் வழிப்படுத்தலில் கிராம அலுவலர்கள், சிறுவர் நலன் மேம்பாட்டு அலுவலர், சமுர்த்தி அலுவலர்கள், பட்டதாரி பயிலுநர்கள் குழுநிலையில் பொலிஸாரின் உதவியோடு கிராமங்கள் தோறும் சென்று பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் மற்றும் இடைவிலகிய மாணவர்களை இனம் கண்டு பாடசாலைகளில் மீண்டும் இணைத்துள்ளனர்.

இந்த வகையில் ஆனந்தபுரம், உதயபுரம், செல்வநாயகபுரம், அச்செழு, கலைமதி, சிறுப்பிட்டி, அச்சுவேலி, இருபாலை உள்ளிட்ட பகுதிகளில் கணிசமான அளவு மாணவர்கள் இனங்காணப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 21 பாடசாலைகளில் 82 மாணவர்கள் மீள இணைக்கப்பட்டு கல்வி நடவடிக்கையில் ஈடுபட வசதி செய்யப்பட்டுள்ளது. (வ-11)

# விளையாட்டரங்கில் அடிப்படை வசதிகள்

## நல்லூர் பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நல்லூர் பிரதேச சபை விளையாட்டரங்கின் இளைப்பாறும் மண்டபம், மலசலகூட வசதிகளை அமைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாக முன்னதாக அதன் எல்லைகளை அமைக்கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் வசதியான விளையாட்டரங்கு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கொக்குவில் பொதுநூலகம், திருநெல்வேலிச் சந்தைப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்குமான மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழில் நுட்பக் குழுவின் பரிந்துரைக்கு மக்கள் பங்களிப்புடன் வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. (வ-7)

**பிரத்தியேக வகுப்பு**

# வரலாறு (06-11) வரை
O/L கடந்த கால வினாக்களும்,
வணிகக்கல்வி A/L
யாழ்நகர். தொடர்பு: 077 806 5773
(38751) (3.6.11)

**தேவை**

அளவெட்டியில் இயங்கும் ரூபன் கடைக்கு விற்பனையாளர்கள் (ஆண்), சிட்டை எழுதுனர் (ஆண், பெண்) தேவை.
01.07.2013 திங்கள் காலை 10 மணிக்கு நேர்முகம். (தங்குமிட வசதி செய்து தரப்படும்)
தொடர்பு- 0213219119

# தெரிவுக் குழுவில் இருந்து நீக்கியது இனவாத சக்திகளுக்கு அடிபணிந்ததாலா

## லங்கா சமசமாஜக்கட்சி சீற்றம்

இனவாதச் சக்திகளுக்கு அடிபணிந்து போனதால்தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில், இணைத்துக் கொள்ளப்படாது லங்கா சமசமாஜக் கட்சி ஓரங்கட்டப்பட்டுள்ளதா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது லங்கா சமசமாஜக் கட்சி.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது தொடர்பாக இந்தநாட்டின் வரலாற்றில் புரிந்துள்ள அர்ப்பணிப்புக்கள் அனைத்தையும் அலட்சியப்படுத்தி உள்ளமை அரசினுள் இருக்கும் இனவாத தரப்புக்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து போய்விட்டதால் தான் என எண்ணத் தோன்றுகிறது.

அரசினால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட செயலா இது என்றும் கேட்கிறது சமசமாஜக் கட்சி.

> அரசினால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட செயலா இது என்றும் கேட்கிறது சமசமாஜக் கட்சி.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய முன்னணி, பொதுசன ஐக்கிய முன்னணி என்பவை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டின் தேசியப் பிரச்சினை சம்பந்தமான முடிவுகள், தீர்மானங்களை மேற்கொள்ளும் வேளைகளில் சமசமாஜக் கட்சியுடன் ஆலோசித்துள்ளன என்றும்–

கலாநிதி என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டிசில்வா போன்ற கட்சியின் முக்கிய தலைவர்கள் போன்றே அனைத்து உறுப்பினர்களும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அர்ப்பணிப்புக்களைப் புரிந்துள்ளனர் என்றும் சமசமாஜக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

தேசிய பிரச்சினைக்கு ஒரேயொரு தீர்வென்றால் அது, சமசமாஜக் கட்சி தலைமையிலான இடது சாரிக் கட்சிகள் வரலாற்றில் சுட்டிக்காட்டியுள்ள தீர்வே.

தேசியப் பிரச்சினை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக்கட்சிகள் குழுவின் தலைமைப் பதவியை ஏற்று, பேராசிரியர் திஸ்ஸவிதாரண அனைத்து அரசியல் கட்சிகளுடன் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை அர்ப்பணித்து யோசனையொன்றைத் தயாரித்து முன்வைப்பதற்காக ஆற்றியிருந்த சேவை நாடறிந்ததொன்றே.

இவ்வாறான நிலையில் அரசு தரப்புக் கட்சிகள் அனைத்தையும் இணைத்துக் கொண்டு சமசமாஜக் கட்சியையும் முஸ்லிம் காங்கிரஸையும் புறக்கணித்திருப்பதானது நியாய தர்மம் அற்ற, அநீதியானது என்றும் அந்தக் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

அனுபவங்களை நிறையப் பெற்றுள்ள தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் பெயரை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு உள்வாங்கிக் கொள்ளுமாறு அக்கட்சி அரசிடம் கோரியுள்ளது. (ஓ-22)

**Spoken English**

ஆங்கிலம் பேசும் திறனில் ஆரம்பநிலையில் உள்ளவரா ?
சாதாரண, உயர்தர கல்வியை தமிழ் மொழியில் பயின்றவரா ?
வெளிநாட்டு உயர்கல்வி , வேலைவாய்ப்பிற்காக காத்திருப்பவரா ?
ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்தும் பேசுவதற்கு தயங்குபவரா ?

**இங்லிஷ்ல பேசலாம் ஈஸியா**
Speak Easyல் இன்றே இணையுங்கள்
புதிய பிரிவுகள் சனி மற்றும் ஞாயிறு ஆரம்பம்

Join
Speak Easy®
centre for better english
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
CSC - ASIAN COMPUTERS
T.P : 021-222 5677

கோண்டாவில் மேற்கு, கந்தர் வளவு
**ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயிலில்**
**(காளிகோயில்)**
**பஞ்சாங்க வேலைப்பாட்டுடன் பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான கூறுவிலை கோரல்**

| | |
|---|---|
| கோபுர உயரம் | - 43அடி |
| கோபுர அடித்தள அகலம் | - 18 அடி 4அங்குலம் |
| கோபுர அடித்தள நீளம் | - 10 அடி 7 அங்குலம் |
| கோபுர வாசல் அகலம் | - 07 அடி 9 அங்குலம் |
| கோபுர வாசல் உயரம் | - 12அடி 02 அங்குலம் |

1. மேற்படி அளவுத் திட்டத்திற்கமைவாக கோபுர கட்டுமானப் பணிக்குத் தேவையான அனைத்துப் பொருள்களின் தனித்தனி தொகைவிவரம்,விலை விவரம்.
2. கட்டுமானப் பணிக்கான மொத்தக்கூலி.
3. நிலமட்டம் வரை தளம் அமைப்பதற்கான ஒரு சதுர அடிக்கான கூலி விவரமும், பொருள்களின் விவரமும்.
4. தங்களால் அண்மையில் கட்டுமானம் செய்யப்பட்ட கோபுரத்தின் இட விவரம்.

மேற்படி விவரங்களுக்கமைவாக கூறுவிலை தயாரிக்கப்பட்டு 06.07.2013ஆம் திகதிக்கு முன்பாக
பரிபாலன சபை,
ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோயில் (காளிகோயில்)
புகையிரதநிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
என்னும் முகவரிக்கு கடிதமூலம் அனுப்பி வைக்கவும்.
**பரிபாலன சபையினர்.**

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம் அழையுங்கள்.
0779086737(Computer Repair)
GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.

**அறை வாடகைக்கு தேவை**

தொழில் புரியும் ஆண் ஒருவருக்கு யாழ் நகரில் அறை ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 021 720 1190

**கார் விற்பனை**

Toyota Corella 110 வகையான GB-xxxx இலக்கமுடைய வெள்ளை நிற நல்ல பாவனையில் உள்ள திருமண சேவைகளுக்கும் ஏற்ற கார் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0776158963

**வீடு விற்பனைக்கு உண்டு**

இராசவீதி ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த சந்திரபாலாவின் வீடு வளவு சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 888 6989
077 623 1509

**வீடு விற்பனைக்கு**

யாழ் நகர் கொட்டடியில் 3 பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 227 9219
(35748)(3.6.11)

**மாற்ற முடியாதது எதுவுமே இல்லை மாற்றம் தேவையானது.**
**எங்கள் மாற்றம் உங்களை வியக்க வைக்கும்**
**ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.**



(saneyaherbal@gmail.com)



சாந்த முகவரி:
முற்பதிவு அவசியம்: 0777351954

# தென்மராட்சியில் அதிகரிக்கும் நுளம்புப் பெருக்கம்

தென்மராட்சி, ஜூன் 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக உள்ளதாக பல பகுதிகளைச் சேர்ந்த மக்களால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் பிரதேசத்தில் மழை பெய்யாத நிலையில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளமை குறித்து பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் நீர்தேங்கியுள்ள இடங்கள் வறண்டு காணப்படும் இந்த வேளையில் மாரி காலங்களில் காணப்படுவது போல நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வீசும் கடும் காற்றால் தென்பகுதியிருந்து வட பகுதிக்கு வந்திருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டது. அல்லது கோழி முட்டை போன்று நுளம்பு முட்டையிலிருந்து வழமையான சுற்று வட்டயை விடுத்து நீங்கி நேரடியாக நுளம்புகள் உற்பத்தியாகின்றனவா எனவும் கருத்தில் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ள இக் கால கட்டத்தில் பிரதேசத்தில் நுளம்பு அதிகரிப்புக்கான காரணத்தினைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் மக்கள் வலியுறுத்தினர். (வ-9)

**IMMEDIATE VACANCY FOR ENGLISH TEACHERS**

Well - reputed educational institute is looking for full time and part time English teachers / lectures for our branches in Kilinochchi, Mullaitivu, Mannar and Vavuniya. All qualified applicants including women are encouraged to apply. Please submit your CV, citing qualifications and experience along with the names of two non related referees to the address given below within 7 days

No-347, Kasthuriyar Road,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத் துறையில் வட மாகாணம் மீது அரசு விசேட கவனம்

### வடமாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பெரும் முதலீடுகள் பயன்படுத்தப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் அரசால் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் வடமாகாணத்தில் விவசாயத்துறை மீது விசேட கவனிப்பு செலுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.
பாஷையூர் இறங்கு துறையின் திறப்பு விழா கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற போது அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:
வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் விவசாயம் பிரதான பங்கு வகிக்கிறது.
அந்த வகையில் அரசின் விசேட கவனிப்பில் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்ய பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
மீன்பிடித்துறை தொடர்பாக கடந்த காலங்களில் அந்நிய முதலீடுகள் ஊடாக வடமாகாணத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.
வடமாகாணத்தில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில் பெரிய முதலீடுகள் ஊடாக வட மாகாணத்தில் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
இவ்வாறு உருவாக்கப்படுகின்ற சொத்துக்கள் தனி மனிதனுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்தமாக குறித்த பிரதேச மக்களது தேவைக்காக அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.-என்றார். (வ-14)

## 'டைனமோ' இல்லாத சைக்கிள்களுக்கு சிவப்பு நிறத்தில் மின்னும் 'ஸ்ரிக்கர்'

### சுன்னாகத்தில் போக்குவரத்துப் பொலிஸார் அதிரடி



வலி.வடக்கு, ஜூன் 29
'டைனமோ' இல்லாது ஓட்டிச் செல்லப்படும் சைக்கிள்களுக்கு சிவப்பு நிறத்திலான 'லைற்' போன்று இரவில் ஒளிரக் கூடிய ஸ்ரிக்கர்கள் சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸாரால் நேற்று முன்தினம் நண்பகல் ஒட்டப்பட்டது.
சுன்னாகம் சந்திப் பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் வீதியில் ஓட்டிச் செல்லப்பட்ட சைக்கிள்களை மறித்து சோதனையிட்டு 'டைனமோ' இல்லாத சைக்கிள்களின் பின்புறத்தில் ஸ்ரிக்கர்கள் ஒட்டினர்.
சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸ்மந்தாவின் பணிப்புரைக்கு அமைவாக அந்தப் பகுதி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிவரா கருணரத்தினா தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
பாடசாலை மாணவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என அனைவரினதும் சைக்கிள்கள் சோதனையிடப்பட்டு 'டைனமோ' இல்லாத சைக்கிள்களுக்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. (வ-86)

# சுகாதாரப் பரிசோதகர்கள் சீருடை அணிவது கட்டாயம்

### மாநகர ஆணையாளர் கண்டனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சீருடை அணியாமல் கடமைக்குச் செல்வது மிகவும் கண்டிக்கத்தக்கது.
அவ்விதம் நடந்து கொண்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையின் ஜூன் மாதக் கூட்டம் நேற்று முன்தினம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.
சபை நடவடிக்கைகள் குறித்த தகவல் படத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள் கடை ஒன்றில் சீருடையின்றி பரிசோதனையில் ஈடுபட்டிருந்த நிலை காணப்பட்டது.
சீருடையின்றி அவர்கள் அனேக இடங்களில் பணியாற்றுகின்றனர். இதனால் பல தரப்பட்ட பிரச்சினைகள் ஏற்படக் கூடியதாக இருக்கும் என உறுப்பினர்களான விந்தன், கனகரத்தினம், ஆ.பரஞ்சோதி ஆகியோர் சுட்டிக்காட்டினர்.
அதனை அடுத்து ஆணையாளர் பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். (வ-7)





வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முதல் நாள் நிகழ்வாக நேற்று முன்தினம் விளையாட்டு தொடர்பான கண்காட்சிகள் இடம்பெற்றன. கண்காட்சியை மக்கள் வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் கே.சுரேந்திரன் திறந்து வைத்து அதனைப் பார்வையிடுகின்றார். (வ-5)

## வேலை தேடி வந்த இளைஞன்



யாழ்ப்பாணம், ஜூன் 29
இரு கால்களும் ஊனமுற்ற நிலையில் பிறந்து தற்போது 19 வயது இளைஞனாக இருக்கிறார் பி.தாரகன். இவர் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்தவர்.
இவர் தமது வீட்டாருக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. வேலை தேடி நேற்று தொழில் சந்தை நிகழ்வுக்கு வந்தார். தொழில்சந்தை நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.
தாரகன் தனது இரு முழங்கால்களாலேயே நடக்கிறார். அவ்வாறான நிலையிலும் நேர்மையாக ஒரு தொழில் செய்து வாழ்வதையே இலட்சியமாகக் கொண்டுள்ளார்.
அந்த இளைஞன், நேற்றைய நிகழ்வில் தொழில் நிறுவனங்களின் நேர்முகப் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்திருந்தார். அந்த நேர்முக பரீட்சையின் போது:-
''நான் வீட்டில் முடங்கிப் போய் இருக்க விரும்பவில்லை. எந்த வேலை கிடைத்தாலும் நேர்மையுடன் செய்யத் தயாராகவுள்ளேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எனது பணியைச் செய்வேன். அதற்காகவே இந்தத் தொழில் சந்தைக்கு வந்தேன்'' என்றார். (ஒ-17)

## நல்லூர் கந்தனின் உற்சவத்தை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படவேண்டிய ஒழுங்குகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். மாநகர முதல்வரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-7)

# கொழும்பிலிருந்து தனியார் பஸ்ஸில் வந்த யாழ்.பயணிகள் நெல்லியடியில் அந்தரிப்பு


### அங்கிருந்து வேறு பஸ் ஏறி வீடு சென்ற அவலம்

வடமராட்சி, ஜூன் 29
கொழும்பு யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்று கொழும்பிலிருந்து வந்த அச்சுவேலி, யாழ்ப்பாணம் பயணிகளை நெல்லியடி பஸ் நிலையத்தில் இறக்கி விட்டுச் சென்றுவிட்டது. அங்கு அந்தப் பயணிகள் பெரும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்கொண்டார்கள்.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு பயணிகளை ஏற்றி வந்த தனியார் பஸ் ஒன்று கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லாது நேரடியாக நெல்லியடியை வந்தடைந்தது.
நெல்லியடி பஸ்தரிப்பிடத்தில் தரித்து நின்றது அந்த பஸ். அச்சுவேலி தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான பகுதிகளுக்குச் செல்லும் பயணிகள் அங்கு இறக்கி விடப்பட்டனர். பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் உங்களது இடங்களுக்குச் செல்லலாம் என்று பஸ் பணியாளர்களால் 'அறிவுரை'யும் கூறப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் உங்களது இடங்களுக்குச் செல்லலாம் என்று பஸ் பணியாளர்களால் 'அறிவுரை'யும் கூறப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவர்கள் வந்த பஸ் பருத்தித்துறைப் பக்கமாக வெகு வேகமாகச் சென்று மறைந்தது. இறக்கி விடப்பட்ட பயணிகள் திகைத்துப் போய் நின்றனர்.
சில நிமிட நேரம் அங்கு வெறுப்புடன் காத்திருந்த பயணிகள் அசௌகரியங்களுக்கு மத்தியில் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் பயணத்தை தொடர்ந்தனர்.
யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றி வரும் தனியார் பஸ்கள் நேரடியாக யாழ்ப்பாணம் சென்று பயணிகளை இறக்கி விட்டு பின்னர் பருத்தித்துறை நோக்கி சேவையில் ஈடுபட்டு அனைத்து பயணிகளையும் இறக்கிச் செல்வது வழக்கமாகும். இந்த வழமையை குறித்த பஸ் மீறி பயணிகளை நெல்லியடி பஸ் நிலையத்தில் அந்தரிக்க விட்டு சென்றமை குறித்து பயணிகள் திட்டித் தீர்த்தவாறு வீடுபோய்ச் சேர்ந்தனர். (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தரகாண்ட் வெள்ள மீட்புப் பணிகளில் விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் பயணித்தபோது உயிரிழந்த இராணுவத்தினரின் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் உத்தரண்ட் முதலமைச்சர் விஜய் பகுணா, இந்திய இராணுவத் தளபதி விக்ரம் சிங் மற்றும் பலர் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

# கேரளாவில் கடும் மழை

## 22 பேர் சாவு; வீடுகள் கடும் சேதம்

திருவனந்தபுரம், ஜூன் 29
கேரளா மாநிலத்தில் பெய்து வரும் கடும் மழைக் காரணமாக இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஆயிரத்து 829 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இதுவரை 93 செ.மீ. மழை வீழ்ச்சி கேரளாவில் பதிவாகி உள்ளது என்றும் இது வழக்கமான சராசரி மழை வீழ்ச்சியைவிட மிகவும் அதிகமானது என்றும் திருவனந்தபுரம் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழையின் காரணமாகக் கேரளா முழுவதும் ஆயிரத்து 829 வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. அதிகபட்சமாக திருவனந்தபுரத்தில் 161 வீடுகள் இடிந்து விழுந்துள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

22 ஆண்டுகளுக்குப் பின்னர் கேரளாவில் தற்போது தான் இந்த அளவுக்கு கன மழை பெய்துள்ளது.

இதேவேளை, வட இந்தியாவில் ஏற்பட்ட கடுமையான மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1000 ஆக உயர்வடைந்துள்ளது. (ற)



# அ.தி.மு.கவில் இணைந்தார் இளம்வழுதி



சென்னை, ஜூன் 29
தி.மு.கவின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் பரிதி இளம்வழுதி நேற்று அ.தி.மு.கவில் இணைந்து கொண்டார்.

போயஸ்கார்டனுக்கு சென்று அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை சந்தித்த பரிதி இளம்வழுதி அ.தி.மு.க. உறுப்பினராக இணைந்து கொண்டார்.

'திமுகவில் அபிமன்யு' என்று வர்ணிக்கப்பட்டவர் பரிதி இளம் வழுதி. 2011ஆம் ஆண்டு ஸ்டாலினுடன் ஏற்பட்ட மோதலாலும் மனக்கசப்பினாலும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகினார்.

அதன்பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளாக கட்சியில் வேறு எந்த பொறுப்பும் வழங்கப்படவில்லை. இதனால் மன உளைச்சலில் இருந்த பரிதி, நேற்று தன்னை அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டுள்ளார்.

பரிதி இளம்வழுதி அ.தி.மு.கவில் இணைந்ததில் நாஞ்சில் சம்பத்தின் பங்கு முக்கியமானது என்று கூறப்படுகிறது. ராஜிவ் காந்தி மறைவுக்குப் பின் நடந்த தேர்தலில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், பரிதி இளம் வழுதியும் மட்டுமே வென்றிருந்தனர்.

இதேவேளை, பரிதி அ.தி.மு.கவில் இணைந்தமையால் பாதிப்பில்லை என்று தி.மு.க தெரிவித்துள்ளது.

மிகப் பெரிய இயக்கமான தி.மு.க. தனியொருவரின் கட்சி மாற்றத்தால் நிலை குலைந்து போய்விடாது என்று அந்தக் கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு அசமந்தம்

## தா.பாண்டியன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 29
இலங்கை அரசு 13ஆவது சட்டத்திருத்தத்தை உயிரற்றதாக மாற்றுவதைத் தடுக்க இந்திய மத்திய அரசு எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அந்தக் கட்சியின் பேரவைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறும் போது,

''இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இலங்கை அரசு 13ஆவது திருத்தச் சட்டத்தை உயிரிற்றதாக மாற்றும் முயற்சிகளைத் தடுப்பதற்கு இந்திய அரசு முயற்சிக்கவில்லை. மத்திய அரசின் இந்தப் போக்கு கண்டிக்கத்தக்கது.

மாநிலங்களவைத் தேர்தலில், காங்கிரஸின் ஆதரவை தி.மு.க. கோரியிருப்பதன் மூலம் மக்களவைத் தேர்தலின்போதும் அவர்கள் காங்கிரஸ் பக்கம் சாய்வார்கள் என்பது தெரிகின்றது. காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபடுவோம்'' என்று தெரிவித்தார். (ற)

# இறுதி நபரை மீட்கும்வரை இராணுவம் பணியாற்றும்

## இந்திய இராணுவத் தளபதி

பாட்னா, ஜூன் 29
உத்தர்கண்டில் கடைசி நபரை மீட்கும் வரை இந்திய இராணுவம் அங்கு பணியாற்றும் என்று இந்திய இராணுவ தளபதி விக்ரம் சிங் கூறியுள்ளார்.

உத்தர்கண்டில் மீட்புப் பணிகளை பார்வையிடச் சென்ற விக்ரம் சிங், உத்தர்கண்டில், வெள்ளத்தில் சிக்கிய அனைவரையும் மீட்கும் வரை இராணுவத்தினர் தொடர்ந்து பணியில் ஈடுபடுவார்கள் என்று உறுதி அளித்தார்.

மிகவும் மோசமான சூழ்நிலையில், பொதுமக்களின் உயிரை காப்பதை மட்டுமே குறிக்கோளாக வைத்து, எந்த உயரதிகாரியின் அனுமதியையும் பெற காத்திராமல் துரிதமாக செயல்படுமாறு விக்ரம் சிங் இராணுவத்தினருக்கு அறிவுறுத்தினார். (ற)

# வெற்றிக்குக் காரணம் அண்ணன் ஸ்டாலினே

## கனிமொழி உருக்கம்



சென்னை, ஜூன் 29
மக்களைவைத் தேர்தல் வெற்றி என்னைவிட என் அண்ணன் ஸ்டாலினுக்கு தான் உரித்தானது என்று கனிமொழி தெரிவித்துள்ளார்.

மக்களைவைத் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் கனிமொழி வெற்றிச் சான்றிதமுடன் தனது தந்தையும், கட்சி தலைவருமான கருணாநிதி மற்றும் அண்ணன் மு.க. ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார். அதன்போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

[illegible] உறுப்பினராகியுள்ளார். (ற)

# கலவரத்தில் 100 கோடி சேதம்; அதை பா.ம.கவே தரவேண்டும்

## தமிழக அரசு அதிரடி நடவடிக்கை

சென்னை, ஜூன் 29
வட மாவட்டங்களில் இடம் பெற்ற வன்முறைகளால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடாக, ரூபா 100 கோடியை பா.ம.கவிடம் இருந்து பெற்றுக்கொள்வது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து முதற்கட்ட விசாரணைகளுக்கு முன்னிலையாகுமாறு பா.ம.கவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற வன்னியர் இளைஞர் பெருவிழாவில் ஏற்பட்ட வன்முறைகளை, பொலிஸார் கையாண்ட விதம் குறித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரது கைதைக் கண்டித்து வட மாவட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 800க்கும் மேற்பட்ட அரச, தனியார் பஸ்கள் அடித்து நொருக்கப்பட்டன. 15க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. மூவர் உயிரிழந்தனர்.

அதையடுத்து வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் மீது தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. பா.ம.க.வைச் சேர்ந்த 96 பேர் குண்டர் சட்டத்திலும், 24 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்திலும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தால், இழப்புத் தொகையை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்தே வசூலிக்க வகை செய்யும், தமிழ்நாடு சொத்துக்கள் சட்டத்தின்படி, இழப்பீட்டுத் தொகையை, பா.ம.க.வினரிடமிருந்து பெறும் முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளது.

சேதவிவரங்களைக் கணக்கிடும் போது ரூபா 80 கோடி முதல் 100 கோடி ரூபாய் வரையான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தத் தொகையை பா.ம.கவினரிடமே வசூலிக்கும் அதிரடி நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது. இது தொடர்பான விசாரணைகளில் முன்னிலையாகுமாறு பா.ம.க. நிறுவநர் ராமதாஸ், இளைஞர் அணி செயலாளர் அன்புமணி, கட்சி தலைவர் கோ.க.மணி ஆகியோருக்கு வருவாய்த் துறை ஆணையர் அலுவலகம் ஊடாக தற்போது அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

அழைப்பாணை கிடைத்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ள பா.ம.கவினர், அதுகுறித்து சட்ட ரீதியாக ஆலோசித்து வருகின்றோம் என்று தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிருப்தியில் அமெரிக்கா

## ஸ்நோடன் விவகாரத்தில் சீனா, ரஷ்யா நாடுகள் மீது

நியூயோர்க், ஜுன் 29

''சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் செயலை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. இந்த விவகாரத்தில் அவர்கள் வேறு விதமாக செயல்பட்டிருக்க வேண்டும்'' – என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் சக்ஹெகல்.

எட்வேர்ட் ஸ்நோடன் விவகாரம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எட்வேர்ட் ஸ்நோடன் விவகாரத்தில் சீனா மற்றும் ரஷ்யா மீது அமெரிக்கா கடும் அதிருப்தியில் உள்ளது.

அமெரிக்க உளவு அமைப்பின் முன்னாள் பணியாளரான ஸ்நோடன், அமெரிக்க அரசின் இரகசிய கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களை பகிரங்கப்படுத்தியிருந்தார். அதையடுத்து ஸ்நோடன் மீது வழக்குப் பதிவு செய்துள்ள அமெரிக்க அரசு, அவரைத் தேடப்படுபவராக அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய எட்வேர்ட் ஸ்நோடன் ஹொங்கொங்கில் இருந்து வெளியேறி தற்போது ரஷ்யாவில் தங்கியுள்ளார். அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு ரஷ்யாவிடம் அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இந்தநிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் சக்ஹெகல், ''ஸ்நோடன் அமெரிக்காவின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை வெளியிட்டுள்ளார். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின்படி இது முக்கியமான குற்றமாகும். அவரை ஒப்படைக்குமாறு முதலில் சீன அரசைத் தொடர்புகொண்டோம். எனினும் அதற்கு சீனா உடன்படவில்லை. தற்போது ரஷ்யாவில் தங்கியிருக்கும் ஸ்நோடன், அங்கிருந்து ஈக்குவடோர் நாட்டுக்குச் செல்லவிருக்கிறார் என்று தெரியவருகின்றது. ஸ்நோடனனை அமெரிக்காவிடம் ஒப்படைக்குமாறு ரஷ்யாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால் தங்கள் நாட்டில் அவர் மீது எந்தவிதமான குற்றப் பதிவுகளும் இல்லை எனக் கூறி ரஷ்யாவும் மறுத்துள்ளது.

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் இவ்வாறான செயற்பாட்டை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. இந்த விவகாரத்தில் அவர்கள் வேறு விதமாக செயல்பட்டிருக்க வேண்டும் என்றே அமெரிக்கா கருதுகின்றது:'' என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)



''சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் இவ்வாறான செயற்பாட்டை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. இந்த விவகாரத்தில் அவர்கள் வேறு விதமாக செயல்பட்டிருக்க வேண்டும்''

## மொங்கோலிய ஜனாதிபதியாக மீண்டும் எல்பெக்டோஜ் தெரிவு

உல்லன்பதோர், ஜுன் 29

மொங்கோலியாவின் ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் சகியா எல்பெக்டோஜ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



ஜனாதிபதித் தேர்தலில் 50.2 வீத வாக்குகளைப் பெற்ற அவர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் நீடிக்கவுள்ளார்.

சகியாவை எதிர்த்துப் போட்டியிட்டவர்களால் குறிப்பிடத்தக்க அளவு வாக்குகளைக் கூடப் பெறமுடியவில்லை.

மொங்கோலியாவில் அதிகளவான வெளிநாட்டு முதலீடுகளை உள்வாங்கி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் சகியாவின் பங்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது.

கடந்த வருடத்தில் மொங்கோலியாவின் பொருளாதாரம் 12 வீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.(ற)

# அனுமதி வேண்டும்

## தரவுகளை பகிரங்கப்படுத்த மைக்ரோசொப்ட் நீதிமன்றில் மனு

நியூயோர்க், ஜுன் 29

தம்மிடம் அமெரிக்க உளவு அமைப்பால் கேட்கப்பட்ட விவரங்களை பங்கிரங்கமாக வெளியிடுவதற்கு அனுமதி கோரி மைக்ரோசொப்ட் நிறுவனம் சிறப்பு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

பிரபல்யம் பெற்ற இணையத் தளங்களான கூகுள், பேஸ்புக் மற்றும் மைக்ரோசெப்ட் போன்ற நிறுவனங்களில் உள்ள தனிநபர் விவரங்களை அமெரிக்க உளவு அமைப்பான என்.எஸ்.ஏ. இரகசியமாக குறித்த நிறுவணங்களிடம் இருந்து பெற்று வந்தது. எனினும் அமெரிக்க உளவுத்துறையின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடன் அதுகுறித்த விவரங்களை பகிரங்கப்படுத்தியதை அடுத்து இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அதையடுத்து குறித்த இணையத்தள நிறுவனங்கள் மீதான வாடிக்கையாளர் நம்பிக்கை குறைவடைந்துள்ள நிலையில், தம்மால் என்.எஸ்.ஏ. அமைப்புக்கு வழங்கப்பட்ட தகவல்களை பங்கிரங்கப்படுத்துவதற்கு அனுமதி வேண்டும் என்று குறித்த இணையத்தள நிறுவனங்கள் கோரிக்கை விடுத்திருந்தன.

தம்மிடம் தரவுகளைக் கோரி உளவுத்துறையால் அளிக்கப்பட்ட உத்தரவுகள் குறித்த விவரங்களையும், எவரது தகவல்கள் அந்த அமைப்பால் கண்காணிக்கப்பட்டன என்ற விவரத்தையும் வெளியிட அனுமதியளிக்க வேண்டும் என்று சிறப்பு நீதிமன்றத்தில் கூகுள் நிறுவனம் கடந்த 19ஆம் திகதி மனுத்தாக்கல் செய்திருந்தது. தற்போது அதே கோரிக்கையை வலியுறுத்தி மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தரப்பிலும் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அமெரிக்காவின் வெளிநாடு புலனாய்வு கண்காணிப்புச் சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இரகசியமாக கண்காணித்து திரட்டப்படும் தகவல்கள் குறித்த விவகாரங்களை விசாரிக்கும் பணியை இந்த நீதிமன்றம் மேற்கொள்கிறது. (ற)

## மன்னிப்பு கோரினார் ஆஸி. அமைச்சர்


மெல்போர்ன், ஜுன் 29

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உயிரிழந்து விட்டார் என்று தவறான தகவல் அளித்தமைக்காக ஆஸ்திரேலிய அமைச்சர் கேரி கிரே மன்னிப்புக் கோரியுள்ளார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்ட வீரரும், தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலாவின் உடல் நிலை தற்போது மோசமடைந்து வருகின்றது.

இந்தநிலையில் அவர் உயிரிழந்து விட்டதாக, 'டுவீட்டர்' சமூக வலைத் தளத்தில் வதந்திகள் பரவின.

அதையடுத்து ஆஸ்திரேலிய அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் கிரே, மண்டேலா உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தார். எனினும் பின்னர் 'டுவீட்டர்' தகவல்கள் வதந்தி என்பதை அறிந்த கிரே, ஆஸ்திரேலியாவில் உள்ள தென்னாபிரிக்க தூதரக அதிகாரியிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். (ற)



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை மிக மோசமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதையடுத்து அவர் உடல்நலம் பெற வேண்டி தென்னாபிரிக்காவின் பல்வேறு இடங்களில் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. மண்டேலாவுக்காகப் பிரார்த்தனையில் ஈடுபடும் சிறுவர்கள்.

## ஜப்பானில் அணு உலைக்கு எதிர்ப்பு

டோக்கியோ, ஜுன் 29

ஜப்பானின் ட்காஹாமா பகுதியில் உள்ள அணு உலையை செயல்படுத்த எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு அமைப்பினர் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தினர்.

புகுஷிமா அணு உலை விபத்தைத் தொடர்ந்து அணு உலைகளுக்கு ஜப்பானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எனினும், அணு உலைகளை செயற்படுத்துவது தொடர்பில் அரசு தீவிரமாகவுள்ளது. (ற)

# வெள்ளை மாளிகையில் சுவரேறிக் குதித்த பெண்

## தற்போது பொலிஸ் விசாரணையில்

வோஷிங்டன், ஜுன் 29

அமெரிக்க ஜனாதிபதி மாளிகையின் பலத்த பாதுகாப்பையும் மீறி உள்ளே புகுந்த பெண்ணால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த பெண் வெள்ளை மாளிகையின் மதில் சுவரை ஏறிக் குதித்து மாளிகைக்குள் நுழைந்துள்ளார். அதையடுத்து பாதுகாப்புப் பணியில் இருந்த சிறப்புப் படையினர் அந்தப் பெண்ணைச் சுற்றிவளைத்துப் பிடித்து கொலம்பியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச்சம்பவத்தால் வெள்ளை மாளிகை சிறிது நேரம் பரபரப்புக்குள்ளாகியது.


''வெள்ளை மாளிகை அருகே பெண்கள் உட்பட 17 பேர் போராட்டம் நடத்தினர். தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க கோரியே அவர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களில் ஒரு பெண் வெள்ளை மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

அந்த நேரத்தில் அதிபர் ஒபாமா வெள்ளை மாளிகையில் இல்லை. அவரது பெயர் டயானி வில்சன் என்பதும் சிறையில் இருந்தவர் என்பதும் தெரிய வந்தது. கைதான பெண் தீவிரவாத அமைப்புடன் தொடர்பு உடையவரா என்று விசாரணை நடக்கிறது. விசாரணைகளின் பின்னரே அது குறித்துக் கூறமுடியும்'' என்று அமெரிக்க புலனாய்வு பிரிவு செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ற)

# 'புத்த பயங்கரவாதத்தின் முகம்' 'டைம்' சஞ்சிகைக்குத் தடை

ரங்கூன், ஜுன் 29

மியன்மாரில் இலட்சக்கணக்கான முஸ்லிம்களின் படுகொலையுடன் தொடர்புடையது என்று கூறப்படும் புத்த பிக்குகள் அமைப்பு ஒன்றின் தலைவரான விராது என்ற பிக்கு தொடர்பாக கட்டுரை வெளிவந்த 'டைம்' சஞ்சிகையை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளது.





மியன்மாரில் அரை நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர் அண்மையில்தான் தனியார் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் 'டைம்' பத்திரிகையின் அட்டைப் படத்தில் குறித்த பிக்குவின் படத்துடன் ''புத்தமத பயங்கரவாதத்தின் முகம்'' என்று குறிப்பிட்டு கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு விராது தலைமை வகிப்பவர் என்பதுடன், அவர் தம்மை மியன்மாரின் பின்லேடன் என்று அழைத்துக் கொள்கின்றார் என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, விராதுவுக்கு மியன்மாரின் ஆளும், எதிர்க் கட்சிகள் ஆதரவு வழங்குகின்றன. அதன் பின்னணியிலேயே 'டைம்' சஞ்சிகையை மியான்மர் அரசு தடை செய்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கைக்குப் பொது அமைப்புகளிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். வேம்படி மகளி

# 175 ஆம் ஆண்டு சிற



## Earned Worldwide Recognition

It is really the Lords grace that Vembadi Girls' High School, Jaffna intend to celebrate 175th anniversary which is blended with the most Illustrious Patriot saint Swami Vivekananda's 150th Birthday celebration throughout the world with various programme this year. Swami Vivekananda always had a very bright vision for women in his mind.

Vembadi Girls' High School Principal, staff and students have celebrated Swami Vivekananda's birthday for more than two decade as the first function at the beginning of the new academic year which no school in the island has so far not at all thought about it or paid any attention. Swami Vivekananda visited Jaffna spending five and half day's sleepless nights. Swamiji in his address in Jaffna, Which lasted hundred minutes proclaimed that spiritual gift (dhana) is the foremost gift one can make. We are really happy and glad this institution has earned a worldwide recognition. We pray to the Lord that the School will produce eminent women in the years to come with all round development, physical, moral, mental, intellectual and spiritual, which is lacking most markedly in all other girls' college in the Island. This was Swami Vivekananda lively dream.

Success in all enderowesd

Swami Vivekananda
Swami Chidrupananda. Sri Ramakrishna Sarada Sevashram, Point - Pedro



## Wishes for future Endeavours

It is great pleasure that I extend my warm felicitation on the 175th anniversary of Vembadi Girls' High school,Jaffna,established with the noble concept of educating the girls of the Northern Province in 1838.

Throughout the history,the school has achieved the expectations of its founders.Vembadi Girls' High School has become the leading school in Jaffna with a student population of 2150 and 99 teachers. The school has excelled in extra-curricular activities as well. I take this opportunity to extend my heartiest wishes to the Principal,teachers and students in all their future endeavours.

S.M.Gotabaya Jeyarathne Secretary, Ministry of Education



## கல்வி தொட்டனைத்தூறும் மணற்கேணி

யாழ்ப்பாண தீபகற்பத்திலே பெண்பிள்ளைகளின் கல்விக்கெனத் தனித்துவம்மிக்க பாடசாலையான யா/வேம்படி மகளிர் கல்லூரி தனது கல்விச்சேவையை வழங்கி 175 ஆவது ஆண்டில் தடம் பதிப்பதையிட்டு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

*தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத்தூறும் அறிவு*

இக் கல்லூரி ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஊன்றி பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது.யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பிரபல்யம் பெற்ற பெண்கள் கல்லூரியாக ஆளுமை நிறைந்த அதிபர்களின் வழிநடத்தலினால் இன்று பல துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. இக் கல்லூரிக் குடும்பம் மேன்மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து ஒழுக்கமும் சிந்தனையும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க இறையாசியை வேண்டி 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சத்தியசீலன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.



## Preserves Dignity

Being one of the oldest Methodist mission schools it has lofty ideas and sound principles in bringing up the children.After fulfilling various needs and preparatory activities to establish the school in the 19th century,it grew rapidly in the first half of the 20th century.Because of government policy Vembadi Girls' High School too was absorbed as one of the state schools.But it never failed to carry on its traditions.It preserves its dignity as one of the leading National schools of Sri Lanka.It has been showing its colours in core curricular activities and co-curricular activities.I take this opportunity to send my cordial greetings to Vembadi Girls' High School on the occasion of its jubilee celebration.

V.Selvarajah Provincial Director of Education, Northern Province



## Felicitation Message-175th Anniversary

May God bless Vembadi Girls' High School with many more years of service to the girls of Jaffna.May the Principal and Staff be guided by the Almighty in their service and make Vembadi reach still greater standards. Let them remember that "Service to man is service to God".

In years to come when the girls become older, may they be outstanding citizens of the country particularly Jaffna. **Miss.P.Arumugam Former Principal**



## கல்லூரி வரலாறு

நீண்ட நெடிய 175 ஆண்டு கால கல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை இலங்கைத் தீவில் தனித்துவமானதும் பல கல்விமான்களை, பல்துறை விற்பன்னர்களை உருவாக்கி சமூகத்திற்கு உன்னத சேவையாற்றி வருகின்ற மகளிர் தேசிய பாடசாலை ஆகும். 1813 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருந்த மெதடிஸ்த திருச்சபையினரால் கல்விச் சேவையை வழங்குவதற்காக இலங்கையில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலொன்றே வெஸ்லியன் மத்திய பாடசாலை. இப்பாடசாலை அமைந்திருந்த வளாகத்திலேயே தற்போதைய வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை இயங்குகின்றது. எனினும் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த மெதடிஸ்த திருச்சபை பெண்கள் மாத்திரம் கல்வி பயில்வதற்காக பெண் பாடசாலை ஒன்றினை உருவாக்கத் தீர்மானித்தது. இதன் காரணமாக ஆண்களுக்குரிய பாடசாலை தற்போது யாழ். மத்திய கல்லூரி இயங்குகின்ற வளாகத்திற்கு இடம்மாற்றப்பட்ட அதேசமயம் 6 பெண்பிள்ளைகளுடன் ஓர் விடுதிப் பாடசாலையாக ஆரம் பிக்கப்பட்டது. வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையினை நிறுவி அதனது வெற்றிகளிற்கெல்லாம் வித்திட்டவர் வணக்கத்திற்குரிய பீற்றர் பேர்சிவல் அடிகளார் ஆவர்.பாடசாலையின் தற்போதைய வளர்ச்சிக்கு காலத் திற்கு காலம் பல அதிபர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் மிக முக்கியமான காரணமாக கருதப்படுகின்றன. திருமதி.பீற்றர் பேர்சிவல் அவர்கள் இப் பாடசாலையின் முதலாவது அதிபராகச் சிறப்பாகக் கடமையாற்றி ஒரு சிறந்த முன்னுதாரணத்தினை பாடசாலை சமூகத்திற்கு வழங்கியிருந்தார்.1961 ஆம் ஆண்டு அரசாங்கம் இப்பாடசாலையினை பொறுப்பேற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.1984 ஆம் ஆண்டு வேம்படி வடமாகாணத்தின் முதலாவது பெண்கள் தேசிய பாடசாலையாக பிரகடனப்படுத்தப்பட்டு கௌரவம் பெற்றது. இவ்வாறு நீண்ட கல்விப் பாரம்பரியத்தினை கொண்ட இப்பாடசாலை இன்றைய நிறுவுனர் தினத்திலே வண.பீற்றர் பேர்சிவல் அவர்களை நன்றியுடன் நினைவுகூரும் அதேவேளை சமூகத்திற்கு சிறந்த சேவையினை தொடர்ந்தும் ஆற்ற இறையாசியை வேண்டி நிற்கின்றது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை PHD (Durham)
(முன்னாள் துணை வேந்தர்/ உறுப்பினர் - S.D.S. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



## கல்விப் பாரம்பரியம் சிறப்புற வாழ்த்துக்கள்

கற்பித்தலைக் கசடறக் கற்பித்துக் கற்றவழி நிற்கும் நல்லதொரு நாளைய சந்ததியை உருவாக்கும் உன்னத கைங்கரியத்தை மேற்கொள்ளும் பாடசாலைகளின் பணிக்கு நிகர் எதுவுமில்லை. இத்தகைய மேலான சேவையில் 175 ஆண்டுகளை நிறைவு செய்யும் யா/வேம்படி மகளிர் கல்லூரியின் வரலாறு விழுமியதாகும்.

யாழ். நகரில் கல்வி ஒளி பரப்பிவரும் பிரபல பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இக் கல்லூரி சீரும் திருவும் பொலிந்து யாழ் மண்ணில் தலைநிமிர்ந்து மேன்மேலும் தனது இலக்குகளையடைந்து,தனது தரமான கல்விப் பணியால் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்குச் சீரிய வழியினைக் காட்டும் கலைக்கூடமாகத் தொடர்ந்தும் விளங்க எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.



## தமிழ் பெண்களின் விருட்சம்

வேம்படி மகளிர் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வாழ்த்துச்செய்தியொன்றினை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வேம்படி மகளிர் கல்லூரியினை ஸ்தாபித்தவர்கள் அதன் வெற்றிக்காக உழைத்தவர்கள் இன்றுவரை அதனை முன்னேற்றகரமான கல்வி நிறுவனமாக வழிநடத்திக்கொண்டிருக்கின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளும் வழிகாட்டலும் என்றும் கிடைக்கவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன். அதேபோல இந்தக் கல்வி நிறுவனத்தில் இணைந்து கல்வி கற்கின்ற அனைத்து மாணவிகளும் சமூகத்தில் நற்பிரஜைகளாகத் திகழவேண்டும் என்றும் இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

அஷ். ஷெய்க் அஸ்மின் அய்யூப் (நளீமி), இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி ஜித்தா
இலங்கைக்கான மாணவர் நலன்சார் பிரதிநிதி.



## ஓர் தனித்துவம் வாய்ந்த கல்லூரி

வேம்படி மகளிர் கல்லூரியின் 175 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கண்டு அகம் மகிழ்ந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த நீண்டகால வளர்ச்சியானது குடாநாட்டு மக்களின் கல்வி அறிவுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளதை நாம் அறிவோம்.

தன்னலமற்ற சேவையாலும் அயராத உழைப்பினாலும் அர்ப்பணிப்புள்ள சிந்தனையுடனும் இக்கல்லூரியில் நிறை சேவையாற்றிய கல்லூரி நிறுவுனர்களான மெதடிஸ்த திருச்சபையினரையும் இக்கல்லூரியுடன் தொடர்புகொண்டு அதன் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய சகலரையும் இன்றைய நன்னாளில் நன்றியுடன் நினைவுகூருவது மிகவும் பொருத்தமாகும்.

இக்கல்லூரி மேலும் பல நூற்றாண்டுகள் மிளிர்ந்து சீரும் சிறப்பும் பெற்று வாழ எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செல்வி.இ.இராஜரட்ணம், முன்னாள் அதிபர்.



Girls' School
Most of the p
ment in 1960.
Mention
education is
examinations
for their hard



It is my ho
cause of femal



இந்நன்னாளி
கல்வி பயிலு
சேவையாற்ற
மகிழ்ச்சியுட
வணங்குகின்



precious and
I assure
"Dare to Do

வேம்படி பெண்கள் உயர்தர கல்லூரியின் 175வது ஆண்டு விழாவிற்கு எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
SPECIAL OFFER
London Metropolitan College
புதியபிரிவுகள் ஆரம்பம்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
DAYS | TIME | DURATION
Mon - Thu | 1.5 Months
Mon/ Wed/ Fri | 1.5 Months
Sat/Sun | 2 Months
Sunday Only | 2 Months
INTENSIVE COMMUNICATION PROGRAM
DIPLOMA IN ENGLISH
197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230, 0217538395
Web: www.lmcjaffna.edu.lk

ஆச்சி பூட் சென்டர்
AACHE FOOD CENTRE
தாகம் தீர்ப்பதற்கு உங்கள் வீடு தேடிவர எப்பொழுதும் தயாராக இருக்கிறது.
பிறிமியர் வன் குடிநீர்
Natural Choice Simply smart
சமையற் கலையில் நிபுணத்துவம் பெற்றவர்களால் யாழ் முறைப்படி இன்றில் இருந்து
சைவம் மற்றும் அசைவம்
வீட்டுக்கு வீடு இலவச விநியோகம்
இல.117, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2092, 077 329 4341

175 ஆண்டுகளாக எங்கள் சமூகத்தை ஆற்றுப்படுத்தும் வேம்படி மாதாவே உன் விருதுகளின் சாதனைகளால் வியந்து நிற்கின்றோம்
மென்பனி தூவும் கனடா தேசத்தில் மாலைநேர உலாவரும் உங்கள் கனவு நனவாக சட்டரீதியான ஆலோசனை
நியூசிலாந்தில் கல்வி கற்றால் இரண்டு வருடத்தில் நிரந்தரக் குடியுரிமை பெறலாம்.
நிரந்தரக் குடியுரிமை கிடைத்தால் ஆஸ்திரேலியா போகலாம்.
எந்த நாட்டிற்கும் எண்ணம்போல போக சட்ட ஆலோசனை
திசைகாட்டி(பிறைவேற்) லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி,
021 221 9016

★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணை
175 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையினை வாழ்த்துகின்றோம்
கிருபா லேணர்ஸ்
தற்போது இரவு நேரப் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 077 722 5292

V.K. RAJARATNAM
2c,Stanly Road,Jaffna.
T.Phone: 222 2056
Accredited Dealers for:
Sony-T.V.S.,V.C.D,DVD,Radios,Cassettes,
Electricals&Electronic Items

மைதிலி நகை மாடம்
தங்கநகை வியாபாரி
89V, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே:
021 222 7902

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளிர் உயர்தர பாடசாலையின்





# றப்பு மலர் - 29.06.2013

## MESSAGE OF FELICITATION FROM HON. GOVERNOR, NORTHERN PROVINCE



I am extremely happy to send a message felicitating the Vembadi Girls' High School on its 175th Anniversary.

The Vembadi Girls' High School was founded in 1838 by the British Methodist Missionary and is said to be one of the oldest School in Sri Lanka. The Jaffna Wesleyan English School was founded in 1817 with Rev. Lynch as Principal. Although the school was a Boys' School there were a few girls on roll as well. The School was renamed as Jaffna Central School in 1834 by the Principal Rev. Dr. Peter Percival. In the same year a separate irls' School was established. This Girls' School was then renamed as Vembadi Girls' High School in 1897. ost of the private schools in Ceylon including Vembadi Girls' High School were taken over by Govern-ent in 1960, and in 1984 Vembadi Girls' High School became a National School.

Mention has to be made that the Vembadi Girls' High School has always been in the forefront where lucation is concerned, producing good results in the G.C.E. O/L examinations as well as the G.C.E. A/L aminations. My congratulations to the Principal, Staff, Students, Parents and well-wishers of this School r their hard work and contribution to the Society and the Nation.

GA Chandrasiri Governor Northern Province

## Wishes for Academic Excellence



I feel very happy and privileged to send this message on the eve of the 175th anniversary celebrations of J/Vembadi Girls' High School.

This premier national school in the Northern Province was founded in 1838 with the primary objective of providing access to education to the girls in the Jaffna society.

Vembadi Girls' have always maintained a very high degree of academic excellence.

I congratulate the Principal and the 99 strong tutorial staff for taking responsibility for the education of over 2000 female students and equipping them with the necessary knowledge, skills and attitudes to face the challenges of the world of work and life in the 21st century.

It is my hope and prayer that J/Vembadi Girls' High School goes from strength to strength in serving the use of female education in Sri Lanka.

Mr.S.Uthayakumar Zonal Director of Education, Jaffna.

## மன்னு புகழ்பரவ வாழி நீடூழி



எமது அன்னையாம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இன்று தனது 175 ஆவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ்வதற்குக் கிடைத்த அளப்பரிய சந்தர்ப்பத்திற் காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகின்றேன்.

இன்று இப்பாடசாலை உலகின் பல்வேறு இடங்களிலும் சிறந்த சேவையாற்றும் வைத்தியர் கள், பொறியிலாளர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், கணக்காளர்கள் எனப் பல்வேறு பதவிகளில் சிறந்த பணியை ஆற்றும் தன் மாணவிகளைக் கண்டு புளகாங்கிதம் அடைகின்றது என்றால் மிகை யாகாது.

எமது அன்னையாம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை 175 ஆண்டுகள் நிறைவு செய்யும் ந்நன்னாளில் உலகில் சூரிய, சந்திரன் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் வரை தொடர்ந்தும் தன் புகழ் பரப்பி, தன்னகத்தே ல்வி பயிலும் மாணவிகள் தம் வாழ்வில் பிரகாசிக்கவும், இதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் சவையாற்ற வேண்டும் என இறைவனை வேண்டிப் பிரார்த்திப்பதில் கல்லூரியின் புதல்வியாக நின்று மட்டில்லாத கிழ்ச்சியுடனும் நன்றிப் பெருக்குடனும் மன்னு புகழ் பரவி நீடூழி வாழி வாழி என சிரம் தாழ்த்தி வாழ்த்தி ணங்குகின்றேன்.

திருமதி.வேணுகா சண்முகரத்தினம், அதிபர்.

## Institution for Education as well as culture



It is with great pride and pleasure that I send this message of felicitation to my Alma Mater on her 175th birth day as the President of the OGA, Jaffna. Our dear old lady has successfully completed her stanch service for 175 years and I am sure that her services will continue for years to come.

Our Alma Mater has produced thousands of alumni who are holding respectable and responsible positions in many sectors all over the globe and doing well in their life. Time is precious and it's time for us to work together.

I assure that our Association is there to uplift our Great Lady and we will ever play a leading role and "Dare to Do Right".

I wish her all success in future.

Mrs S. Anandakumarasamy, President, OGA, Jaffna.

## Wishes to face the Challenges of the 3rd world



The Methodist Church Sri Lanka is proud to be associated with the 175th anniversary celebration of the school which was founded by Rev. Peter Percival, whose commitment to the poor and downtrodden in society enabled the church to meet this challenge to uplift the community in and round the area. we always look back and thank those who toiled to start and run this school at the initial stages. This recognition and expression of gratefulness is a value that is embedded in our tradition and culture. This no doubt will make the children to respect and be grateful to their parents and elders as well. Hence we see this celebration as an event where we cherish the noble values of imparting knowledge, wisdom and human values which is the basis of our ancient traditions, culture and the religious values that enrich our nation.

As we celebrate with the present principal, staff, children and the educational officials associated with the school, we wish them well and pray God's Blessings on all who toil to improve the school. We look forward for greater association with this beautiful school.

Rev. Dr. A. W. Jebanesan, President, Methodist Church, Sri Lanka

## ஆசிச்செய்தி



யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தனது 175ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடு வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1838 ஆம் ஆண்டு பெண்கல்விக்கு எதிர்ப்பு இருந்த சூழலில் வண. பேர்சிவல் அடிகளாரால் ஐந்து மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது இப்பாடசாலை. பாடசாலை எதிர்நோக் கிய சவால்களையும் ஏற்பட்ட அழிவுகளையும் பாடசாலை சமூகம் தைரிய மாக எதிர்கொண்டதால் இன்று இப் பாடசாலை அகில இலங்கையிலேயே தமிழ் பாடசாலைகளில் முதல் தர பாடசாலையாக மிளிர்கின்ற மையைப் பாராட்டுவதோடு, பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெறும் 175ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறவும் எல்லாம் வல்ல இறையாசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி.க.பொன்னம்பலம், முன்னாள் அதிபர்.

## விழாக்குழுத் தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ். மண்ணில் நனி சிறந்து முதன்மை பெற்று விளங்கும் கல்விக் கூடங்களின் சிகரமாய் விளங்கும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரித்தாய் இன்று தன் 175ஆம் அகவையில் பொலிவுற்றுத் திகழ்கின்றாள். எமது மண்ணின் கல்விக் கட்டுமானத்தில் அரும்பெரும் பணியாற்றியவர்கள் மற்றும் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பலர் எம் கல்லூரியின் வாரிசுகள் என்றால் அது மிகையாகாது. எம் கல்விச் சொத் தைக் கருகாமல் பல இடங்களிலும் காத்து வலிவந்த வேளைகளிலும் சோதனைகளைச் சாதனைகளாக்கி அறிவார்ந்த மாணவ சமூகத்தை இங்கு பிரசவித்துக் கொண்டிருக்கும் எமதன்னை தனக்கென சிறந்த தனித்துவமான வரலாற்றையும் சாதனைப் பட்டியலையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றாள்.

எமது கல்லூரி என்றும் இன்று போல் புகழ்பெற்று மணம் பரப்ப அதன் பெருமைசேர் வாரிசுகள் நாமென்று மார்தட்டிக் கொள்ள எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. (திருமதி.) சிவமதி சிவச்சந்திரன், 175 ஆவது விழாக்குழுத் தலைவர்.

## அகமகிழ்கின்றேன்



யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 175ஆவது ஆண்டு நிறைவையிட்டு அகமகிழ்கிறேன்.

இக் கல்லூரி பெண் சமுதாயத்தின் கல்வி அறிவை மிளிரச் செய்து பல்வேறு துறைகளிலும் தம் புலமைகளை வெளிப்படுத்தி சாதனைகளை நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக் காலகட்டத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் நான் இக் கல்லூரியில் பணியாற்றிய பணியாற்றுகின்ற அதிபர் ஆசிரியர்கள் கல்வி கற்ற, கற்கின்றமாணவர்களை பாராட்டு கின்றேன். இன்னும் இக்கல்லூரி வளங்கள் பல பெற்று இலங்க இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

திரு.எஸ்.குகதாஸ், பாடசாலை அபிவிருத்தி, சங்க செயலாளர்.

## மங்காப் புகழுடன் நிற்க



எமது பாடசாலை 175 ஆவது அகவையை பூர்த்தி செய்வதனையிட்டு ஆசிரியர்களாகிய நாம் பெரு மைப்படுகிறோம். 1838 இல் இருந்து இன்று வரை பல சாதனைகளுக்கு சொந்தகாரர்களாகிய மகளிரை உலகளாவியரீதியில் பரந்து வாழ உருவாக்கியவள் எமது வேம்படி அன்னை. இன்றும் பண்பாடு கலாசாரங்களைப் பேணி, பாட, இணைப்பாடவிதானசெயற்பாடுகளில் மங்காப் புகழுடன் ஓங்கி நிற்பது கண்டு மகிழ்கிறோம். இன்று போல் என்றென்றும் தன்னிகர் குறையா தல்லை நிமிர் கழகமாய் மிளிர எமது உளமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

திருமதி.சாந்தா வீரசிங்கம், தலைவர், ஆசிரியர் கழகம்.

## தன்னலம் கருதா கழகமே வாழ்க!



175ஆவது அகவையை நிறைவு செய்யும் எம் வேம்படி அன்னையை வாழ்த்துவது எமக்கு கிடைத்த பாக்கியம். யாழ் மகளிரின் கல்விப்பயணம் நூற்றாண்டைக் கடந்த சாதனையாய்த் தொடர்கிறது. உன்னதமான இக் கல்லூரியில் கல்வி கற்க கிடைத்த சந்தர்ப்பத்தினை எண்ணி தினம் தினம் மகிழ்கின்றோம். ஆண்டுகள் பல ஆனாலும் எமது அன்னையின் சீர் இளமையும் தனிப்புகழும் மங்காது பிரகாசிக்கின்றது. தனக்கென ஒரு கல்வி, கலை, பண்பாட்டு, பாரம்பரியத்தை கொண்ட எம் பாடசாலை என்றும் எம் சகோதரிகளின் நலனுக்காய் தன் பங்களிப்பை நல்கவும் நம் அன்னையை மறவா நன்றி நெறியில் நிற்கவும் இறைவன் ஆசிர்வதிக்க வேண்டுகின்றோம். வண்மையிலும் மதி நுண்மையிலும் தன்னலம் கருதா கழகமே வாழ்க! உயர்க!

செல்வி சாரங்கா [illegible] சிரேஷ்ட மாணவத்தலைவி யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

ணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★

AM
ffna.
56
ssettes,

பூபாலசிங்கம்
புத்தகசாலை
No.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:
021 222 6693

SINGER
SINGER PLUS
No. 01, Stanly Road,
Jaffna.
e-mail: jaffna@singersl.com
TP: 021 222 5408, 077 391 0445

குமார்
பேக் ஹவுஸ்

நதியா நகைமாளிகை
இல.02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 3479
கிளை. கௌசன் நகைமாளிகை
இல. 129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Sunjeys Foodland and Guest House
021 221 7070
Sunjeys Multi Marketing Center
021 510 6445
Sunjeys Tourism 077 747 4111
713, Hospital Road, Jaffna. 021 221 7070

இடநெருக்கடியைத் தவிர்க்க 30.06.2013 இற்கு முன் பதிவு செய்க
SAAMSON English
279. ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 621 4567

வாணி ரெக்ஸ்
இல.81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5578
தொ.ந.: 021 222 9286

BCAS
CAMPUS
077 710 2131 / 021 221 9910

FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
No. 181, 1st Floor, Main Street, Nelliady.
0779 789 456

சாரங்கா
Sharanga Money Exchange (Pvt) LTD.
சாரங்கா நகைமாடம்
சாரங்கன் நகையகம்

SNT SERVICE STATION
எஸ்.என்.ரி. சேர்விஸ் ஸ்டேசன்
யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம்
Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(C9748)(2.5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று நடைபெறும் 'இன்னிசைப் பொழுது'

யாழ்ப்பாணம், ஜூன் 29

வட மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் 'இன்னிசைப்பொழுது' இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்வர். (ந)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17.04.1934

மறைவு
09.07.2012

அமரர் சின்னையா
கனகரெத்தினம்

திதி: 29.06.2013

ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

20/1, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

(38743)(3.6.7.11)


# 2 லட்சத்துக்கு விலைபோனது வேள்விக்கு வந்த ஆட்டுக்கடா

வடமராட்சி, ஜூலை 29

அல்வாய் வடக்கு, வட்டிக்கவளை விறுமர் (முருகன்) ஆலய வேள்வியில் மிகப் பெரிய ஆட்டுக்கடா ஒன்று இரண்டு லட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டது. இந்த விலையானது யாழ். மாவட்டத்தில் அதி உச்ச விலை என கால்நடை வளர்ப்போர் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை வேள்விப் பூசை முடிவடைந்ததும் நேர்த்திக்காக விடப்பட்டிருந்த ஆட்டுக் கடாக்கள், சேவல் கோழிகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு அவற்றுக்குரிய பணம் நேர்த்தியாளர்களுக்கே வழங்கப்பட்டன.

ஏலத்தின்போது மிகப்பெரிய ஆட்டுக்கடா ஒன்று இரண்டு இலட்சம் ரூபாவுக்கும், அதற்கடுத்ததாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கும், ஒரு இலட்சம் ரூபாவுக்கும், 80 ஆயிரம் ரூபாவுக்கும் மூன்று ஆட்டுக்கடாக்கள் விற்கப்பட்டன. எஞ்சிய ஆடுகள் 60 ஆயிரம் ரூபா தொடக்கம் 70 ஆயிரம் ரூபா வரையில் விற்கப்பட்டன.

இந்தக் கோயில் வேள்விக்கு சுமார் 150 ஆட்டுக் கடாக்கள் நேர்த்திக்காக பக்தர்களால் விடப்பட்டிருந்தன. (ந-8)

## புகைத்தல் எதிர்ப்பு தினத்தை ஒட்டிய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நல்லூர் வடக்கு சமுர்த்தி செயலணியினரால் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை யொட்டி நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர் கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

1ஆம் இடம்-பிரபாகர் பிறோஜன்-தரம் 7 (யாழ்.இந்துக் கல் லூரி), 2ஆம் இடம்- சுபராஜா விஷ்ணு காந்த்-தரம் 4 (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), 3ஆம் இடம்- தேவ குமாரன் ரஜிந் தன்- தரம் 11 (யாழ். இந் துக் கல்லூரி), 4ஆம் இடம்-க.கஜன் ஜெயன்- தரம் 4 (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), 5ஆம் இடம்- விக் னேஸ்வரன் மதுரங்கா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை). (ந-7)

### கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படவுள்ள விஞ்ஞானத்தில் அத்தி பார சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆர்வ முடையவர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (வ-14)


## சிறப்புணவு வழங்கல் நிகழ்வு

அமரர் வேலுப்பிள்ளை
நாகேஸ்வரி



அவர்களின் பிறந்த நாள்
நினைவு தினத்தை முன்னிட்டு
க.வேலுப்பிள்ளை
அவர்களால் 2013.06.22
சனிக்கிழமை கிளிநொச்சி
மகாதேவா ஆச்சிரம சிறுவர்
இல்ல குழந்தைகளுக்கு
மதிய நேர சிறப்புணவு
வழங்கப்பட்டது.

க.வேலுப்பிள்ளை (கணவர்),
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

(37469) (45.6.3)



## கண்ணீர் அஞ்சலி

எமது வாடிக்கையாளர் நிறுவனமான அகதிகள் புனர்வாழ்வு (TRRO) நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் மற்றும் எமது நிறுவனத்தின் பணியாளர் செல்வி சாருஜா மோகனகுமார் அவர்களின் அன்புப் பாட்டனாருமான

அப்புக்குட்டி நல்லதம்பி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிறுவன உரிமையாளர் மற்றும் பணியாளர்கள்,
ம.இராஜநாயகம் அன்கோ பட்டயக் கணக்காளர்

(38747)(3.6.7.11)



## மரண அறிவித்தல்

### வலோரியான் லெபோண்



யாழ்ப்பாணம் - பாஷையூரைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட வலோரியான் லெபோண் 22.06.2013 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.06.2013) சனிக்கிழமை பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும். இன்றைய தினம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6 மணியளவில் அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து அவரது சகோதரனின் (பொன்சன்) வீட்டில் வழிபாடும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பொன்சன் (சகோதரன்)
மற்றும் உறவினர்கள்.

இல. 08, முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர்.

(38735) (45.6.3)



## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலிப் பூக்கள்



தாயின் மடியில்
13.12.1938

தெய்வத்தின் பாதத்தில்
29.06.2003

திருமதி செல்லம்மா
கணபதிப்பிள்ளை

திதி: 07.07.2013

எம் பாசமிகு அன்னையே பத்து மாதங்கள் சுமந்து எம்மை
தரணியில் ஈன்றெடுத்த எம்கோவிலே
பத்து ஆண்டுகள் போயின- ஆனால்
மீளவில்லை நாமும் பிரிவுத் துயரிலிருந்து
எம் நினைவுப் பூக்கள் என்றும்
எம் அன்னையின் பாதத்தில்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல 26/2, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(35737)(3.6.11)

என்றும் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசா
இரத்தினேஸ்வரன் (சந்துரு)

அன்னை மடியில்
23.05.1964

ஆண்டவன் மடியில்
10.07.2012

உங்களை நாமிழந்து
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறாது உங்கள் பிரிவின் துயரம்
தீராது எங்கள் சோகம்
இதயம் வரைக்கும் இறங்கிய சோகத்தால்
இன்று எங்கள் விழிகளில் வழிகிறதே!
ஓராயிரம் கண்ணீர்த்துளிகள்.......
நியத்தில் இறைவனுடன் கலந்திருந்தாலும்
நினைவில் எங்களுடனே வாழ்கின்றீர்களே!
"தழைத்தோங்கிச் சென்றாலும் தளிர்
வேரை மறப்பதில்லை
புயல் காற்று சாய்த்தாலும் - அசையாது
உரமூட்டும் எங்கள் - ஆணி
வேரான உம்மை நாம் மறவோம்"

இன்று (29.06.2013) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்துகொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றோம்.

இராசவீதி, மாசுவன்,
நீர்வேலி வடக்கு.

மனைவி,
பிள்ளைகள்.

(38741)(45.6.3)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி
கந்தையா தேவதாசன்

Rtd CTK.Cement Corporation K.K.S
Time officer lanka cement LTD K.K.S


கர்த்தருக்குள் நித்திரையடைந்த அமரர் சின்னத்தம்பி கந்தையா தேவதாசன் அவர்களின் வாழ்வுக்கும் பணிக்குமான நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (29.06.2013) சனிக்கிழமை மு.ப 11.30 க்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இ[illegible] வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து ந[illegible] பெறு[illegible] பங்கு பற்றுமாறு தங்களை அ[illegible]

நியோர்ப் லேன், இணுவில் கிழக்கு,
இணுவில். T.P- 00217200006

(38723)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சனசமூக நிலைய முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நிலையத்தின் கீழ் இயங்கும் ஞான வீர முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும். (வ)





இணுவில் திருப்பதி திருவேங்கடேஸ்வரர் ஆலய நூதன சம்ப்ரோக்ஷண குடமுழுக்கு கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடியவர்களின் பலத்த பக்திக் கோஷத்தின் மத்தியில் இடம்பெற்றது. குடமுழுக்கு காண யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் அடியவர்கள் திரண்டு வந்திருந்தனர். (ந-86)

## நாவற்குழி ம.வியில் சுகாதாரக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 29

வரணி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இயங்கும் அன்னையர் கழகங்களின் சுகாதாரக் கண்காட்சி ஜூலை 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் நாடா வெட்டித் திறந்து வைப்பார்.

ஜப்பானிய சமூக அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மூன்றாவது கண்காட்சியாக இடம்பெறவுள்ளது.

பிரிவால் ஆறு பிரிவுகளில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஏற்கனவே சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு ஆகிய பிரிவுகளில் நடத்தி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி தெற்கு, நாவற்குழி, கோவிலாக்கண்டி, மறவன்புலோ ஆகிய அன்னையர் கழகங்களால் ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட வுள்ளன. (வ-9)

# பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகள்; வடக்கு ஆளுநரின் அனுமதி பெற்றால் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூன் 29

பாடசாலை நிகழ்வுகளுக்கு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதாயின், வடமாகாண ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவுறுத்தியுள்ளார்.

மிக முக்கியமானது என்ற அறிவுறுத்தலில், மாகாணக் கல்விப் பணிப்பாளர், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சகல கோட்டக் கல்விப் பணிப் பாளர்கள், சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்திருக்கும் சுற்றறிக்கையிலேயே மேற்கண்டவாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாண அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் அரசியல் கூட்டங்கள் மற்றும் கலந்தாய்வுகள் என்பவற்றை நடத்துவதற்கு இடமளிக்கக் கூடாது.

அரச கட்டடங்களில் வைபவங்களை நடத்துதல் தொடர்பான தாபன விதிக்கோவை அத்தியாயம் XXXii பிரிவு 2:4 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கட்டாயமாகப் பின்பற்றப்படல்வேண்டும்.

அவ்வாறின்றி பாடசாலைகளில் அரசியல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் கலந்தாய்வுகள் நடத்தப்படுமாயின் பாடசாலை அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் கலந்து கொள்ளும் வேறு ஏதா வது நிகழ்வுகளாயின் பங்குபெறவுள்ள நாடாளுமன்ற உறு பினர்கள் மற்றும் அரசிய கட்சிகளைச் சேர்ந்தோரி பெயர் விவரங்களைக் குறி பிடுவதுடன் நிகழ்வு தொட பான விவரத்தையும் குறி பிட்டு வட மாகாண ஆளுநரி முன் அனுமதி பெறப்படவேண் டும். மேலும் விடுக்கப்பட்டுள் இந்த சுற்றறிக்கை கிடைத்தமை தொடர்பிலும், இதற்கு அமை வாகச் செயற்பட பாடசாலை அதிபர்களிடம் உறுதிப்படு தலைப் பெற வேண்டும் என் றும் அறிவுறுத்தப்பட்டுள் ளது. (ந-5

## மாகாண மட்ட சித்திரப்போட்டியில் முதல் இடம்



அச்சுவேலி, ஜூலை 29

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை மாணவன் முரளிதரன் நிதுஜன் சித்திரப் போட்டியில் வடக்கு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளார்.

ஆரம்பப்பிரிவு மாணவர் மட்டத்தில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் முரளிதரன் நிதுஜன் கோட்டம், மாவட்டம் மற்றும் வடக்கு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதோடு மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களை உள்ளடக்கி தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளார். (ந-11)

## சனி – வெள்ளி வரை மின்தடை

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்ப தாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக் கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், இளவாலை, மாதகல், சில்லாலை, சுழிபுரம், விளான், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு ஆகிய இடங்களிலும்–

நாளை ஞாயிற்றுக்கிழமை குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், சுன்னாகம், புன் னாலைக் கட்டுவன், அச்செழு, ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி, வல்லை, புறாப்பொறுக்கி, பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞான பீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாஷையூர், குருநகர், கந்தர் மடம், ஆரிய குளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, குருநகர், யாழ். பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும்–

1 ஆம் திகதி திங்கட்கிழமை, 3 ஆம் திகதி புதன்கிழமை, 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் அம்பன், குடத்தனைப் பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)




ஏழாலை தெற்கு- மயிலங்காடு ஸ்ரீ ஞான வைரவ ஆலய அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ப னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளன. தி விழா நாளில் தினமும் மாலை 6 மணிக் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மாவி ''பக்த விஜயம்'' தெய் வீகத் தொடர் இசை பேருரை நடைபெறும்.

★ ★

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆல வருடாந்த திருவிழா நவநாள் வழிபாடுக இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை மாலை 5.15 மணிக் நற்கருணை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குதிருவிழாத் திருப்பலியும் திரு சொரூப பவனியும் இடம்பெறும். (ந-135

### உடுவில் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட

# கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகின

லலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பாலர் பிரிவு**

**கவிதைப் போட்டி-**

முதலாம் இடம் து.ரிவின்சிகா (இணுவில் மத்திய கல்லூரி)

**கையெழுத்துப் போட்டி**

முதலாம் இடம்-நெ.சஜித்தா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) இரண்டாம் இடம்-த.ஜெனனி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) மூன்றாம் இடம்- சி.தரணிகா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**கனிஷ்ட பிரிவு-**

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-மு. கௌசல்யா (ஏழாலை மகா வித்தியாலயம்) இரண்டாம் இடம்- யோ.துளசி (இணுவில் மத்திய கல்லூரி) மூன்றாம் இடம்-வ.கேசிகா (இணுவில் மத்திய கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

முதலாம் இடம்-பு.நிரோஸ் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), இரண்டாம் இடம்-கி.சிந்துஜா மூன்றாம் இடம்-வ.தக்சனா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை),

**கவிதைப் பாடல் போட்டி**

முதலாம் இடம்-அ.பிரவினா (உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்- இ.டஸ்மி (உடுவில் முருக மூர்த்தி வித்தியசாலை) மூன்றாம் இடம்- பா.பிரியதர்சினி (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**சிரேஷ்ட பிரிவு- கவிதைப் போட்டி**

முதலாம் இடம்-க.பவித்திரா- (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), இரண்டாம் இடம்- ஜெ.சஞ்சிகா (தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை) மூன் றாம் இடம்- கு.தயாளினி (இணுவில் மத்திய கல்லூரி). (தொடரும்)(ந)

### சுன்னாகம் சந்தையில் அதிரடி

# தவறான நிறுத்தல் அளவை வசமாகச் சிக்கினர் 14 பேர்

வலி. வடக்கு, ஜூன் 29

சுன்னாகம் சந்தைப் பகுதியில் பொருள்கள் நிறுத்து விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட பிழையான நிறைகளைக் கொண்ட நிறுத்தல் அளவைக் கருவிகள் நேற்றுமுன்தினம் பகல் இடம்பெற்ற சோதனையைத் தொடர்ந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 14 பேர் பிடிக்கப்பட்டனர்.

சுன்னாகத்தில் விவசாயப் பொருள்கள் விற்பனை செய்யும் சந்தைப் பகுதி மற்றும் [illegible] இடம்பெறும் சந்தைப் பகுதிகளில் திடீரென யாழ்ப்பாணம் செயலக நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பிரிவினரும் மற்றும் வலி தெற்கு உடுவில் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஏற்கனவே சுன்னாகம் சந்தைப் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் பிழையான நிறுத்தல் அளவைக் கருவிகளை பயன்படுத்துவதாக பிரதேச சபைக்கு பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் சபையின் உறுப்பினர்களும் இத்தகைய மோசடிகள் பற்றி சபைக் கூட்டத்தில் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சோதனையின்போது 14 பேர் கையும் களவுமாக பிடிக்கப்பட்டதுடன அவர்களி டம் இருந்த நிறுத்தல் அளத் தல் உபகரணங்களும் பறி முதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை ஒரு புறத்தில் சோதனை நடைபெற மறு புறத்தில் இருந்த வியாபாரி கள் சிலர் தம்மிடம் இருந்த முத்திரையிடப்படாததும் மற் றும் பிழையான நிறை களைக் கொண்ட உபகரணங் களை மறைத்துக் கொண்ட தாகவும் பொதுமக்கள் தெரி வித்தனர். (ந-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் ஆட்சியைவிட முஸ்லிம்களுக்கு ரணில் வந்தால் நிலைமை மோசமாகும்

## நிலைமையை விளக்குகிறார் ஹிஸ்புல்லாஹ்

காத்தான்குடி, ஜூன் 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

ஆனால் ரணில் ஆட்சிக்கு வந்தால் நிலைமை இன்னும் மோசமாகும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் குற்றச் சாட்டியுள்ளார்.

காத்தான்குடி ஜம்மியதுல் உலமா சபையின் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

''அண்மைக்காலமாக நாட்டில் பௌத்த பேரினவாத அமைப்புக்கள் ஜம்பியத்துல் உலமாவை பகிரங்கமாக விமர்சிக்கின்றன.

முஸ்லிம்களின் வளர்ச்சியை பொறுக்காமல் பொதுபல சேனா முஸ்லிம்களுக்கு எதிரான பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன.

முஸ்லிம்களாகிய நாம் அமைதி காக்க வேண்டும். அவர்களைப் போன்று நாமும் விமர்சிப்பதோ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதோ தவறான விடயமாகும்.

இஸ்லாம் பற்றி மாற்று மதத்தவர் சந்தேகங்களை நாம் தீர்க்க வேண்டும். இன்று இலங்கையை மியன்மார் போன்ற நாடாக்குவோம் எனக் கூறுகிறார்கள்.

ஆனால் நான் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கான முயற்சிகளை முன்னெடுப்பேன்.- என்றார்.

(ச-ரி)

# நாடு முழுவதும் 210 பாலங்கள்

## நிர்மாணிக்க திட்டமிடுகிறது அமைச்சு

கொழும்பு,ஜூன் 29

நாடளாவிய பீதியில் கிராமப் புற பாதைகள் ஊடாக 210 பாலங்கள் நிர்மாணிப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மாத்தளை மாவட்டத்தில் முதலில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் கிராமப் புற பாலம் நிர்மாணத்துறை திட்டத்தின் இணைப்பதிகாரி யான பொறியியலாளர் சந்தன குணதிலக்க குறிப்பிட்டார்.

கிராமப்புறங்களுக்கான பாலங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த வருடத்துக்குள் சுமார் 70 பாலங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



ஏனைய எஞ்சிய பாலங் களை அடுத்த வருடத்துக்குள் நிறைவுசெய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ச)

# வீதியில் பெண்கள் இருவரை தாக்கினர் பொலிஸார்

## மறுக்கிறது பொலிஸ்; மக்கள் மத்தியில் குழப்பம்

கிளிநொச்சி, ஜூன் 29

கசிப்பு வைத்திருந்த ஒருவரைக் கைது செய்தனர் பொலிஸார். அவரை விட்டுவிடுமாறு கோரிய உறவுப் பெண்கள் இருவரை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர் அதே பொலிஸார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

விசுவமடு 12 ஆம் கட்டைப் பகுதியில் கசிப்புடன் ஒருவரை தர்மபுரம் பொலிஸார் இரவு கைது செய்தனர். சம்பவத்தை அறித்த உறவுக்காரப் பெண்கள் இருவர் இரவு 9 மணியளவில் பொலிஸாரைப் பின் தொடர்ந்து வந்து கைதானவரை விடுவிக்குமாறும் தாம் காலையில் அவரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பதாகவும் கோரியுள்ளனர்.

இந்த நிலையில் அந்தப் பெண்களை தடியால் பொலிஸார் கடுமையாகத் தாக்கி விட்டு கைது செய்த நபரைக் கொண்டு சென்றுள்ளனர். இதனை அந்தப் பகுதியில் கூடி





நின்ற மக்கள் நேரில் பார்த்துள்ளனர்.

இது தொடர்பில் தருமபுரம் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; கசிப்புடன் தாம் ஒருவரைக் கைது செய்ததாகவும் பெண்கள் எவரையும் தாம் தாக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

எனினும் பெண்கள் இருவர் ஒரு வீதியில் இரவு நேரத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து விசுவமடு பகுதி வர்த்தகர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து கடையடைப்பை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர்.

இந்த நிலையில் விசுவமடு, தருமபுரம் இராணுவத்தினர் தலையிட்டு பிரச்சினையை நாம் தீர்த்து வைப்பதாகக் கூறி கடையடைப்பைத் தடுத்து நிறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-6)


## 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (I) பிரிவின் கீழான அறிவித்தல்

வடக்கு/கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் குழப்பங்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களும் வேறோர் இடத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுமான இலங்கைப் பிரஜைகளை 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்கான குறைநிரப்பிப் பட்டியல்.

**தேர்தல் மாவட்ட இல.10-வன்னி.**

மேலே காட்டப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்குரிய இடம்பெயர்ந்தவர்களுக்கான குறைநிரப்பிப் பட்டியலின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும், அப் பட்டியலை அலுவலக நேரத்தினுள் பொது மக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு மாவட்டத்தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும் 2013 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3(1) ஆம் பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. மேற்குறித்த இடம்பெயர்ந்த தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கிணங்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரிய அக்குறை நிரப்பிப் பட்டியலில் தனது பெயரை உட்சேர்த்து கொள்வதற்கு தகைமை இருப்பினும், தனது பெயர் குறைநிரப்புப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனும் ஒருவர் தனது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்காக அல்லது தொடர்ந்தும் வைத்துக் கொள்வற்காக விடயத்துக்கேற்றவாறு மேன்முறையீடு சமர்ப்பிப்பாராயின் அவ்வாறு மேன்முறையீடு சமர்ப்பிக்கின்றவர் அது தொடர்பாக மேற்குறித்த தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள படிவத்திலான கோரிக்கையொன்றை மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் இந்த அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் ஒரு வாரத்தினுள் இது தொடர்பாக அனைத்து விண்ணப்பப் படிவங்களும் மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

03. மேற்குறித்த தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்பிப் பட்டியலில் பெயர் உட் சேர்க்கப்பட்டுள்ள யாரேனும் ஒருவருக்கு தனது பெயர் அல்லது அப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரேனும் ஒருவரின் பெயர் அத் தேருநர் இடாப்பில் உட் சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிகப்படுகின்ற ஆட்சேபனைகளை மேற்படி சட்டத்தில் கட்டளை இடப்பட்டுள்ளவாறு விடயத்திற்கேற்ப "ஊ" படிவத்திற்கிணங்கியவாறு இரண்டு பிரதிகளில் தயாரித்து மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படல் பற்றித் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து ஆட்சேபனைகளும் இந்த அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து ஒரு வாரத்தினுள் மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக் கூடிய வாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இந்த அறிவித்தல் மன்னார்/ வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தில் 2013ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் 2013ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்.

04. ஏதேனுமோர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகவும் எவரேனும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்க்குமாறு அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்குமாறு வேறு எவரேனும் ஒருவரால் செய்யப்படுகின்ற உரிமைக்கோரிக்கைக்கும் ஆட்சேபனை தெரிவித்தலுக்கும் தேவையான படிவங்களை மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு நிருவாக மாவட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

2013ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி
வவுனியா தேர்தல்கள் அலுவலகத்தில்

ஏ.எம்.எம். கபீர்,
உதவிப்பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்ட இல.11, வன்னி.

(சி/10141)



## 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 (I) பிரிவின் கீழான அறிவித்தல்

வடக்கு/கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் குழப்பங்கள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களும் வேறோர் இடத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுமான இலங்கைப் பிரஜைகளை 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்கான குறைநிரப்பிப் பட்டியல்.



**தேர்தல் மாவட்ட இல.10-யாழ்ப்பாணம்.**

மேலே காட்டப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்குரிய இடம்பெயர்ந்தவர்களுக்கான குறைநிரப்பிப் பட்டியலின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் அப்பட்டியலை அலுவலக நேரத்தினுள் பொது மக்கள் பரீட்சித்து பார்ப்பதற்காக யாழ்ப்பாணம்/கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும் 2013 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3(I) ஆம் பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. மேற்குறித்த இடம்பெயர்ந்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்குரிய அக்குறைநிரப்பிப் பட்டியலில் தனது பெயரை உட்சேர்த்து கொள்வதற்குத் தகைமை இருப்பினும் தனது பெயர் குறைநிரப்பிப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனும் ஒருவர் தனது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்காக அல்லது தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்காக விடயத்துக்கேற்றவாறு மேன்முறையீடு சமர்ப்பிப்பாராயின் அவ்வாறு மேன்முறையீடு சமர்ப்பிக்கின்றவர் அது தொடர்பாக மேற்குறித்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள படிவத்திலான கோரிக்கையொன்றை யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் ஒரு வாரத்தினுள் இது தொடர்பான அனைத்து விண்ணப்பப்படிவங்களும் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

03. மேற்குறித்த தேர்தல் மாவட்டத்துக்குரிய குறைநிரப்பிப் பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள யாரேனும் ஒருவருக்கு தனது பெயர் அல்லது அப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரேனும் ஒருவரின் பெயர் அத்தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற ஆட்சேபனைகளை மேற்படி சட்டத்தில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு விடயத்துக்கேற்ப "ஊ" படிவத்திற்கிணங்கியவாறு இரண்டு பிரதிகளில் தயாரித்து யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படல் பற்றித் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து ஆட்சேபனைகளும், இவ்வறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இவ்வறிவித்தல் யாழ்ப்பாணம் / கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்.

04. ஏதேனுமோர் உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகவும் எவரேனும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்க்குமாறு அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்குமாறு வேறு வரேனுமொருவரால் செய்யப்படுகின்ற உரிமைக் கோரிக்கைக்கும் ஆட்சேபனை தெரித்தலுக்கும் தேவையான படிவங்களை யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி,
யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகத்தில்.


ஏ.ஓ.எம்.நபீல்
உதவிப் பதிவு அலுவலர்.
தேர்தல் மாவட்ட இல.10
யாழ்ப்பாணம்.

(C/10143) (10.6.16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து அதிகரித்த மறவன் புலோ பகுதியில் புதிய ரயில் கடவையை அமையுங்கள்


## கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை



தென்மராட்சி,ஜூன் 29
தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ, நுணாவில் ஆகிய பிரிவுகளில் பெரிய அளவில் உள்ள நெல் வயல்களில் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நலன்கருதி மறவன்புலோ பகுதியில் புதிய ரயில் கடவை உருவாக்குமாறு அந்தப் பகுதி கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
சாவகச்சேரியிலிருந்து நாவற்குழி வரையான ரயில் பாதையில் மூன்று ரயில் கடவைகளே அமைக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்றான நுணாவில் மேற்கு- மறவன்புலோ இணைப்பு வீதி (கொல்லங்கிராய் வீதி) தற்போது பொதுமக்களதும் நெற்செய்கையாளர்களதும் பாவனை குறைந்துள்ளதால் தற்போது படையினரால் அமைக்கப்பட்டுள்ள நுணாவில் மத்தி- மறவன்புலோ இணைப்பு வீதி (இராசையா வீதி) யையே பெருமளவானோர் பயன்படுத்தி வருகின்றனர். அத்தோடு பலவித வாகனங்களும் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்ட கொல்லங்கிராய்வீதியில் அமைக்கப்படவுள்ள ரயில் கடவையை இராசையா வீதிக்கு மாற்றி தமது பாதுகாப்பான பயணத்துக்கு உதவுமாறு தனங் களப்பு, மறவன்புலோ, நுணாவில் ஆகிய கமக்கார அமைப்புக்கள் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# முதலிகோயிலடியில் குடிதண்ணீர் தாங்கி

## 834 குடும்பங்களுக்கு பயன்



வட்டுக்கோட்டை, ஜூன் 29
'வேள்ட் விசன்' நிறுவனம் அமைத்துக் கொடுத்த குடிதண்ணீர் தாங்கி மூலம் வட்டுக்கோட்டை முதலி கோயிலடியைச் சேர்ந்த 834 குடும்பங்கள் தமது குடிதண்ணீர் தேவையைப் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
நீண்ட காலமாக குடிதண்ணீருக்காக சிரமப்பட்ட மக்களின் நலன்கருதி வேள்ட் விசன் நிறுவன உதவியான 7.5 மில்லியன் ரூபா மற்றும் வலி.மேற்குப் பிரதேச சபையின் 2 மில்லியன் ரூபாவுமாக 9.5 மில்லியன் ரூபா செலவில் இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தின் மூலம் தாம் நீண்ட காலத்தின் பின்னர் குடிதண்ணீரைச் சிரமமின்றிப் பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ-50)

# பிரதேச சபை எதிரணி உறுப்பினர்களுக்கு நிதி

## வீதிகளைப் புனரமைப்பதற்காக

வலி.தென்மேற்கு, ஜூன் 29
குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகளில் எதிரணி உறுப்பினர்களாக இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் இரு வீதிகளைக் கொங்கிறீட் வீதிகளாக மாற்றியமைப்பதற்கு ரூபா 10 லட்சம் வீதம் வழங்கப்படவுள்ளது.
இதற்கான துறைமுக மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு அவர்களால் மேற்கொள்ளப் படவிருக்கும் வேலைத் திட்டங்கள் பற்றிய மதிப்பீட்டை அனுப்பி வைக்குமாறு உறுப்பினர்களைக் கோரியுள்ளது.
குடாநாட்டிலுள்ள 15 பிரதேச சபைகளில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய மூன்று பிரதேச சபைகள் தவிர்ந்த ஏனைய 12 பிரதேச சபைகளின் நிர்வாகத்தை த.தே.கூ.கைப்பற்றியுள்ளது.
இந்த 12 பிரதேச சபைகளிலும் எதிரணி உறுப்பினர்களாக ஐ.ம.சு.முன்னணியைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.
வலி.தென்மேற்கு பிரதேச சபையில் எதிரணியில் இருக்கும் 4 உறுப்பினர்களுக்கும் இரு வீதிகள் வீதம் எட்டு வீதிகளை கொங்கிறீட் வீதிகளாக மாற்றியமைப்பதற்கு 40 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ள துறைமுக மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு, இது தொடர்பான விவரங்களை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைத் திட்டம் தொடர்பான மதிப்பீட்டை அனுப்பி வைக்குமாறும் கோரியுள்ளது. (வ-115)



# விபத்தில் வயோதிபர் காயம்

தென்மராட்சி,ஜூன் 29
ஏ-9 வீதியில் சைக்கிளில் சென்ற நபரை வேகமாக வந்த வாகனம் மோதித் தள்ளியதில் வயோதிபர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மீசாலையில் இடம்பெற்றது.
சம்பவத்தின்போது தலையில் காயமடைந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி குலசேகரம் (வயது-60) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதேவேளை நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் ஸ்ரான்ட் உடைந்ததில் அதில் அமர்ந்திருந்த மாணவன் வீழ்ந்து கையை நிலத்தில் ஊன்றியதில் எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.
மட்டுமவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சுதர்சன் கீர்த்திகன் (வயது-17) என்னும் மாணவனுக்கே கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# குடும்பஸ்தர் காயம் திருக்கை மீன் தாக்கியதில்

தென்மராட்சி, ஜூன் 29
கடலேரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தரை திருக்கை மீன் வாலால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் கச்சாய் கடலேரியில் இடம்பெற்றது. கச்சாய் தெற்கைச் சேர்ந்த கணேசு சண்முகராசா (வயது-40) என்பவர் காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# பனை உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்புக்கு நடவடிக்கை


## பனை அபிவிருத்திச் சபை ஏற்பாட்டில்





யாழ்ப்பாணம், ஜூன் 29
பனை வளம் சார்ந்த தொழில் துறைகளை நவீன மயப்படுத்தி காலத்துக்கு ஏற்ப உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் பனை சார் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகின்றது.
இந்தத் திட்டத்துக்கு அமைவாக பனைவளம் சார்ந்த தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்குவதுடன் அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. உற்பத்தியாளர்கள் காலத்துக்கு ஏற்ப நவீன மயப்படுத்தல் ஊடாக தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பொருள்களுக்கான கிராக்கி அதிகரிக்க வாய்ப்பாக உள்ளதுடன், நுகர்வோர் மத்தியில் கூடுதலான சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.
நவீன மயப்படுத்தல் மூலம் உற்பத்தித் தரத்தை அதிகரிக்கச் செய்து உள்ளூரில் மட்டுமல்லாது வெளிநாடுகளில் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
பனை வள சார் உற்பத்திகளுக்கு வெளிநாடுகளில் கூடுதல் சந்தை வாய்ப்பு உள்ள போதும் நவீன மயப்படுத்தல் அற்ற காரணத்தால் சந்தை வாய்ப்புக்கள் கை நழுவிப் போகின்றன.
இந்த நிலையில் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பாதிப்படைவதுடன் தொழில் நடவடிக்கைகளும் கைவிடப்படுகின்ற சூழல் உருவாகியுள்ளது.
இதனை மேம்படுத்தும் நோக்குடன் பனை அபிவிருத்திச் சபை இந்த நடவடிக்கை எடுக்கவுள்ளது. (வ-14)

# நடைபாதை அமைக்கும் பணிகள் ஆரம்பம்



யாழ்.நகரில் முற்றவெளிப் பகுதியில் நடைபாதைகள் அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. தபாலக சுற்றுவட்ட சந்தியில் இருந்து துரையப்பா விளையாட்டு அரங்கு சந்தி வரையான கே.கே.எஸ். வீதியின் இரு மருங்கிலும் இந்த நடைபாதை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. (ந-17)

# மாடு திருட்டு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29
ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் களவாக மாட்டைப் பிடித்தமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர் மேய்ச்சலுக்காக தனது மாட்டை தோட்



டத்தில் கட்டியிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் மாட்டை அவிழ்த்துச் சென்றுள்ளனர்.
25 ஆயிரம் ரூபா பெறுமதியான தனது மாடு களவு போயுள்ளமை தொடர்பாக வீட்டின் உரிமையாளர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தமைக்கு அமைவாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
29/06/2013


## பூநகரியில் மிரட்டப்படும் த.தே.கூட்டமைப்பு ஆதரவாளர்கள்

அக்கராயன், ஜூன் 29

பூநகரியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கு எதிராக தொலைபேசி மிரட்டல்கள் விடுக்கப்படுவதுடன் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

துண்டுப்பிரசுரங்களில் புலிகளின் காலத்தில் இடம்பெற்ற செயற்பாடுகளை மையப்படுத்தி மிரட்டும் பாணியில் வாசகங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வடமாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பூநகரியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மிரட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை மக்களிடையே பெரும் அச்ச நிலையை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மன்னாகண்டல் கிராமத்தில் காடுகளுக்கும், பற்றைகளுக்கும் இடையில் வசிக்கும் மீள்குடியமர்ந்த மக்கள். (க-500)

## ஐயன்கன்குளத்தில் போசாக்கு தொடர்பான கலந்துரையாடல்

அக்கராயன், ஜூன் 29

துணுக்காய் ஐயன்கன் குளம் கிராமத்தில் போசாக்குத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கக்கூடிய மரக்கறிகள், கீரை மற்றும் பழவகைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தேவையான போசாக்கைப் பெற முடியுமென இங்கு கருத்துரை வழங்கப்பட்டது.

தற்போது பலர் தமக்குக் கிடைக்கின்ற பசுப்பாலை விற்பனை செய்துவிட்டு பால்மா வகைகளை நாடுவதால் தரமான பசுப்பாலினால் கிடைக்கின்ற நன்மைகளை இழந்து விடுகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டுமெனவும் இங்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

மல்லாவி சுகாதார பணிமனையும் சேவா லங்கா நிறுவனமும் இணைந்து நடத்திய இந்தக் கலந்துரையாடலின் போது போலியான விளம்பரங் களை நம்பித் தரமான உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டாம் எனவும் வலியுறுத்திக் கூறப்பட்டது.



(க-18)

## கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி



அக்கராயன், ஜூன் 29

அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் நான்கு நாள்களுக்கான பயிற்சி நெறியொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

உணவு.விவசாய ஸ்தாபனம், ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள 8 கமநல சேவை நிலையங்களிலும் இத்தகைய பயிற்சி நெறிகள் இடம்பெற்றன.

அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் அக்கராயன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி தலைமையில் பயிற்சி நெறிகள் இடம்பெற்றன.

அக்கராயன் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வன்னேரிக்குளம், திக்காய், குஞ்சுக்குளம், மண்ணியாகுளம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், விவசாயிகளுக்கு தலைமைத்துவப் பண்புகள், விவசாயச் சட்டங்கள் தொடர்பான அறிவு, நிதி முகாமைத்துவம், கணக்கைப் பேணுதல் உட்பட பல விடயங்களை தெளிவுபடுத்துவதாக இந்தப் பயிற்சி அமைந்திருந்தது.

கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கதிர்காமநாதன், உணவு விவசாய ஸ்தாபனத்தின் விரிவாக்க உத்தியோகத்தர் சி.தர்சினி ஆகியோர் இந்தப் பயிற்சி நெறியின் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (க-18)

# நிரந்தர வீடுகளை வழங்குமாறு ஊற்றுப்புலம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்கள் தமக்கு நிரந்தர வீட்டு வசதிகளைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தில் 410 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1340 பேர் மீள்குடியமர்ந்துள்ளனர். இதுவரை 'நேப்' திட்டத்தின் கீழ் 174 குடும்பங்கள் மாத்திரமே நிரந்தர வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.


குறித்த வீடுகளை அமைப்பதற்கு 3லட்சத்து 25 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டதால் அதிகளவான வீடுகள் பூர்த்தியாக்கப்படாமல் காணப்படுகின்றன.

இதனை விட யூ.என்.கபிராட் நிறுவனத்தினால் நான்கு வீடுகளின் பகுதி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு 178 குடும்பங்கள் தவிர ஏனைய குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலும், குடிசைகளிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

ஆகவே பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னதாக தமக்கு வீட்டுத் திட்டங்களைப் பெற்றுத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## பாழடைந்த கிணறுகள், கட்டடங்களால் எவ்வேளையும் விபத்து நடக்கும் அபாயம்



கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் காணப்படும் பாழடைந்த கிணறுகள், பழைய கட்டடங்கள் என்பனவற்றால் விபத்துக்கள் ஏற்படும் என்பதால் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியின் அகலிப்புப் பணிகளை அடுத்து வீதியின் இரு புறங்களிலும் உள்ள காணிகளில் உள்ள உடைந்த கட்டடங்கள் அகற்றப்பட்டுள்ளன. இருந்தும் உரிமையாளர்கள் இல்லாத காணிகள், பிரதேச சபைக்குச் சொந்தமான காணிகள் என்பவற்றில் அமைந்துள்ள கட்டடங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

அதேவேளை, ஏ-9 வீதியின் கரடிப்போக்குச் சந்தியில் ஆபத்தான நிலையில் சில கிணறுகள் காணப்படுகின்றன. இவற்றால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளது. எனவே இத்தகைய கிணறுகளை மூடி விடுவதுடன் ஆபத்தான கட்டடங்களை அகற்றுவதன் மூலமாக விபத்துக்களைத் தவிர்க்க முடியுமெனவும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

## பயன்படாத நிலையில் கிணறு

அக்கராயன், ஜூன் 29

துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு மக்களால் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கிணறு ஒப்பந்தகாரர் ஒருவர் மூலமாக அமைக்கப்பட்டது. ஆனால் கிணற்றின் வேலைகள் சீராக இடம்பெறாததால் வெள்ள நீர் கிணற்றினுள் உட்புகும் நிலை காணப்பட்டது.

தற்போது இந்தக் கிராம மக்கள் கடுமையான குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



## கால்நடைகளால் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 29

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கால்நடைகளைப் பட்டிகளில் அடைக்காது கட்டாக்காலிகளாக அலைய விடுவதால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கட்டாக்காலிகளாக விடுவதால் போக்குவரத்திலும், பயிர்களின் பாதுகாப்பிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் ஒட்டுசுட்டான் ஆலய வளாகம் மாட்டுச் சாணங்களால் நிறைந்துள்ளதால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

இத்தகைய கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)



## செயற்றிறன் ஊடாகவே கல்வியியலாளர்களை உருவாக்கலாம்

### வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

அக்கராயன், ஜூன் 29

பாடசாலை அதிபர்களின் செயற்றிறன் ஊடாகவே சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும். இவ்வாறு வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் இடம்பெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தின் போது 30 பாடசாலைகளின் நூலகங்களுக்குரிய நூல்களை வழங்கிய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் கல்வியில் கிளிநொச்சி கல்வி வலயம் முன்னிலை வகிக்கின்றது. தேசிய மட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 6 பாட



சாலைகள் சிறப்பான பெறு பேறுகளைப் பெற்றுள்ளன. புனித சென் திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், வன்னேரிக் குளம் மகா வித்தியாலயம், பளை மாசார் பாடசாலை, பூநகரி கறுக்காய்த்தீவு பாடசாலை என்பன தேசிய மட்டத்தில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்றமைக்காக பாராட்டுகிறேன் எனவும் அவர் மேலும் இங்கு தெரிவித்தார். (க-18)

## தான்தோன்றி ஈசுபரர் ஆலய உற்சவம் 7 ஆம் திகதி ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 29

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.


அன்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் உற்சவம் 22 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

அமாவாசை தினத்தன்று ஆரம்பமாகும் உற்சவம் பூரணை தினத்தன்று 16 திருவிழாக்களுடன் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்புப் பச்சை அரிசியை சந்தைப்படுத்த தீர்மானம்

### நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை



கொழும்பு. ஜூன் 29
நாட்டில் சிவப்புப் பச்சை அரிசியை அதிகளவில் சந்தைப்படுத்துவதற்கு நெல் சந்தைப் படுத்தல் சபை தீர்மானித்துள்ளது.
சிவப்புப் பச்சை அரிசிக்கு வர்த்தக சந்தையில் இன்று கடும் தேவைப்பாடு நிலவுவதால், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு சிவப்புப் பச்சை அரிசியைச் சந்தைப்படுத்துவது தொடர்பாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பி.ஜயசிங்க தெரிவித்தார்.
தென் மாகாணத்தில் சிவப்புப் பச்சை அரிசி நெல் அதிகளவில் விளைவிக்கப்படுவதால் வர்த்தகச் சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அரிசியை விநியோகிக்க முடிந்துள்ளது.
கொழும்புப் பிரதேசத்தில் சிவப்புப் பச்சை அரிசிக்கு அதிகரித்த கோரிக்கை நிலவுகிறது என்று அவர் கூறினார்.
நீரிழிவு நோய்கள் உள்ளிட்ட பல நோய்களுக்கு மருத்துவர்களால் சிவப்புப் பச்சை அரிசி பரிந்துரைக்கப்படுவதால் சிவப்புப் பச்சை அரிசிக்குப் பெருத்த தேவைப்பாடு நிலவுகிறது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-22)

### சாதாரணதரத்தில் திறமைச்சித்தி பெற்றால்

## விரும்பிய பாடசாலையில் உயர்தரத்தை தொடரலாம்



கொழும்பு,ஜூன் 29
ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் எட்டு அல்லது ஒன்பது பாடங்களில் 'ஏ' சித்திகளைப் பெற்று விசேட ஆற்றல்களை வெளிப்படுத்தும் மாணவர்கள் உயர்தரக் கல்வியைக்கற்க தாம் விரும்பிய பாடசாலைகளில் இணைந்துகொள்ள முடியும்.
இவ்வாறு இணைவதற்கு இந்த ஆண்டிலிருந்து அனுமதி வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.
அதற்கமைய 2012 ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற ஜி.சீ.ஈ தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்கும் இந்த வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.
மாணவர் ஒருவர் உயர் தரத்தில் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கும் கற்கை நெறிகள் அவர் தற்போது கற்று வரும் பாடசாலையில் இருக்குமாயின், எந்தவொரு காரணத்தைக் காட்டியும் அவர் உயர்கல்வியைத் தொடர பிறிதொரு பாடசாலையில் இணைந்து கொள்வதற்கு அனுமதி வழங்குவதில்லை என்பதே கல்வி அமைச்சின் முன்னைய தீர்மானமாகும்.
எனினும் இந்தத் தீர்மானம் குறித்து பெற்றோர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புக்கள் மற்றும் சில தரப்புக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய குறித்த தீர்மானம் மாற்றிக்கொள்ளப்பட்டது.
அதற்கமைய சாதாரணப் பரீட்சையில் விசேட திறமைகளைக் காட்டும் மாணவர்களுக்கு மாத்திரம் தாம் விரும்பும் பாடசாலை யொன்றில் இணைந்து கொள்வதற்கு அனுமதியளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ச-22)


## சூதாட்ட நிலையங்களை முற்றாக தடை செய்யுங்கள்

### ஜம்மியத்துல் உலமா வேண்டுகோள்

கொழும்பு. ஜூன் 29
நாட்டில் அதிகரித்து வரும் கசினோ சூதாட்ட நிலையங்கள், மதுபானக் கடைகள் ஆகியவை முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்று அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ. முபாறக் தெரிவித்தார்.
இது குறித்து ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
நாட்டில் அதிகரிக்கும் மதுக்கடைகள், சூதாட்ட நிலையங்களால் எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்படுகின்றனர். இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்க அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.
சகல சமயங்களிலும் மறுக்கப்பட்டுள்ள இந்தப் பாவச் செயல்கள் அனுமதிக்க முடியாதவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(ச-ரி)

## தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

### அமைச்சு தகவல்




இந்த ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் தேயிலை உற்பத்தி 8.1 வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளது என்று பயிர்ச் செய்கைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு தேயிலை உற்பத்தி அதிகரித்துச் செல்லும் அதேவேளை [illegible] உற்பத்தி 23 வீதத்தினாலும் தேங்காய் உற்பத்தி 74 வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
வருடத்தின் முதல் காலாண்டில் மீன் உற்பத்தி 14 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. தைத்த ஆடைகள் மற்றும் தோல் பொருள்களின் உற்பத்தி 6.8 வீதத்தால் உயர்வடைந்துள்ளது. அதற்கமைய இந்தமுதல் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6 வீதமாகும் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-22)

## உள்ளூராட்சி நிறுவனங்களிலேயே அதிகளவு லஞ்ச முறைப்பாடுகள்

கொழும்பு,ஜூன் 29
லஞ்சத் தொகைகளைப் பெறுதல் மற்றும் ஊழல்கள் சம்பந்தமான முறைப்பாடுகளில் பெரும்பாலானவை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பெரும்பாலானவை சம்பந்தப்பட்டவைகளாகும்.
இந்தத் தகவலை லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்ட பெந்தி தெரிவித்தார்.
இந்த நிறுவனங்கள் சம்பந்தமாக நூற்றுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, லஞ்ச, ஊழல்களின் விளைவுகள் குறித்து நாட்டிலுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்துவதற்கு லஞ்ச, ஊழல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ச-22)

## டெங்கை ஒழிக்க பாடசாலைகளுக்கு பிரிஜ பக்றீரியா

பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு திட்டத்துக்கென கியூபாவின் பிரிஜ பக்றீரியாவை இலவசமாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சில் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க கியூபாவின் தூதர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்தோனேசியாவில் டெங்கு நுளம்பை ஒழிக்க கியூபாவின் பக்றீரியாவை பயன்படுத்திய விசேட வைத்தியர் இலங்கை வந்துள்ளதால் அவருடைய யோசனைகளையும் பெற்றுக் கொடுக்க கியூபா தூதர் விருப்பம் தெரிவித்தார். (ச)



மாடு வெட்டுவதை தடை செய்யக் கோரி சிங்கள ராவய அமைப்பினர் கதிர்காமத்தில் இருந்து ஜனாதிபதியின் அலரி மாளிகை வரை பாதயாத்திரையில் ஈடுபட்டனர். (ச-ரி)

## 'யோக்கற்' தொழிற்சாலை பேராதனை பல்கலையில்



கொழும்பு,ஜூன் 29
நாட்டில் முதல் தடவையாக 'யோக்கற்' உற்பத்தித் தொழிற்சாலை பேராதனை பல்கலைக் கழக விவசாயபீட வளாகத்தில் திறந்து வைக்கப்பட் டுள்ளது.
இந்தத் தொழிற்சாலை பல்கலைக்கழகத்தின் கோரிக்கைக்கு அமைய இத்தாலிய நிறுவனமொன்றின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.
இந்தத் தொழிற்சாலைக்கு பல்கலைக்கழகப் பிரதேசத்தைச் சூழவுள்ள கிராமங்களில் செயற்படும் பால் உற்பத்திச் சங்கங்களிடமிருந்து யோக்கற் உற்பத்திக்குத் தேவையான பசுப்பால் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.
இங்கு உற்பத்தி செய்யப்படும் யோக்கற்றை, பல்கலைக் கழகத் தேவைக்கும், வெளிச் சந்தை விற்பனைக்கும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி கே.சமரசிங்க தெரிவித்தார். (ச-22)

## கூ. மொ. விற்பனவு கூட்டுத்தாபனத்தில் 19 கோடி பெறுமதியான பொருள்கள் மாயம்

### நிதி அமைச்சின் அறிக்கையில் அம்பலம்

கொழும்பு,ஜூன் 29
இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனவு கூட்டுத்தாபனத்தில் கடந்த இரண்டு ஆண்டுக்குள் 19 கோடி 70 லட்சம் பெறுமதியான பொருள்கள் காணாமற்போயுள்ளன.
இந்தத் தகவல் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையொன்றின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.
2012 ஆம் ஆண்டில் 14 கோடி 90 லட்சம் பெறுமதி கொண்ட பொருள்களும், 2011 ஆம் ஆண்டில் 4 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் காணாமற்போயுள்ளன.
இவ்வாறு பொருள்கள் காணாமல் போனமைக்கு நிறுவனத்தில் நில[illegible]வும் செயற்றிறனற்ற நிர்வாகமும் முறையற்ற உள்ளக நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் பலவீனமான தகவல் முகாமைத்துவமுமே காரணங்களாக அமைந்துள்ளன.
எனினும் தனியார் துறை சிறப்பங்காடி வர்த்தக நிலையங்களின் வளர்ச்சி காரணமாக இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் 2012 ஆம் ஆண்டின் இலாபம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் இலாபத்துடன் ஒப்பிடும்போது 4 கோடி 70 லட்சம் ரூபா குறைவடைந்துள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வியட்நாமில் போன்றே ஆப்கானிலும் அமெரிக்கா தோல்வியுற நேரிடலாம்!

**2014**இல் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து முழுமையாக வெளியேற இருப்பதும், நேட்டோ படைகளுடன் போரில் ஈடுபட்டுள்ள தலிபான்கள் கட்டாரின் தலைநகரான டோஹாவில் கடந்த 18ஆம் திகதி அரசியல் அலுவலகம் ஒன்றைத் திறந்திருப்பதும் சர்வ தேச கவனத்தை ஆப்கான் பக்கம் திருப்பி விட்டுள்ளது.

கடந்த 12 வருட காலப் போரில் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பிரிட்டன், அமெரிக்கா உட்படப் பல நாடுகளின் ஆயிரக்கணக்கான சிப்பாய்களை இழந்த நிலையில் அடுத்த ஆண்டு வெளியேற இருப்பதும், ஆப்கானில் தற்பொழுது ஆட்சியிலுள்ள கர்ஸாய் அரசின் எதிர்காலம் குறித்து தலிபான்களுடன் பேச்சு நடத்த அமெரிக்கா தயாராகி வருவதும் வியட்நாம் போருக்குப்பின் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியாகக் கருதப்படுகிறது. கடந்த செவ்வாயன்று ஆப்கான் படையினரின் சீருடை அணிந்துவந்து, போலியான அடையாள அட்டையைக் காண்பித்து காபூலில் உள்ள மிகவும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாசலூடாக ஊடுருவிய தலிபான் தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதல் ஜனாதிபதி கர்ஸாயின் பாதுகாப்பைக் கேள்விக்கு இடமாக்கி விட்டுள்ளது. நேட்டோ படைகள் வெளியேறமுன்னரே தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்பதை இது கோடி காட்டி நிற்கிறது.

ஆப்கானிஸ்தானின் கிராமப்புறங்களைத் தமது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான்கள், தமது ஆயுதப்பலம் மூலம் அமெரிக்காவுடன் பேரம்பேசத் தயாராகி வருகின்றனர். இதற்காகத்தான் டோஹாவில் அரசியல் அலுவலகம்.

2001 செப்டெம்பர் 11இல் நியூயோர்க்கின் உலக வர்த்தக மையம் மீது அல்- குவைதா அமைப்பு நடத்திய தாக்குதலையடுத்து, அதன் தலைவர் ஒபாமா பின்லேடனுக்கு தலிபான் அரசு புகலிடம் அளித்துள்ளதாகக் குற்றம்சாட்டி அமெரிக்கா தனது படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி பதவியிலிருந்த தலிபான் அரசைக் கவிழ்த்தது.

இது ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் திட்டம். ஒன்று, இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் புகலிடமான ஆப்கானிஸ்தானைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது. மற்றையது, மத்திய ஆசியாவிலுள்ள இயற்கை வாயு மற்றும் எண்ணெயை ஆப்கானிஸ்தானூடாகத் தரைமார்க்கமாகப் பாகிஸ்தான் துறைமுகத்துக்குக் கொண்டு செல்வது.

2010இல் பாகிஸ்தானில் மறைந்திருந்த சமயம் திடீர் தாக்குதல் மூலம் பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்டார். 12 வருட கால போரில் அமெரிக்கா புரிந்த சாதனை இதுதான். தற்பொழுது ஆப்கானிஸ்தானிலிருந்து எப்படி வெளியேறுவது என்று தெரியாமல் அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள் திண்டாடுகின்றன. 1975 ஆம் ஆண்டு தென்வியட்நாமில் இருந்து அமெரிக்கப்படைகள் வெளியேறியவுடன் வியட்கொங் படையினர் தலைநகர் சைகோனை எவ்வாறு கைப்பற்றினார்களோ அதேபோன்று நிலைமைதான் காபூலுக்கும் ஏற்படலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

1996 ஆண்டு முதல் 2001 ஆண்டின் அமெரிக்கப் படையெடுப்புவரை ஆப்கானிஸ்தானில் பதவியிலிருந்த தலிபான்கள், வியட்கொங் படையினரை விடப் பலம்வாய்ந்தவர்கள். தலிபான்களுடனான சமரச முயற்சிகள் தோல்வியடைந்து, திட்டமிட்டபடி நேட்டோ படைகள் வெளியேறுமானால், ஜனாதிபதி கர்ஸாயின் ஆப்கான் படைகளால் ஒருநாள்கூட தலிபான்களின் முன் தாக்குப்பிடிக்க முடியாது.

1989 ஆண்டில் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் வெளியேறிய சமயம் ஜனாதிபதியாக இருந்த சோவியத் ஆதரவு நஜிபுல்லாவுக்கு நேர்ந்த கதிதான் கர்ஸாய்க்கும் ஏற்படலாம். சோவியத் படைகளின் வெளியேற்றத்தின் பின் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்கிடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் 1992 ஆம் ஆண்டில் முஜாஹிதீன் அமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. நஜிபுல்லா ஆப்கானில் உள்ள ஐ.நா.தூதரகத்தில் தஞ்சமடைந்தார். ஆனால், 1996 ஆம் ஆண்டில் முஜாஹிதீனைத் தோற்கடித்து தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியபோது ஐ.நா. அலுவலகத்தைத் தாக்கினர். நஜிபுல்லாவைப் பிடித்து வீதியால் இழுத்துச் சென்று பகிரங்கமாகத் தூக்கிலிட்டனர். எனவே, தென்வியட்நாம் ஜனாதிபதி நூயன்வான் தியூவைப் போன்று கர்ஸாயையும் அமெரிக்கா தனது நாட்டுக்குக் கூட்டிச்செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் வியட்நாம் போர் போன்று ஆப்கான் போரும் அமெரிக்காவுக்குத் தோல்வியானதொன்றே எனக் கருதலாம்.

# நலிவு கண்ட ஈரானின் கதி இலங்கைக்கும் ஏற்படுமா?

மூலம் : மவ்பிம
தமிழில் : வீ.எஸ்.ரீ

தமது சர்வதேச நண்பர்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று கேள்விப்படும் செய்திகள் அவ்வளவு நல்ல செய்திகளாக அமையவில்லை. அவற்றிலொன்று ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாத் பற்றியதாகும்.

இரு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாது என்ற ஈரானிய அரசமைப்புச் சட்ட விதி காரணமாக அஹமது நிஜாத் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழக்க நேர்ந்தது. இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அஹமது நிஜாத்துக்கு மாறாக மிதவாத கொள்கை நிலைப்பாடு கொண்ட, அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளின் ஆதரவாளரான ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பெரு வெற்றி ஈட்டியுள்ளார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் அவர் ஈரானின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவுள்ளார். முதன் முதலாக நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் ஐ.நா.பொதுச்சபை மாநாட்டில் கலந்து கொண்ட சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி மஹிந்த, ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாத்தைச் சந்திக்க நேரந்தது. அந்த ஐ.நா. பொதுச்சபை மாநாட்டில் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளைக் கடுமையாக விமர்சித்து அஹமது நிஜாத் ஆற்றிய உரை ஜனாதிபதி மஹிந்தவை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அஹமது நிஜாத் போன்றே அமெரிக்க, மேற்குலக எதிர்ப்பு அணியில் செயற்பட்ட வெனிசியூலா ஜனாதிபதி சாவேஸ், லிபியத் தலைவர் கடாபி, மியன்மார் நாட்டின் தான்ஸ்வே ஆகியோர் ஜனாதிபதி மஹிந்தவை தமது அணியில் இணைந்து கொண்ட புதிய தலைவர் என்ற ரீதியில் கணித்தனர். மஹிந்தவின் அழைப்பையேற்று ஈரானியத் தலைவர் அஹமது நிஜாத் இலங்கைக்கு பயணம் செய்ததுடன் மஹிந்தவை அருகில் வைத்துக் கொண்டே அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளைக் கடுமையாகத் தாக்கி விமர்சிக்கவும் செய்தார். பின்னர் ஜனாதிபதி மஹிந்த ஈரானுக்குச் சென்ற போது, அமெரிக்க மேற்குலக நாடுகளை எதிர்க்கும் அணியில் இணைந்து கொண்ட புதிய தலைவரென மஹிந்தவுக்கு ஈரானிய ஊடகங்கள் புகழாரம் சூட்டி செய்தி வெளியிட்டன.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே மஹிந்த இலங்கையின் ஜனாதிபதியாக முதன் முதலில் பதவியேற்றார். அதேவேளை அந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதத்தில் ஈரானிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார் அஹமது நிஜாத். அதே சமயம் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இடம்பெற்ற ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் போட்டியிட்டு பெரு வெற்றியீட்டிய அஹமது நிஜாத்தின் வெற்றி வழங்கிய உற்சாகத்துடனேயே ஜனாதிபதி மஹிந்த 2009 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் நம்பிக்கையுடன் முன்னின்றிருக்கக்கூடும். 2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டுப்பற்று மற்றும் இஸ்லாமிய மதவாதம் என்பனவே அஹமது நிஜாத்தின் [illegible] [illegible] றும் மேற்குலக நாடுகளை ஈரானின் எதிரிகளாக நிஜாத் விமர்சித்து வந்த போதிலும் ஈரான் நாட்டின் எதிர்க்கட்சிகளோ நிஜாத்தின் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கை நிலைப்பாடு ஈரானுக்குப் பல வகைகளில் பாதிப்பை ஏற்படுத்துமென விமர்சித்து வந்தன. நிஜாத்தின் அடிப்படை தேசப்பற்று நிலைப்பாட்டிலிருந்து நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாத்து ஈரானை உலக அரங்கில் பலம் மிக்க நாடாக மாற்றியமைக்க வேண்டுமென அவை வலியுறுத்தி வந்தன. இதன் காரணமாக நாட்டின் எதிர்க்கட்சிகள் அமெரிக்காவின் கைப்பொம்மைகளாகச் செயற்படுவதாக அஹமது நிஜாத் குற்றம் சுமத்தி விமர்சித்து வந்தார்.

2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் ஊழலும், மோசடிகளும் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டி ஈரானிய பொதுமக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட வேளை, பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டும், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தும் அஹமது நிஜாத் மக்கள் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கினார். அரசுக்கு எதிரானவர்களுக்கு தேசத்துரோகிகள் பட்டம் சூட்டியதுடன் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளைப் பயமுறுத்தும் விதத்தில் ஈரான் அரசு அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கவுள்ளதாக அறிவித்ததுடன் அது தொடர்பாக ஆர்வம் காட்டிச் செயற்பட்டும் வந்தார் ஜனாதிபதி அஹமது நிஜாத். அந்த முடிவுக்கு எதிராக அமெரிக்கா ஐ.நா.சபையைப் பயன்படுத்த முயன்றதையடுத்து அஹமட் நிஜாத் சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவு கோரத் தலைப்பட்டார். ஈரானுக்கு ஆதரவு வழங்குவதாகக் காட்டிக்கொண்டு சீனாவும் ரஷ்யாவும் ஈரானின் பொருளாதார வளங்கள் அனைத்தையும் தமது தேவைக்குப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா ஈரானுக்கு எதிராகக் கொண்டு வந்த பொருளாதாரத் தடை பிரேரணை நிறைவேறுவதற்கு ஆதரவளித்தன.

ஈரான் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக ஈரானிய பொது மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. தாம் அனுபவிக்க நேர்ந்த அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்குக் காரணமான ஈரானிய அரசின் நாட்டுப்பற்று மற்றும் மதவாதக் கடுங்கோட்பாடு தமது வயிற்றுப் பசியை நிரப்பப் போவதில்லை என்பதை ஈரானியப் பொது மக்கள் நாளடைவில் உணரத் தலைப்பட்டனர். ஆனால் கடந்த வருடம் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஈரான் பெற்றுக் கொண்டதன் மூலம் அஹமது நிஜாத் அமெரிக்காவுக்கு எதிராக உலக நாடுகளின் ஆதரவை ஒன்று திரட்டி சர்வதேச ஆதரவைத் தனது பக்கம் திருப்ப முயல்வதாக ஈரானிய மக்கள் உணரத் தலைப்பட்டனர். றியோ 20 சர்வதேச நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசிய அஹமது நிஜாத் தற்போதைய அமெரிக்காவின் அதிகார பலத்துக்கு எதிராக ஏனைய நாடுகளின் ஆதரவைத் திரட்டி அமெரிக்காவின் சர்வதேச அதிகார பலத்தை நலிவுபடுத்தும் திட்டம் குறித்தும் கலந்துரையாடினர். அதற்காக ஈரானில் இடம்பெறவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டைப் பயன்படுத்திக் கொள்வதென இரு தலைவர்களும் இணங்கிக் கொள்வதாக இரு தலைவர்களும் கூட்டறிக்கை வெளியிட்டனர். அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் ஊடாக மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஈரானிய அரசமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்த அஹமது நிஜாத் முயற்சித்த போதிலும், பொருளாதாரத் தடையால் சிரமங்களை அனுபவித்து வந்த ஈரானியப் பொதுமக்களோ நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்தவே விரும்பினர். அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்துடன் முரண்பட்டுச் செல்லும் அஹமது நிஜாத்தின் அரசியல் நிலைப்பாடு ஈரான் நாட்டுக்கே நாசத்தை ஏற்படுத்துமென உணர்ந்து கொண்ட நெஜாத்தின் அரசில் அங்கம் வகித்த ஒரு கணிசமான அரசியல் வாதிகள் அவரது நிர்வாகத்துக்கு எதிராகக் குரல் எழுப்ப ஆரம்பித்தனர். இந்த நிலையில் ஈரானிடமிருந்து உலக நாடுகள் எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்ற அமெரிக்காவின் பொருளாதாரத் தடை உத்தரவு காரணமாக ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலை இலங்கை அரசுக்கும் ஏற்பட்டது.

அஹமது நிஜாத்தின் எழுச்சி தடைப்பட நேர்ந்தமைக்கான முக்கிய காரணம் அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடையே. அமெரிக்காவுடன் மோதிக் கொள்ளாமல் உலகின் ஏனைய நாடுகளுடன் இணக்கமான உறவு பேணி தேசப்பற்று நிலைப்பாட்டுக்குப் பதிலாக நாட்டின் புனரமைப்பையும், அபிவிருத்தியையும் முன்னிறுத்திச் செயற்பட்டு ஈரான் நாட்டை உலக அரங்கில் பொருளாதார ரீதியில் பலப்படுத்த வேண்டுமென்ற ஈரானிய எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு அந்த நாட்டு மக்களது ஆதரவைப் பெற ஆரம்பித்தமை அந்த வேளையிலேயே ஆகும். அந்தக் கொள்கை நிலைப்பாட்டை முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் நின்ற மிதவாதப் போக்குடைய ஹசான் ரவுஹான் ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றி ஈட்டிக் கொண்டதையடுத்து தமது அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியையும் புதிய ஜனாதிபதி ஹசான் ரவுஹானிடம் கையளித்து பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்று நிஜாத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஈட்டிக் கொள்ளும் எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றார். அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஈட்டிக் கொண்டதன் மூலம் அதிகார பலம் மிக்க நாடுகளுக்கெதிராக சண்டித்தனம் காட்ட முயன்ற ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாத்துக்கு ஏற்பட்ட கதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்லதொரு பாடமாகும். அத்தகைய பாடமொன்றைக் கற்றுக் கொண்ட அஹமது நிஜாத்தின் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு ஆதரவாக அவருக்குப் பின்னால் அணி திரண்டு நின்ற நட்புத் தரப்பினரில் லிபியத் தலைவர் முகமது கடாபி, வெனிசியூலா ஜனாதிபதி சாவேஸ் ஆகியோர் இன்று உயிருடன் இல்லை. மியன்மாரின் தான்ஸ்வே இப்போது பதவியில் இல்லை. இப்போது எஞ்சியிருப்பவர் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தங்களில் இருந்து நாட்டைக் காப்பாற்றும் 13 ஆவது திருத்தம்

## அமைச்சர் ராஜிதசேனாரட்ண உறுதி

ரம்பகன்

தமது இயக்கத்தின் விளைவு என்னவாக இருந்த போதிலும் 13ஆ அரசமைப்பு திருத்தம் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக நாம் தொடர்ந்து இயக்கம் நடத்துவோம். அது சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டை காப்பாற்றுவது மட்டுமன்றி ஒரு தேசம் என்ற முறையில் நாம் முன்நகர்வதற்கும் உதவும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசில் ஓர் அமைச்சராக இருப்பவரும், அரசமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கான முயற்சியைக் கடுமையாக எதிர்ப்பவருமான ராஜித சேனாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ஆங்கில பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர்காணலில் இருந்து சில பகுதிகள் வருமாறு:

மும்மணிகளைப் பூஜித்து பக்தி செலுத்துவதை விடுத்து இவர்கள் மஹிந்த சரணங் கச்சாமி, பஸில் சரணங் கச்சாமி, சமல் சரணங் கச்சாமி, நாமல் சரணங் கச்சாமி மற்றும் கோத்தா சரணங் கச்சாமி என்று சுலோகம்பாடி வணங்கலாமே.



13 ஆவது திருத்தமானது இனப் பிரச்சினைக்கான மிகச் சிறந்த தீர்வு என்று நாம் கூறவில்லை. ஆனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வுக்கு வருவதற்கான ஒரு சாதகமான முன்னெடுப்பு என நம்புகின்றோம். பல வருட காலமாக இனப் பிரச்சினைக்கு அரசொன்று தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால் எதிர்க்கட்சியிலிருக்கும் தலைவர்கள் எதிர்த்து வந்துள்ளனர். அரசியல் ஆதாயமே இதன் நோக்கமாக இருந்துள்ளது. உதாரணமாக பண்டாரநாயக்க திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தபோது ஜே.ஆர்.ஜயவர்த்தன அதனை எதிர்த்தார். அடுத்து ஜயவர்த்தன அந்த முயற்சியில் ஈடுபட்ட போது திருமதி சிறிமாவோபண்டாரநாயக்க அதனை எதிர்த்தார். இவ்வாறான அரசியல் விளையாட்டின் காரணமாக நாடும் மக்களும் இரத்தக் களரிகளால் மூழ்கடிக்கப்பட்டார்கள். விளைவு தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்தலானார்கள். இரு தரப்பிலும் சிங்கள- தமிழ் தீவிரவாதிகள். இந்தத் தீவிரவாதமானது ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் அமைந்தன. சிங்கள தீவிரவாதம் தமிழ் தீவிரவாதத்தையும் தமிழ்த் தீவிரவாதம் சிங்கள தீவிரவாதத்தையும் போஷித்துக் கொண்டிருந்தன.

ஒரு பௌத்தன் என்ற முறையில் ஏனைய மதங்களையும் இனங்களையும் மதிக்கின்றேன். நல்ல மனிதனாக வாழ பௌத்த மதம் எனக்கு கற்பித்துள்ளது.

நாங்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினரான வாழ்கின்றோம். ஏனைய இனங்கள் நசுக்கப்படுவதற்கு எதிராக நாம் நிற்க வேண்டும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. இந்த நிலைப்பாடுதான் எல்லா தத்துவங்களிலும் அது உலோகாயதமானால் என்ன, கற்பனாவாதமானால் என்ன, மார்க்ஸீயமானால் என்ன- இதுதான் போதிக்கப்படுகின்றது.

13ஆவது திருத்தமானது, எல்லாக் குடிமக்களையும் சமத்துவமாக நோக்குவதற்கான ஒரு படியாக நாம் நம்புகிறோம்.

### மாகாணசபை உறுப்பினர்களின் ஒழுக்கம் பற்றி

மாகாணசபை உறுப்பினர்கள் அண்மைக் காலமாக ஒழுக்கயீனமாக நடந்து கொள்ளும் சம்பவங்கள் பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது கூறியதாவது:

இந்தத் திருடர்கள் மாகாணசபைகளுக்கு மட்டும்தான் நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்படவில்லை என்று நினைக்கிறீர்களா?. சமூகத்தின் நிலைமைதான் இந்த சம்பவங்களால் பிரதிபலிக்கப்படுகின்றது. சமூகம் சீரழிந்துள்ளது-அரசியல் வாதிகளும் சமூகத்தின் ஒரு பகுதியினர்தான். சமூகம் மாறாதவரை இம்மாதிரி அதிகார பீடங்களில் ஊழல் தொடர்ந்து இருக்கவே செய்யும்.

அதிகாரப் பரவல் என்பது பணவிரயத்துக்கான முயற்சி என்று சிலர் வாதிடுகிறார்கள். அப்படியானால் உலகின் பல்வேறு நாடுகளில் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் ஏன் செயல்படுத்தப்பட்டுள்ளது? இது ஒரு சின்னநாடு. அதிகார பரவல் இங்கு சாத்தியமாகாது என்றும் சிலர் கூறுகிறார்கள். ஆனால் எவ்வாறு பெல்ஜியம், சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாடுகளில்அது வெற்றிகரமாகசெயல் படுத்தப்படுகின்றது? இந்தியாவை எடுத்துக்கொள்வோம்-பாண்டிச்சேரியிலும் கூட அதிகாரப் பரவல் முறையொன்று அமுலாக்கப்பட்டுள்ளது.

### பொதுஜன வாக்கெடுப்பு அவசியமா?

13 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பாக சிலர் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள். பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட சோல்பரி அரசமைப்புக்கு பொதுஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டதா? ஜனரஜ அரசமைப்பு தொடர்பாக பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டதா. ஜே.ஆர். காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டதா? இந்தத் திருத்தத்துக்கு மாத்திரம் ஏன் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள்?

பௌத்த மதத்தைப் பலப்படுத்தி மீட்டெடுப்பதற்கான சட்டங்களைக் கொண்டு வரும்படி பொதுபல சேனா மற்றும் பௌத்த அமைப்புகள் ஜனாதிபதியைக் கோரிவருவது பற்றி அமைச்சர்பதில் அளித்தபோது:-

புத்தபெருமான்கூட ஆட்சியாளர்களிடம் தான் விரும்பியதை செய்யும்படி கோரியதில்லை. பௌத்தர்களுக்கு புனிதமான ஜேத்தவனராம பீடம் பன்றிகள் அறுத்து கறியாக்கப்படும் ஓர் இடத்துக்கு அருகில் இருந்தது. அங்கு புத்தர் வாழ்ந்த போது அங்கிருந்த அரசன் தினமும் அங்கு சென்று வணங்கி ஆசிபெற்று வந்தான். பன்றிகள் கொல்களத்தை அங்கிருந்து அகற்றுமாறு அரசனிடம் அவர்எப்போதாவது கேட்டதுண்டா? ஆனால் தமது போதனைகள் மூலம் மிருகங்கள் கொல்லப்படுவதை தவிர்க்க அவர் வழிசெய்தார். எனவே பௌத்தம் இலங்கையில் பலம்பெற வேண்டும்மானால் புத்த தர்மத்தை அவர்கள் போதிக்க வேண்டும். ராஜபக்ஷ அரசினால் தான் எல்லாவற்றையும் செய்விக்க முடியுமானால் பௌத்தம், தர்மம், சங்கம் என்று கூறுவதில் என்ன பயன் இருக்கிறது. மும்மணிகளை பூஜித்து வணங்குவதை விடுத்து இவர்கள் மஹிந்த சரணம் கச்சாமி, சமல் சரணங் க்ச்சாமி, நாமல் சரணங் கச்சாமி மற்றும் கோத்தா சரணங் கச்சாமி என்று சுலோகம் பாடி வணங்கலாமே. இவ்வாறு தனிப்பட்ட ஒருவரில் தங்கியிருக்கும் போக்குதான் ஜனாதிபதி முறையின் விளைவாகவும் கட்சி முறையின் வீழ்ச்சியாகவும் வாய்த்துள்ளது. தனிப்பட்ட ஒருவரின் கொள்கைகள் கட்சியின் கொள்கை ஆகியுள்ளது. ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட கொள்கைகளுடன் சந்திரிக்காவை ஆதரித்து நின்ற கும்பல் இப்போது அதற்கு நேர்மாறான கொள்கையுடன் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து நிற்கின்றது.

என்னைக் பொறுத்தவரை நான் ஒருபோதும் என் கொள்கைகளை மாற்றிக் கொண்டதில்லை.

### மஹிந்த சிந்தனையும் அதிகாரப் பகிர்வும்

மஹிந்த சிந்தனை தொடர்பான கேள்விக்கு அவர் கூறிய பதில்:

அதிகார பகிர்வை மஹிந்த சிந்தனை மிகத் தெளிவாக அங்கீகரித்துள்ளது. நாம் கூட்டணி அரசில் சேர்ந்த போது பதவிகளை எதிர்பார்க்கவில்லை. இரண்டு நிபந்தனைகளை முன்வைத்தோம். போரை முடிவுக்கு கொண்டு வருதல்; இனப் பிரச்சினைக்கு தீர்வு காணல் என்பவையே அவை. இது குறித்த ஆவணத்தை விரைவில் நான் வெளியிடுவேன். இன்று 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் சிங்கள தேசியவாதிகள் அனைவருமே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வுகாண்பது என்பதை பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சகல கட்சி மாநாட்டில் ஒப்புக்கொண்டிருந்தார்கள். இவர்களில் ஜாதிக ஹெல உறுமயவும் அவர்களின் ஆலோசகர் பேராசிரியர் நலின் டி சில்வாவும் அடங்குவர். சிங்கள தலைவர்கள் பல தவறுகளை இழைத்துள்ளார்கள். அதில் நான் சம்பந்தப்பட விரும்பவில்லை. எனது கைகள் சுத்தமானவை. இரத்தக் கறைபடியவில்லை. விளைவுகள் எதுவானாலும் சரியானதை-தவறானதை எடுத்துக்கூறியாக வேண்டும். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்படுவதை அநேகர் எதிர்த் தார்கள். அப்படி எதிர்த்தவர்கள் அனைவரும் இன்று வரலாற்றின் குப்பைக் கூடையில் வீசப்பட்டு விட்டார்கள். ஆனால் அதற்காகப் பாடுபட்டவர்கள் இன்றும் நினைக்கப்படுகிறார்கள். 40 வருடங்கள் பிடித்தன தமிழ் மொழி தனது சமாந்திரத்தைப் பெறுவதற்கு. அதனை ஒழித்துக் கட்டிய அதே அரசியல் வாதியின் மகளால்தான் அது மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. எனவே சரியானது அதற்குரிய இடத்தை எப்படியும் பெற்றேதீரும் என்றார். (ப)

---

# தசாப்த காலக் கல்விப் பணியில் கரவெட்டி , வதிரி, திருஇருதயக் கல்லூரி

கர்ணன்

அன்பு எதையும் வெல்லும் என்ற மகுட வாசகத்தை தாரக மந்திரமாக மாணவ உள்ளங்களிலே விதைத்து நிற்கும் இக்கல்லூரி கரவெட்டிப் பிரதேச மக்களுக்கு அருளாட்சி செய்யும் புனித அந்தோனியார் ஆலயத்தின் இறைமிகு நிழலில் பல்வேறு உயர் குறிக்கோள்களுடன் ஐரோப்பியரான அருட்திரு பெருசல் அடிகளாரால் 21.09.1913 இல் உருவாக்கப்பட்டது.

திரு இருதயக் கல்லூரி தனது 100 ஆவது ஆண்டு கல்லூரி தினத்தை நேற்று வெள்ளிக்கிழமை இறை வழிபாட்டுடன் கொண்டாடியது.

இக் கல்லூரியின் கல்லூரி தினம், மனித வாழ்வியல் இயக்கத்துக்கு இறைவனால் கொடையளிக்கப்பட்ட இதயத்தைதனது பெயராகக் கொண்ட திரு இருதய தினத்தைப் போற்றும் தினமாகவே கொண்டாடப்படுகின்றது. இக் கல்லூரி தினம் ஆண்டு தோறும் ஜூன் மாத இறுதி வெள்ளிக்கிழமைகளில் கொண்டாடப்படுவது வழமை. இக் கல்லூரிச் சின்னத்தில் சிலுவையுடன் கூடிய இருதயம், செந்தாமரை, விவிலிய நூல் ஆகியன காணப்படுகின்றன. இவை மாணவர்களுக்கு பல உள்ளார்ந்த விடயங்களைச் சொல்லாமல் சொல்லி வழிப்படுத்துகின்றன.

திரு இருதயம் அன்புள்ளங்களை, அதன் இயக்கத்தை வெளிக்காட்டி நிற்பதோடு, .பரிசுத்தத்தையும் புனிதத்தையும் பிரதிபலிக்கின்றது. வாயிலிருந்து வருபவை யாவும் இதயக் கூடையில் எடுத்தவையாதலால் என்றும் நிலைத்து நிற்கும். அதாவது மாணவச் சமூகம் கல்வியை வாயினால் உரத்து [illegible] ஊடாக அவை மனப்[illegible]கப்பட்டு அவர்களுடைய கற்றல் தேவைகள், வாழ்வியலின் அறிவியல் பிரயோகங்கள் ஆகியவற்றுக்கு அவரவருடைய வாழ்வு உள்ளவரை நிலைத்து நிற்கும். இதேபோன்று செந்தாமரையானது, சேற்றிலே முளைப்பது. சேற்றிலே உயர்ந்து நிற்பது. சேறு படியாதது. எந்தச் சூழலில் கற்கின்ற மாணவனாயினும், கல்லூரியில் கற்பதற்காக வருபவர் செந்தாமரையைப் போன்று சிறுமைகளை, தீமைகளை, பாவங்களைக் கடந்து கல்வியிலே உயர்ந்து, சிறந்து சமூகத்தில் முன்னுதாரணமாகத் திகழக்கூடியவராக உருவாக வேண்டும் என்பதைச் செந்தாமரை குறித்து நிற்கின்றது.

விவிலிய நூலானது விசுவாசத்தின் அடிப்படையில் மாணவரின் உள்ளார்ந்த உணர்வுகளை உணர்ந்து, [illegible] கற்பியுங்கள் என்பதனை இப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சுட்டி நிற்கின்றது.

''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றையவை''

என்ற பொய்யாமொழியைப் புலப்படுத்துகின்றது. இக் கல்லூரி தினத்திலே இக் கல்லூரி அருகில் இருக்கும் ஆலயத்தின் அருட்தந்தையர்கள், ஆரம்பப் பிரிவுடன் இணைந்திருக்கும் லூர்துமட அருட் சகோதரிகள், பழைய மாணவர்கள், மாணவர்கள் அனைவரும் கல்லூரியின் தியான மண்டபத்தில் ஒன்று கூடி அதிகாலையில் அருட் தந்தையர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலிப் பூசையில் கலந்து கல்லூரியின் எதிர்காலச் சிறப்புக்கு பிரார்த்தித்ததோடு மாணவர்களின் கல்விச் சிறப்புக்கும் ஏனையவர்களின் வாழ்வியல் சிறப்புக்கும் இறைவனிடம் மன்றாடினார்கள். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஒன்றுகூடலில் உரைகள், கலைநிகழ்வுகள் இடம்பெற்று விருந்துபசாரத்துடன் நிறைவு பெற்றது. இத்தினம் அடுத்த கல்லூரித் தினம் வரை அனைவர் மனங்களிலும் பசுமையான நினைவுகளை உருவாக்கும் என்பது நிச்சயம்.

கடந்த 100 ஆண்டுகளாக வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தில் தன்னையும் இணைத்து இறை விழுமியங்கள் ஊடாக அறிவாற்றல் எழுச்சியுடன் கூடிய இளம் சமுதாயத்தை உருவாக்கி இப்பகுதி வாழ் மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்து நிற்கும் இக்கல்லூரி, இந் நூற்றாண்டின் பதிவுகளை அடுத்த தலைமுறைக்கு இட்டுச் செல்வதற்கான சிறப்பு ஏற்பாடுகளை பழைய மாணவர்களும் கல்லூரி நிர்வாகமும்இணைந்துமேற்கொண்டு வருகின்றனர். இவ்வாண்டு கல்லூரி வரலாற்றில் சிறப்பான ஆண்டாக மிளிர இறையாசி வேண்டி நிற்கின்றோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி நிர்வாக சேவை வழிகாட்டல் செயலமர்வு; சுற்று-02

* யாழ்ப்பாணத்தில்: 06.07.2013 சனி காலை 8.30 மணி
* மட்டக்களப்பில் : 29.6.2013 சனி காலை 8.30 மணி (இன்று)

ஏற்கனவே பதிவு செய்தவர்களை விடப் புதிதாகக் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

பா. தனபாலன் (பணிப்பாளர்)
T.P: 0779360607 ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

(38746) (10,6,3)

## ரி.எம்.எஸ். நினைவாக நாளை இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 29

இன்னிசைப் பாடல் மன்னன் அமரர் ரி.எம். சௌந்தரராஜனின் நினைவு நாள் நிகழ்வு யாழ். வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவில் வீதி வள்ளுவன் சனசமூக நிலையத்தில் நாளை ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெற வுள்ளது. (எ)

## பரிசளிப்பு விழா

கரணவாய் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.சண்முகநாதன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறிகரன் கலந்துகொள்வார். (ந-8)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் இராமலிங்கம் வீதியில் இருந்து செல்லும் அம்மன் வீதியில் நூறு யார் தூரத்தில் சந்திரசேகரனார் வளவு ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:077 801 2242

(38742)(5-6)

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய டாசோன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777448689

### வீடு விற்பனைக்கு

திக்கம் பாடசாலைக்கு மிக அருகில் இரண்டு (2) பரப்புக் காணி புதிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 488 2394

### வாடகைக்குத் தேவை

கொழும்பு நிறுவனம் ஒன்றுக்கு இரண்டு பெரிய லொறிகள் நிறுத்துவதற்கும், தங்குவதற்கும் யாழ். நகரில் இருந்து 10 km இற்குள் வீடு வாடகைக்குத் தேவை. (பழைய கட்டடமும் ஏற்றுக்கொள்ளப்படும்)
தொடர்பு: 077 634 3232 (38744) (10,6,3)

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கு, மீசாலை எனும் முகவரியுடைய தவயோகராசா உமாராணி என்பவரின் தே. அ.அ. (638650509V) சாரதி அனுமதிப் பத்திரம் என்பன யாழ் நகரில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன்தொடர்புகொள்ளவும்.
தொடர்பு 0776466208,0777742942

### காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குளி விஸ்தீரணம் கொண்ட 5அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 711 1400

### காணி விற்பனைக்கு

நீர்வேலி சந்திக்கு அருகில் 36 பரப்பு கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- S.அன்ரனி 0777 248709

### மணமகன் தேவை

★ 83 இல் பிறந்த 4 இல் சூரியன் செவ்வாய் 12¼ பாவமுடைய அமெரிக்க பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு அமெரிக்கா, கனடாவில் மணமகன் தேவை.
★ 87 இல் பிறந்த 7 இல்செவ்வாய் 37½ பாவமுடைய ஆஸ்திரேலிய பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு ஆஸ்திரேலியாவிலோ, உள்நாட்டிலோ ஐக்கியமான, இந்தியன் மணமகன் தேவை.
தொடர்பு: கலிங்கன் திருமண சேவை
இல 435/3, கோயில் வீதி, நல்லூர்.
077 607 0862

### மரத்தளபாட உற்பத்தி இயந்திரங்கள் விற்பனைக்கு

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரத்தளபாட உற்பத்தி இயந்திரங்கள் மலிவான விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: லிப்ரா மரத்தளபாட நிலையம், 61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (பஸ்ரியன் சென்ரர்)
(38729)(3.6.4) T.P:0773001763

### காணி விற்பனைக்கு

வண்ணார் பண்ணை, சிவன் கோயில், வைத்தீஸ்வரா கல்லூரி முன்னைய ஈழநாடு அலுவலகம் ஆகியவற்றிற்கு அருகில் உள்ள வெள்ளாந்தெருவில் 2 பரப்பு 13 குளி காணி விற்பனைக்குண்டு. This property is very close to grandbazar and Ideal for Business OR Residential use.
**For Details:**
Contact- 077 899 8659, 021 221 2115, 021 490 7069
(c/10021)(3.7.11)

### Soft view computer center

கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
102, Main Street Jaffna. E.C Colin
T.P:021 222 4885 0779053545
யாழ் திருமறைக் கலாமன்றம் அருகில்
(இரவு நேரவகுப்புக்கள் நடைபெறுகின்றன.)




இனிய இல்லற வாழ்வில் இரண்டாம் ஆண்டு தொடக்க இனிய நன் நாளில்
**ஸ்ரீகுமரன் - பிரதீசா**
தம்பதிகளை சகல செல்வங்களும் பெற்று சிறப்போடு வாழ இணுவில் கந்தன் அருளுடன் வாழ்த்துகின்றோம்.
அப்பா – அம்மா (புவனேஸ் சின்னக்கிளி),
தம்பி (கிருஷன் சுயன்),
விஜய மகாலட்சுமி (மாமி).
இணுவில் மேற்கு.
(38626)(25.6.7)




**LAST CALL FOR SEP'13 INTAKE**

STUDY IN CANADA STEP UP IN LIFE!
Brock University | Conestoga | Niagara College | Lambton | Seneca | Fanshawe College

## CANADIAN ACADEMIC INSTITUTIONS CERTIFIED COUNSELLORS - Not just Agents.

*Why Canada?*
- Immigration Friendly Laws. Economical cost of living & affordable tuition fee
- **Earn-While-U-learn Programs**
- World's soundest banking system (Rated by World Economic Forum - Geneva)

*Why Senator?*
- Since 1998 - Asia's largest & Oldest Centre for Canadian Education
- COMPLETE Services- Admission to graduation, travel & stay, change of status
- On spot interview and admission services,
- Authorized admission Counsellers, not Agents

*SOME OF OUR JAN&MAY '13 STUDENTS*



| Harish | Harini | Keerthi | Preethi | Jaidushia | Karthik |
|---|---|---|---|---|---|
| PG-Pressure Systems | Masters in Mech Engg. | MBA-Univ. of Victoria | Internetworking | Masters in Info. Security | ITP Course |
| Conestoga College | Concordia University | (CAD 9000 scholarship) | Alberta University | Concordia University | Lambton College |

**SPOT INTERVIEW ON 29th, &30th JUNE 2013 From 10.00am to 5.00pm at 49,Subash Tourist Hotel,Victoria Road,Jaffna.**

**SENATOR**
CENTRE for CANADIAN EDUCATION
An ISO 9001:2008 Organisation
Astra International Education & Logistics Pvt.Ltd.
33-A,1/1,W.A.Silva MW,Colombo-06
+94 077 271 5015, 075 848 9252, 011 205 ... 454
www.TheSenator.org, info@...org
(C/10127)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### கலைப்பீடம்

முதலாம் வருட கலைத்தேர்வு – 2011 இரண்டாம் அரையாண்டு

முதலாம் வருட நுண்கலைத்தேர்வு – 2011 இரண்டாம் அரையாண்டு
(இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)

மேற்படி பரீட்சைகளின் பாடங்கள் கீழே குறிப்பிட்ட திகதியில் நடைபெறும்

| திகதி | நேரம் | பரீட்சை மண்டபம் | பாடம் |
|---|---|---|---|
| 06.07.2013 சனிக்கிழமை | 9.00 a.m. – 11.00 a.m. | இராமநாதன் மண்டபம், பொருளியற் துறை மண்டபம், புதிய கலைப்பீட மண்டபம் | ACLA 12010 - Computer Literacy |
| | | இரசாயனவியற் துறை விரிவுரை மண்டபம் I & II | ACLA 12010 - Computer Literacy (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| | 12.30 p.m. – 2.30 p.m. | இராமநாதன் மண்டபம், பொருளியற் துறை மண்டபம், புதிய கலைப்பீட மண்டபம் | AEGA 12010 - English for General Purposes |
| | | | ABFA 12010 - Reading and writing skills |

தகுதியற்ற பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்

பதிவாளர் (C-10134)

## இன்று முதல் விற்க, வாங்க

WWW. JAFFNA BROKERS.COM

கணினி தொடர்புகள் வேகமாகப்பரவிவரும் இவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் "இன்ரநெற்" மூலம் வீட்டில் இருந்தபடியே, உங்களுக்குத் தேவையான இடத்தில் **வீடுகள், காணிகள், கடைகள்** வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் உங்கள் தேவைகள் நிறைவு செய்யப்படும்.

**குறிப்பு: பதிவுக் கட்டணம்இல்லை**
**உங்கள் முடிவே இறுதியானது**

எங்கள் தொடர்புகளுக்கு:
WWW. JAFFNA BROKERS.COM
362, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(மெகா ஹோட்டல் உட்புறம்)
தொ.பே. 021 222 9942, 077 008 1806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அம்பாறை மாவட்டத்தில் அமைகிறது ஊடக இல்லம்

அம்பாறை,ஜூன் 29
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் நலன் கருதி ஊடக இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.
அம்பாறை மாவட்டப் பிரதேச ஊடகவியலாளர் சங்கத்தின் முயற்சியின் பயனாக அம் பாறை நகரில் இந்த ஊடக இல்லம் நிர்மாணிக்கப்படவுள்ளது.
ஊடக வளநிலையம், பயிற்சிக் கூடம், கூட்ட மண்டபம், தங்குமிட வசதிகளுடன் கூடிய மாடிக் கட்டடமாக இந்த ஊடக இல்லம் அமைக்கப்படவுள்ளது என்று சங்கத் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான திலக் அழகக்கோன் தெரிவித்தார்.
இந்த ஊடக இல்ல நிர்மாண வேலைகளுக்கான உத்தேச செலவினமாக ஒரு கோடி ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். இந்த ஊடக இல்லத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-30)



மட்டக்களப்பு மாவட்டத்தின் சோளம் அறுவடை விழா ஏறாவூர் தைக்கா வீதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத் கலந்துகொண்டார்.

## திருகோணமலை வீதிகளில் ஒளிராத மின் விளக்குகள்



திருகோணமலை நகர சபைக்குட்பட்ட லவ்லேன்வீதி, தக்வா நகர்பகுதி தெரு மின் விளக்குகள் கடந்த ஒரு வருட காலமாக மின் ஒளி தருவதில்லை என்று பிரதேச பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
2013 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சுதந்திர தினக்கொண்டாட்டத்தை முன்னிட்டு மின்சார தெருவிளக்கு திருத்த வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்தும், இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து லவ்லேன், தக்வா நகர் வீதிகள் பயனடையவில்லை. இதனால் அந்தப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. அதனால் திருடர்களின் தொல்லையும் அதிகரித்துள்ளது.
இந்த விடயம் குறித்து திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து செயலாளர் ஏ.எல்.எம். நபீல் எழுத்து மூல அறிவிப்பை பிரதேச மின் பொறியியலாளருக்கு விடுத்திருந்தும் இது வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
கிழக்கு மாகாண பிராந்திய மின்சார சபையின் பிரதான அலுவலகம் இந்த வீதியிலேயே அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-40)

## வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

திருகோணமலை,ஜூன் 29
இலங்கை ஐ. ஓ. சீ. நிறுவத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மொறவெவ மஹதிவுல்வெவ வைத்தியசாலைக்கு 80 லட்சம் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டது.
திருகோணமலை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய வைத்தியசாலையாக மஹதிவுல்வெவ கிராமிய வைத்தியசாலை காணப்பட்டது.
அதனைக் கவனத்தில் கொண்டே இந்த வாகனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)




## அபிவிருத்தி காணாத மல்லிகைத்தீவு

### கவனத்தை திருப்புமா மூதூர் பிரதேச சபை



> மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை அங்குள்ள இரண்டு பொதுக் கிணறுகளிலிருந்து தான் அவர்கள் பெறுகின்றனர்.

திருகோணமலை, ஜூன் 29
மூதூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லிகைத்தீவு கிராமத்தின் அபிவிருத்தி மற்றும் அந்தப் பகுதி மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டப்படுவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
மல்லிகைத்தீவு தமிழ் மக்களின் வரலாற்றுப் பிரதேசம். அங்கு 155 குடும்பங்கள் வசித்து வருகின்றன.
இந்த மக்களுக்குத் தேவையான குடிதண்ணீரை அங்குள்ள இரண்டு பொதுக் கிணறுகளிலிருந்து தான் அவர்கள் பெறுகின்றனர்.
இந்தக் கிணறுகள் நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தவை. அந்தக் கிணறுகளை புனரமைப்பதற்கு கூட மூதூர் பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவில்லை.
அங்குள்ள மல்லிகை சனசமூக நிலையம் கடந்த இரண்டு வருடங்களாக எந்த விதமான அபிவிருத்தியுமின்றி செயலற்றுக் காணப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.
மல்லிகைத்தீவிலுள்ள நடேசபுரம் பகுதியில் 40 வீடுகள் இருக்கின்றபோதும், அந்தப் பகுதிக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.
மின் இணைப்புக்கு அங்குள்ள பலர் விண்ணப்பித்தும் இது வரை மூதூர் மின்சார சபையினால் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
எனவே மூதூர் பிரதேச சபை இனியாவது மல்லிகைத்தீவு கிராமத்தின் மீது தனது பார்வையை செலுத்துமா? என்று மக்கள் கேட்டுள்ளனர். (ச-40)

## சம்பூர் மக்களுக்கு தொடர்ந்து அகதிமுகாம் வாழ்க்கை

### அவலத்தை விளக்குகிறார் நாகேஸ்வரன்



சீதனவெளியில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டபோது......

திருகோணமலை, ஜூன் 29
சம்பூர் மக்கள் இடம்பெயர்ந்து ஏழு வருடங்கள் கடந்தும் இன்னமும் அகதி முகாம்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன் தெரிவித்தார்.
சம்பூர் மக்களின் இன்றைய நிலை, மீள் குடியேற்றம் என்பன குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
சம்பூர் மக்களை மாற்று இடங்களில் குடியேற்றிவிட்டு சம்பூர் பிரதேசத்தை முழுமையாக அபகரிப்பதற்கான திட்டம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
அரச உயர் அதிகாரிகள் இதற்காக பல வழிகளிலும் முயன்று தோற்றுப் போயுள்ளனர்.
2007 ஆம் ஆண்டில் சம்பூர் என்று பெயர்பலகையிட்டு சம்பூருக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி மக்களை அழைத்து வந்து கிளிவெட்டி, பட்டித்திடல் முகாம்களில் இறக்கிவிட்ட நாள் தொடங்கி இன்றுவரை பல ஏமாற்று நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. மக்களின் விருப்பத்திற்கு மாறாக முகாம்கள் மாற்றப்பட்டன. புதிய புதிய சூழலுக்கேற்ப வாழ்வதற்கு மக்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.
மாற்று இடங்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பதற்காக பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.
மாற்று இடங்களில் மக்களை மீள் குடியேற்றும் திட்டத்தில் முதலில் சின்னக்குளமும், இறால்குழியும் தெரிவு செய்யப்பட்டன. பின்னர் சீதனவெளி, வேம்படித்தோட்டம், குறவன்வெட்டுவான் போன்ற இடங்களும் தெரிவுசெய்யப்பட்டன. இதில் இறால்குழியைத் தவிர ஏனைய பிரதேசங்கள் மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற இடங்களாகும்.



சொந்த இடத்துக்குத் திரும்பாது அகதி முகாம்களில் வாழும் சம்பூர் மக்கள்.....

இவ்வாறான மாற்று இடங்களில் குடியேறி தமது எதிர்காலத்தை [illegible] மக்கள் விரும்புவார்களா? அவ்வாறெனில் சீதனவெளியில் எவ்வாறு மக்கள் குடியேற விரும்பினர் என்ற கேள்வியும் எழுகின்றது.
பொருளாதார நிலை குடும்ப சூழல், விரக்தி இவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் வேறு வழியின்றி சீதனவெளிக்குச் செல்ல மக்கள் முடிவு செய்தனர்.
20 பேர்ச் காணியும் ஒரு சிறிய நிரந்தர வீடும் மட்டும் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப போதுமானதல்ல. அதிலும் பெரும்பாலான காணிகளில் கருங்கற்கள் நிறைந்து காணப்படுகின்றன. சிலர் அவற்றை உடைத்து விற்றுத் தற்போது சீவிக்கின்றனர். இரண்டு கிணறுகள் மட்டுமே உண்டு. அதுவும் கோடை காலத்தில் பாவனைக்குப் போதாது.
இவ்வாறு இவர்களது வாழ்வாதாரத்துக்கு எந்த வளமும் இல்லை. பயிர்ச்செய்கைக்கென வளமான நிலம் இல்லை. சம்பூர் மக்கள் மாற்றிடங்களில் நிரந்தர வீடுகளுடன் மீள் குடியேற்றம் என்ற பொறிக்குள் அகப்பட்டு தமது வாழ்வையும், தமது குழந்தைகளின் எதிர்காலத்தையும் பலி கொடுக்க விரும்பவில்லை.
தமது பூர்வீக நிலங்களில் தாம் மீண்டும் வாழவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் அவர்கள் இருக்கின்றனர்.
அரச அதிகாரிகளின் பேச்சைக் கேட்டு மாற்றிடங்களில் குடியேறியிருந்தால், கடற்கரைச்சேனை மீள் குடியேற்றம் நடைபெற்றிருக்காது.
அண்மையில் குடியேற்றம் செய்யப்பட்ட நவரத்தினபுரம், கூனித்தீவு கிராமங்களும் குடியேற்றப்பட்டிருக்காது. அனைவரும் மாற்றிடங்களில் தம் வாழ்வைத் தொலைத்திருப்பர்.
இடம்பெயர்ந்த சம்பூர் மக்களும் அவர்களின் முன்னோடிகளும் இணைந்துதான் இந்த உறுதியான நிலைப்பாட்டில் உள்ளனரே தவிர அரசியல்வாதிகளின் பேச்சைக் கேட்டு அல்ல, என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தான் உணரவேண்டும்.
எனவே சம்பூர் மக்கள் எப்போதும் ஏமாறப்போவதில்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**இடபர்:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.

**மிதுனர்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும்.

**கடகர்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். நீங்கள் நகைச்சுவைக்காகச் சொல்லக் கூடிய சில கருத்துக்கள் கூட தவறாகக் கருதப்பட வாய்ப்பிருக்கிறது.

**சிங்கர்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். கோபம் நீங்கும்.

**கன்னி:** நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**நாளை**

ஆனி-16 ஞாயிற்றுக்கிழமை 30.06.2013
திதி: அட்டமி பி.இ. 04.12 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ. 08.14வரை
சுபநேரம்: 08.26 - 10.26 வரை
இராகுகாலம்: 04.26 - 05.56 வரை

**துலாபர்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகர்:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.

**மகரர்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கும்பர்:** முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வந்துச் செல்லும். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**மீனர்:** மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து விலகும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | | 9 | 7 | | | | |
| | 5 | | | | | 6 | | 1 |
| | 7 | 8 | 6 | | | | 4 | 9 |
| | | | 3 | 2 | | | | |
| | 2 | | 8 | | 9 | | | |
| | 1 | | | 6 | 5 | | | |
| 9 | 4 | | | | 8 | 7 | 5 | |
| 5 | | 1 | | | | | 8 | |
| | | | | 9 | 6 | | 1 | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 1 | 8 | 3 | 4 | 7 | 6 | 9 |
| 8 | 7 | 4 | 5 | 6 | 9 | 1 | 3 | 2 |
| 3 | 9 | 6 | 1 | 7 | 2 | 5 | 8 | 2 |
| 6 | 3 | 7 | 4 | 9 | 1 | 2 | 5 | 8 |
| 4 | 8 | 2 | 6 | 5 | 3 | 9 | 7 | 1 |
| 1 | 5 | 9 | 7 | 2 | 8 | 3 | 4 | 6 |
| 7 | 1 | 5 | 2 | 4 | 6 | 8 | 9 | 3 |
| 2 | 4 | 3 | 9 | 8 | 7 | 6 | 1 | 5 |
| 9 | 6 | 8 | 3 | 1 | 5 | 4 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையால் இக்ராட் (ICTAD) CII அல்லது அதற்கு மேற்பட்ட பதிவுச்சான்றிதழ் வைத்திருப்போர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கீழே காட்டப்பட்டவாறு கேள்விப்பத்திரக் கட்டணத்தினையும் கேள்வி வைப்புப்பணத்தினையும் அலுவலக் நேரத்தில் செலுத்துவதன் மூலம் கேள்விப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-01.07.2013தொடக்கம் 14.07.2013
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :-15.07.2013நண்பகல் 12மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :-15.07.2013 பிற்பகல் 1.30
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
6. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை செயலாளர் பிரதேசசபை புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்வதுடன் மறுபிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப் படாத கேள்விப்பத் திரக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | சுற்றுவேலி புனரமைத்தல் - தலைமை அலுவலகம்,புதுக்குடியிருப்பு | 15500.00 | 1000.00 |
| 02. | வாகனத்தரிப்பிடம் புனரமைத்தல் - தலைமை அலுவலகம், புதுக்குடியிருப்பு. | 7500.00 | 1000.00 |
| 03. | மந்துவில் சந்தை திருத்தமும் சுற்றுவேலி அமைத்தலும் | 8500.00 | 1000.00 |
| 04. | கொல்களம் அமைத்தல் - கள்ளியடி, புதுக்குடியிருப்பு | 8500.00 | 1000.00 |

செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு. (C/10120)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாள் வயதுடைய Parvo Vaccine ஏற்றப்பட்ட Doberman நாய்க்குட்டிகளும் 1½வயதுடைய Rottweiller ஆண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0778185543 (37625) (3.6.711)

**சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்**

4,8,16 தொன் லிப்டுகள்(Hydraulic Hoist)
எயர் பிரசர் (Air Compressor)
பிரசர் பம்ப்(Washing/High pressure pumps)
கிறீஸ் பம்ப்(Grease pumbs/Heavy duty)
வெக்யூம் கிளீனர்ஸ்(Vacuum Cleaners)
ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட்(Hydraulic)
வீல் அலைன்மன்ட் (Wheel Aligner),Tyre Changer, Tyre balancer
சகல திருத்துதல் வேலைகளும் செய்து தரப்படும்.

லீசிங் வசதி செய்து தரப்படும்.

SN-Tech
94,4ஆம் குறுக்குத் தெரு, (அடைக்கல மாதா ஆலய வீதி)
யாழ்ப்பாணம். (38734)(3.5.6)
தொடர்பு: 077 687 2656, 077 726 3181

**ஈராண்டுத் திதி நினைவில் இதய அஞ்சலி**

மண்ணின் மடியில்
29.07.1925

விண்ணின் பிடியில்
22.06.2011



திருவாட்டி
வித்துவான் மகேஸ்வரி இராசேந்திரம்
(இளைப்பாறிய ஆசிரியை, செங்குந்த இந்துக்கல்லூரி)

எந்நாளும் நினைத்திருப்போம் இணையும் சாந்தி
சீரோங்கு வைத்தியத்திற் சோதிடத்தில்
சிறந்துமிளிர் நாயன்மார் கட்டிற தோன்றி
பாரோங்கு மண்ணாமலை படித்துத் தேறி
பாங்கினொடு செங்குந்தாப் பள்ளி தன்னில்
தாரோங்கு பணிகளினைத் தகைவா யாற்று
தாயே எமைத் தவிக்கவிட்டுப் பிரிந்து சென்றே
ஈராண்டு சென்றாலும் இகவாழ் வினிலே
எந்நாளும் நினைத்திருப்போம் இணையும் சாந்தி.

கலாநிதி தி. செந்தில்நாதி
50,5-2 நெல்சன் பிளேஸ்
வெள்ளவத்தை கொழும்பு-06.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வரலாற்று தவறிழைத்தது சு.க.

## 13 விடயம் குறித்து ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன் 29
13ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானமெடுத்து இரண்டாவது வரலாற்றுத் தவறை இழைத்துள்ளதுடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணம் தம்மிடம் இல்லை என்பதையும் சுதந்திரக் கட்சி அரசு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

'திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) சட்டத்தினூடாக மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை அரசு பறித்தது மட்டுமல்லாமல், தற்போது அதன் இரண்டாம் பாகமாக 13ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்வதாகக் கூறி மாகாணசபை அதிகாரங்களை மத்திய அரசின் வசமாக்க முயற்சிக்கின்றது என்று ஐ.தே.கவின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிரோஷன் பாதுக்க குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு, இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"13ஆவது திருத்தம் குறித்து கடந்த 25ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்தினூடாக இரண்டாவது வரலாற்றுத்தவறை அது இழைத்துள்ளது.

இவ்வாறான நிலையிலும் உண்மை தெரிந்த - கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் வாய்மூடி இருக்கின்றனர்.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு முதலாவது வரலாற்றுத் தவறை இழைத்தது. இப்போது 13ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானமெடுத்து இரண்டாவது வரலாற்றுத் தவறையும் இழைத்துள்ளது.

அத்துடன், தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இல்லை என்பதும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

முதலாம் உலக மகா யுத்தத்தில் ஜேர்மன் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளால் ஜேர்மன் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து ஹிட்லர் படைகளைத் திரட்டியதையடுத்தே இரண்டாம் உலக மகா யுத்தம் இடம்பெற்றது. இதில் ஜேர்மன் வெற்றிபெற்றதன் பின்னர் பிரிட்டன், பிரான்ஸ் முதலான நாடுகள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட ஏனைய உலக நாடுகள் ஜேர்மனுக்கு இடமளிக்கவில்லை. இதனால் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக நாடுகளிடையே நட்புறவு ஏற்பட்டது. ஆனால், இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, இனங்களை ஒற்றுமைப்படுத்தி நட்புறவை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, 13ஆவது திருத்தம் 'இந்தியாவால் பிறந்த சட்டவிரோதக் குழந்தையென ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில கூறுகிறார். 13ஆவது திருத்தம் சட்டவிரோத குழந்தையாயின், அதை வல்லுறவுக்குட்படுத்துபவரே உதய கம்மன்பில. 13 ஆவது திருத்தம் சட்டவிரோத குழந்தையாயின், அதைச் சட்டரீதியான குழந்தையாக மாற்றுக" - என்றார்.

### மேலும் 22 பேரை திருப்பியனுப்பியது ஆஸ்திரேலியா

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்ற மேலும் 22 இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரண்டன் ஓ கோன்னர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் இருந்து விமானம் மூலம் நேற்றுமுன்தினம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் இது வரை 1,270 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் 1,057 பேர் சுய விருப்பில் நாடு திரும்பியவர்கள் என ஆஸ்திரேலியக் குடிவரவு அமைச்சர் பிரண்டன் ஓ கோன்னர் குறிப்பிட்டுள்ளார். (த)

## இராணுவப் பயிற்சிகளை அதிகரிக்க பாகிஸ்தான் – இலங்கை ஆராய்வு

கொழும்பு,ஜூன் 29
பாகிஸ்தானில் இலங்கைப் படையதிகாரிகளுக்குத் தற்போது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் பயிற்சித் திட்டங்களுக்கு அப்பால் மேலும் கூடுதல் பயிற்சி அளிக்கும் வாய்ப்புகள் பற்றி இலங்கையும் பாகிஸ்தானும் ஆராய்ந்துள்ளன.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வெஸ் கயானிக்கும் இலங்கை இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவுக்கும் இடையில் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்படி விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக் கருத்தரங்குகள், இரண்டு நாடுகளிலுமுள்ள உயர்கல்வி வாய்ப்புகள் . இலங்கையின் இராணுவப் பயிற்சித் திட்டமான 'கொமொறன்' (நீர்க் காகம்) தொடர்பில் பேசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாடுகளையும் சேர்ந்த இராணுவ அதிகாரிகளிடையே இருபக்கப் புரிந்துணர்வு மற்றும் நல்லெண்ணம் என்பவற்றை மேலும் விரிவாக்குவது பற்றி முக்கியமாக பேசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# ஊடகங்களை அடக்கியாளவே ஊடகக்கோவை பொறிமுறை

## அரசை சாடுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு,ஜூன் 29
ஊடகங்களை அடக்கியாள்வதற்கான பொறிமுறையாகவே ஊடகக் கோவையை அறிமுகப்படுத்த அரசு முயற்சிக்கிறது. ஊடக அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படாவிடின் சர்வதேச செல்வாக்கை இலங்கை இழக்கும் நிலையேற்படும்.

தற்போதைய அரசு ஜனநாயகம் என்ற பெயரைத் தமது விருப்பு வெறுப்புகளாகவும், தமது ஆதரவாளர்களைக் காப்பதற்காகவுமே பாவிக்கின்றது. இதனால் இன்று நாட்டிலுள்ள பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த பலவித சட்டங்களையும் ஊடக ஒழுக்கக் கோவை என்ற பெயரில் அறிமுகப்படுத்தப் பார்க்கிறார்கள் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தனது அலுவலகத்தில் நேற்றுக்காலை நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டின் போது தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

தென்பகுதி மக்களைப் போலவே வடக்கிலுள்ள மக்களுக்கும் சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்படவேண்டும். இதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவை உடனடியாக நியமித்து வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற அரசு முன்வர வேண்டும். கருத்துச் சுதந்திரம் பேணப்படவேண்டும். 'உதயன்' பத்திரிகை போன்ற பத்திரிகைகளை அடக்கி இல்லாதொழிக்க இன்று பலர் முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் நாம் சர்வதேச செல்வாக்கை இழக்கநேரிடும்.

ஏற்கனவே பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்றியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊடக ஒழுக்கக்கோவையொன்று நடைமுறையில் உள்ளது. இதன் மூலம் எவருக்கும் பாதகங்கள் ஏற்படின் இலங்கை பத்திரிகை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம். நாம் அறிந்தவகையில் எவ்வளவோ பிரச்சினைகள் இதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளன.

இன்று அரச ஊடகங்கள் தமது எதிர்த்தரப்பினரைக் கீழ்மைப்படுத்தி- கொச்சைப்படுத்தி - விமர்சித்து செய்திகளைப் பிரசுரிக்கின்றன. இன,மத வேற்றுமைகளை ஏற்படுத்தி ஒற்றுமையையும் குலைக்கும் விதத்தில் செயற்படுகின்றன. இவை யாவும் அரச ஊடகங்களில் இருக்கின்ற ஒரு சிலரால் கொண்டுசெல்லப்படும் கீழ்த்தரமான பிரசாரங்களாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் ஐ.டி.என். தொலைக்காட்சியும் எதிர்க்கட்சியின் குறிப்பிட்ட ஒருசிலருக்கு விரோதமாக எடுத்துச்செல்லும் கீழ்த்தரமான பிரசாரத்தைப்பற்றி நாம் இதற்கு முன்னரும் எடுத்துக் கூறியுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் ஊடக சுதந்திரத்தைக் கௌரவித்தது. அதேபோல், ஊடகவியலாளர்களுக்கு உரிய கௌரவத்தையும் வழங்கியது. 1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஊடகவியலாளர்களை மட்டுப்படுத்தும் சட்டத்தை 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசு இல்லாதொழித்தது.

ஆனால் 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசால் எடுத்துச் செல்லப்படும் திட்டத்தினால் சர்வதேச சமூகம் எமக்கு விரோதமாகக் குரலெழுப்பியுள்ளது. ஊடக சுதந்திரம் சம்பந்தமாக உலகில் 179 நாடுகளில் எமது நாடு 162ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.- என்றார். (ங-சி)

## தொழிற் பயிற்சிகள் திங்கள் ஆரம்பம்

தென்மராட்சி, ஜூன் 29
சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தால் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கைதடி-நுணாவில் அறவழி நிலைய தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பிரதேச இளைஞர் சேவைகள் அலுவலர் அ.குறோஸ் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திர பாலகலந்துகொண்டு பயிற்சி நெறிகளை ஆரம்பித்து வைப்பார். (வ-9)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சரவணமுத்து



உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா சரவணமுத்து நேற்று (28.06.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் சரவணமுத்துவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற நவமணி, காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தலக்குமி, ஸ்ரீகாந்தன் (இத்தாலி), நந்தலக்குமி, தனலக்குமி (ஆசிரியர் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), பத்மகாந்தன் (கனடா), ஜீவகாந்தன் (இத்தாலி), முருகானந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் செல்லத்துரை, காலஞ்சென்ற ஞானதேவி, சந்திராதேவி, சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), யோகராசா (ஆசிரியர், யா/இடைக்குறிச்சி, சுப்பிரமணியம் வித்தியாலயம்), லதா (இத்தாலி), அநுசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஜசிதலா, ராஜாராம் (ஆஸ்திரேலியா), ராஜீவ், சுஜீதா (இத்தாலி), சுஜீகா, காண்டீபன், ரஜீவனா, சுஜாருபன் (பட்டதாரி பயிலுனர்கள்), திலோஸ் (HNDE மட்டக்குளி), விதுசன், வேணுசன், வைஸ்னவி, மயூரன் (கனடா), நீருஜா (கனடா), தனோகேசன் (ஆஸ்திரேலியா), தாரணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுமிதா (ஆஸ்திரேலியா), சுரிஸ்ராம் (ஆஸ்திரேலியா), அக்சிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உசன், மிருசுவில். தகவல்:
0774862626 (பத்மன்) (சி/10148) குடும்பத்தினர்.


## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இலங்கையில் நல்லிணக்கத்துக்கு பொதுநலவாயம் உதவி வழங்கும்

பொதுநலவாய அமைப்பின் மென் பல பிரயோகமும், திரை மறைவு பங்களிப்புகளும் குறுகிய காலப் பார்வையில் எதிர்மறையான முடிவுகளைத் தோற்றுவிக்கும் அபாயம் இருந்த போதிலும் உண்மையான முன்னேற்றமானது நீண்டகால அடிப்படையிலேயே வெற்றியளிப்பதாக இருக்கும் என்றார். (த-ப)

### தெரிவுக் குழுவுக்கு வராதோர் ஜனநாயக விரோதிகளாவர்

ணது என்று கெஹலிய குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஐ.தே.க, ஜே.வி.பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் சமுகமளிப்பதில்லை.

இந்த நிலையில் அந்தக் கட்சிகள் பங்கேற்காமல் விடுமாயின் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுமா? என அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு , இதன் வெற்றி தோல்வி என்பது வேறு. ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து தெரிவுக் குழுவில் பங்கேற்பது முக்கியம் என அமைச்சர் பதிலளித்தார்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான சர்ச்சைகளுக்கு ஜனநாயக முறையில் தீர்வு காண்பதற்கே அரசு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்துள்ளது என்பதை இவர்கள் [illegible] இந்தத் தெரிவுக் குழுவுக்கு [illegible] என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ட)

### தெரிவுக்குழுவை கூட்டமைப்பு எதற்காகப் புறக்கணித்தது?

கட்சித் தலைவர் சம்பந்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

### '13' ஐ ஒழிக்க அரசுக்கு பெரும்பான்மை கிடைக்காது

டத்தை இல்லாதொழிக்கும் முயற்சிக்கு எதிராகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருவதற்காக அமைச்சர் டியூ குணசேகரவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெளியிலிருந்து குறித்த சட்ட வரைவுக்கு ஆதரவளித்ததையும் சிரேஷ்ட அமைச்சர் டியூகுணசேகர நினைவு கூர்ந்தார்.

அரசில் பலர், 13 ஆவது திருத்த ஒழிப்புக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர். இதனால் நாடாளுமன்றத்தில் 13 ஆவது திருத்த ஒழிப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர எம்மிடம் தெரிவித்தார்.

அரசமைப்பு மாற்றம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவில் 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவதை எதிர்க்கின்ற கட்சிகள் பங்கெடுக்க வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் டியூ இதன் போது குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவதை எதிர்க்கின்ற திஸ்ஸவிதாரண, ராஜித சேனாரத்ன ஆகியோரையே தெரிவுக் குழுவுக்குள் உள்வாங்கவில்லை. எப்படி இந்தத் தெரிவுக் குழுவை நம்ப முடியும் என்று நாம் டியூ குணசேகரவிடம் கேள்வி எழுப்பினோம்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அதனைத்தான் பார்த்துக் கொள்வதாகவும் அவர்களைப் பங்கெடுக்க வைக்குமாறும் தெரிவித்தார். - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எவறெஸ்ட் வி.க. உதைபந்து தொடர்

## இதுவரை வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம்:

**புதன்கிழமை**
இளவாலை . ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்துக்கும் எல்லாளன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**வியாழக்கிழமை**
வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் மைதானத்துக்கு வராமையால் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ற-23)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் ரென்னிஸ் சுற்றுத் தொடரில், 19 வயது மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்றில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. தொடரின் ஆடவர் மற்றும் மகளிருக்கான இறுதியாட்டங்கள் இன்று சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ற-23)

## வென்றது யாழ்.இந்து

யாழ்ப்பாணம், ஜூன் 29
மற்றிக்ஸ்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும்; சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.
விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 168:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தியது. (ற-23)

## வென்றது யங்லயன்ஸ்

யாழ்ப்பாணம்.ஜூன் 29
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ற-23)

## வடமாகாண பூப்பந்து முடிவுகள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 19வயது பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு.
**15 வயதுப்பிரிவு**
முதலாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை. இரண்டாமிடம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. மூன்றாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
**19 வயதுப்பிரிவு**
முதலாமிடம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. இரண்டாமிடம் உடுவில் மான்ஸ் வித்தியாலயம். மூன்றாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.(23)




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட பூப்பந்துப் போட்டிகளில், 15 வயதுப் பிரிவில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினர். (ற)

## இளவாலை ஹென்றிஸ், சென்.அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 29
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றன.
இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் சிறி அம்பாள் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் 7:0 என்ற கோல் கணக்கில் இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.
பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ற-23)

## வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான 'ஏ' தரம், 'பி' தரம், 'சி' தரம் என்பவற்றுக்கான பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
மேற்படி பரீட்சை தொடர்பான அறிவித்தல் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
'ஏ'தரம், 'பி' தரம் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்த பின்னரே பரீட்சையில் தோற்ற முடியும் என்றும், பரீட்சையில் தோற்றவுள்ளவர்கள், 'பி' தரம் மற்றும் 'சி' தரப் பரீட்சையில் சித்தியடைந்த சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கூட்டத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-23)

19 வயதுப் பிரிவினருக்கான எறிபந்து

## நெல்லியடி சென்றல் மாகாணச் சம்பியன்




யாழ்ப்பாணம், ஜூன் 29
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட எறிபந்து சுற்றுத் தொடரில், 19 வயது ஆடவர் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சம்பியனாகத் தெரிவாகியது.
வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி மோதியது.
மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 25:22, 25:8 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
அதேபிரிவில் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும், மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலை அணியும் மோதியது. அதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றி பெற்றது. (ற-23-422)

## இன்றைய ஆட்டங்களின் விவரங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
திருக்குமரன் விளையாட்டுக் கழகம் எதிர் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம்.
பி.ப. 4.30 மணி
மன்னார் சென்.லூட்சியஸ் 'ஏ' அணி எதிர் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 29
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 29
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணக் கிரிகெட் தொடரில் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
காலை 8 மணி
கே.ஸி.ஸி.ஸி. எதிர் யூனியன் வி.க.
மு.ப. 11 மணி
ஜெர்னியன்ஸ் வி.க. எதிர் திருநெல்வேலி ஸி.ஸி.
பி.ப. 2 மணி
சென்றலைட்ஸ் வி.க. எதிர் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூதாட்ட விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

சூதாட்ட வீரர்களிடம் இந்திய கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு கண்காணிப்பு அதிகாரி ரவி சவானி நடத்திய விசாரணை முடிந்தது.

பிரிமியர் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட ராஜஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த், அங்கித் சவான் ஆகியோர் தற்போது பிணையில் வெளியே வந்துள்ளனர். இந்திய கிரிக்கெட் சபை சார்பில், அவர்களை விசாரிக்க ரவி சவானி நியமிக்கப்பட்டார்.

சில நாள்களுக்கு முன், ஸ்ரீசாந்திடம் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தினார். அடுத்து அங்கித் சவான், அரச தரப்புச் சாட்சியாக மாறிய சித்தார்த் திரிவேதி ஆகியோரிடமும் சவானி விசாரணை நடத்தினார்.

அத்துடன் ராஜஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அமித் சிங்கிடமும் அவர் விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்த விசாரணைகள் குறித்த விரிவான அறிக்கையை இந்திய கிரிக்கெட் சபைக்கு சவானி தற்போது அனுப்பி வைத்துள்ளார். எனினும் யாருக்கு என்ன தண்டனை கொடுப்பது என்ற விவரங்களை அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. வீரர்கள் மீதான நடவடிக்கை ஜூலை முதல் வாரத்தில் நடக்கும் இந்திய கிரிக்கெட் சபை செயற்குழுக் கூட்டத்திலேயே அது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மற்றொரு ராஜஸ்தான் அணி வீரர் சண்டிலாவிடம் சவானி இதுவரை விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.(ற)



## வென்றது ஸ்பெய்ன்

கானா அணிக்கு எதிரான உலகக் கிண்ண உதைபந்துத் தொடரின் லீக் ஆட்டமொன்றில் ஸ்பெய்ன் வெற்றி பெற்றுள்ளது.

20 வயதுக்குட்பட்ட பிபா உலகக் கிண்ண உதைபந்துத் தொடர் துருக்கியில் நடைபெற்று வருகின்றது.

இஸ்தான்புல்லில் நடைபெற்ற ''ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் ஸ்பெயின், கானா அணிகள் மோதின.

அதில் ஸ்பெயின் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அதேவேளை 'பி' பிரிவில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் போர்த்துக்கல் தென்கொரியா அணிகள் மோதின.

அந்த போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. (ற)


## நிதிமோசடி தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பு

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி சமரவீர (தனிநபர்) குழுவின் அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 50 மில்லியன் ரூபா நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறப்படுவது தொடர்பிலும், உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏனைய நிதி மோசடிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காகவும் இந்த தனிநபர் குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்திருந்தார். (ற)

## சொந்த நாட்டில் ஆதிக்கத்தை வெளிப்படுத்துவோம் - கெய்ல்

தங்களுடைய சொந்த நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை வெளிப்படுத்த விரும்புவதாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார். அத்தோடு எதிரணிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்புவதாகவும் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்தில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காததோடு, அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருக்கவில்லை.

இலங்கை, இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பங்குகொள்ளும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே கிறிஸ் கெயில் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெளியேற்றப்பட்டது குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்த கிறிஸ் கெயில், தற்போது அணியிலுள்ள அனைவரும் அதிலிருந்து மீண்டு, போட்டிகளுக்காகத் தயாராகியுள்ளதாகத் தெரிவித்தார்.

சொந்த நாட்டில் விளையாடுவதை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணி தங்கள் திறமைகளுக்கேற்றவாறு விளையாட வேண்டும் எனத் தெரிவித்த கிறிஸ் கெயில், சொந்த நாட்டில் தங்கள் ஆதிக்கத்தை வெளிப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (ற)

## சச்சினின் சாதனையை முறியடிப்பார் குக்

டெஸ்ட் கிரிக்கெட்டில் சச்சினின் சாதனையை தமது அணியின் தலைவர் அலேஸ்ரயர் குக் முறியடிப்பார் என்று இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.


''இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் 15,837 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஆனால் 28 வயதான குக், இதுவரை 92 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7,524 ஓட்டங்கள் எடுத்துள்ளார். தற்போதைய நிலையில் சச்சினைவிட 8,313 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளார் குக். ஆனாலும் சச்சினின் அதிக ஓட்டங்கள் என்ற சாதனையை குக் முறியடிப்பார். அணித் தலைவராக அவர் மிகச் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.இப்போது அவர் எடுத்திருக்கும் ஓட்டங்களையும், அவருடைய வயதையும் பார்த்தால், அவர் சச்சினின் அதிக ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடிக்கும் இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறார் என்றே கூற வேண்டும்'' என்று பீற்றர்ஸன் தெரிவித்துள்ளார். (ற)

## சாய்னா முன்னேற்றம்

சர்வதேச பூப்பந்துத் தரவரிசையில் இந்தியாவின் சாய்னா நெவால் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 2ஆவது இடத்தில் இருந்த சாய்னா, தாய்லாந்து, இந்தோனேசிய பூப்பந்துத் தொடர்களில் சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள தவறியதை அடுத்து கடந்த வாரம் 4ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

இந்தநிலையில், தற்போது 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். சீனாவின் லீ ஸியூரூய், இகன் வாங் ஆகியோர் முறையே முதல் 2 இடங்களில் உள்ளனர். (ற)




## விம்பிள்டன்: ஜோகோவிச் வெற்றி

விம்பிள்டன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில், உலகின் முதல்தர வீரரான செர்பியாவின் ஜோகோவிச் வெற்றி பெற்றார்.

லண்டனில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், செர்பியாவின் நோவாக் ஜோகோவிச், அமெரிக்காவின் பாபி ரெனால்ஸை சந்தித்தார்.

அதில் 'டைபிரேக்கர்' வரை சென்ற முதல் செற்றை 7:6 என ஜோகோவிச் வென்றார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச், இரண்டாவது, மூன்றாவது செற்றையும், 6:3, 6:1 என கைப்பற்றினார்.



முடிவில், செர்பியாவின் ஜோகோவிச் 7:6, 6:3, 6:1 என்ற நேர்செற்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் டெல் பெட்ரோ, கனடாவின் ஜெசி லிவைனை 6:2, 7:6, 6:3 என்ற நேர் செற்களில் வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார். மற்றொரு போட்டியில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிக், ஜேர்மனியின் டேனி [illegible] 7:6, 6:4, [illegible] வீழ்த்தினார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றளை ம.வி. பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஜூன் 29
புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறுகிறது.
இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சிறிகரன் கலந்துகொள்வார். பரிசில்களை திருமதி லோகேஸ்வரி சிறிகரன் வழங்குவார். (ஓ-8)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliiyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 01-07-2013
Batch2 : 06-07-2013
Batch3 : 08-07-2013
Batch4 : 12-07-2013

வரப்பிரசாதமான அபூர்வ நிகழ்வு
ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க, உழைக்க
"உடனடி அனுமதியும் நேர்முகத் தேர்வும்"
(14 பேருக்கு மட்டும் இவ் அரிய வாய்ப்பு)
சைப்பிரஸ் விசா ஆலோசனைத்துறையில் தனித்துவமான
விசா விற்பன்னர்கள் கலந்து சிறப்பிக்கும்
யாழ். நகரில் முக்கிய நிகழ்வு.
சைப்பிரஸில் படிக்க, உழைக்க (40 வயதிற்குட்பட்டோர்) O/L.ம் தேவையில்லை.
உணவு இலவசம்
ஒரு இலட்சம் சம்பாத்தியம்
இருப்பிடம் இலவசம்
4 வருட வீசா
(50% கட்டணச் சலுகை)
இடம்:- திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் கேட்போர் கூடம்
காலம்:- 30/06/ 2013 ஞாயிறு
நேரம்:- தொலைபேசி மூலம் முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090 (38/36)

சமாதானப் பெருந்தொனி
"உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்..." (யோவான் 16:20)
கவலையா, கண்ணீரா,
தீராத வியாதியா,
பிசாசின் பிடியா,
வியாபாரத் தோல்விகளா,
பில்லி – சூனியக்கட்டுக்களா,
பாவங்களா,
பரம்பரை சாபங்களா,
அடிமைத்தனங்களா,
ஆகியவற்றிலிருந்து...
இயேசு விடுதலை கொடுக்கிறார்...
காலம் : ஆனி மாதம் 28,29,30ம் திகதிகளில்
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : பிரதேச சபை மைதானம் ,
பரந்தன் வீதி , புதுக்குடியிருப்பு.
(பெற்றோல் செற் முன்பாக)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
1ம் வட்டாரம், வேணாவில், புதுக்குடியிருப்பு.
இயேசு செய்த அற்புதங்களில் சில...
* குருதிப்புற்று நோயிலிருந்து விடுதலை [லூக்கோமியா]

எனக்கு மூன்று வருடங்களாக இருந்த குருதிப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டேன் ஜெப வேளையில் பரிபூரண விடுதலையை பெற்றுக்கொண்டேன்.
[ச.பரணிதரன் – புத்தூர்]
* மார்பக புற்று நோயிலிருந்து அற்புத விடுதலை

எனக்கு மார்பகத்தில் இருந்த புற்றுநோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் வைத்தியங்கள் பலனளிக்காத நிலையில் ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
[இ.யசோதா – நெடுந்தீவு]
* மூளையில் இருந்த கட்டி மறைந்தது

எனது மூளையில் நரம்புச்சுருக்கத்தால் ஏற்பட்ட கட்டியினால் அடிக்கடி ஏற்படும் வலிப்பு நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
[த.தனுஷன் – நாவற்குழி]
கடந்த மாதம் முல்லைத்தீவில் நடந்த சமாதானப் பெருந்தொனி சுவிசேஷக் கூட்டத்தில் அநேகர் பல அற்புத சுகத்தை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
*
[குருடர்கள் பார்வையடைந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள், முடவர்கள் நடந்தார்கள். இது போன்ற பல அற்புதங்கள் நடைபெற்றன...]

# பாதுகாப்புப் பிரமுகர்களின் தொலைபேசி ஒட்டுக் கேட்பு



கொழும்பு, ஜூன் 29
இலங்கையின் உயர்மட்டப் பாதுகாப்புப் பிரமுகர்களின் தொலைபேசி உரையாடல்களை அண்டை நாட்டு புலனாய்வுப் பிரிவொன்று ஒட்டுக் கேட்டுள்ளதாகக் கூறப்படும் விவகாரமானது கொழும்புக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
இலங்கையுடன் அரசியல், கலாசார, பொருளாதார ரீதியில் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வரும் மேற்படி நாட்டின் இவ்வாறானதொரு நடவடிக்கையால் கடும் விசனமடைந்துள்ள இலங்கையின் பாதுகாப்புத்தரப்பு, இதை மன்னிக்கமுடியாத குற்றம் எனவும் சாடியுள்ளது.
அதேவேளை, அயல்நாடொன்றின் பாதுகாப்பு சார்ந்த விவரங்களைத் திரட்டுவதற்கு ஒட்டுக் கேட்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதானது, அத்துமீறிய செயற்பாடாகும் என கொதிப்படைந்துள்ள இலங்கை, தனது அதிருப்தியை குறித்த நாட்டிடம் வெளியிடவும் உத்தேசித்துள்ளது.
அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்ட விவகாரம், ஆசியாவின் சக்திமிக்க நாடொன்று கேந்திர நிலையமான இலங்கையில் ஆதிக்கம் செலுத்துதல் போன்ற விவகாரங்களால் கொழும்புக்கும் புலன் தகவல் திரட்டிய குறித்த நாட்டுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் இவ்வேளையில், பாதுகாப்பு உட்பட்ட பிரமுகர்களின் தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ள விவகாரமானது தேசிய ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
தெற்காசியாவில் பலம்மிக்க அந்த நாடு ஏன் இவ்வாறானதொரு செயற்பாட்டில் ஈடுபட்டது என்பது தொடர்பில் அறியும் பொருட்டு உள்ளக விசாரணையை முடுக்கிவிட்டுள்ள இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு, விசாரணை முடிவடைந்ததும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது என அறிய முடிகின்றது.
அதேவேளை, இலங்கையின் பாதுகாப்பு தொடர்பிலான தகவல்களைத் திரட்டுவதற்காகவா மேற்படி நாடு வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தகவல் திரட்டியுள்ளது எனக் கொழும்பு பாதுகாப்புத்தரப்பு சந்தேகம் கொண்டுள்ளது என்றும், அண்டைநாட்டுப் புலனாய்வுப் பிரிவின் மேற்படி செயற்பாட்டை இலங்கை புலனாய்வுப் பிரிவினரே கண்டறிந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ம.ம.முன்னணி – கூட்டமைப்பு ஓரிரு நாள்களில் '13' பேச்சு

கொழும்பு, ஜூன் 29
அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக மலையக தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதன் ஓர் அங்கமாக மலையக மக்கள் முன்னணியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.
குறித்த சந்திப்பு எதிர்வரும் திங்கள் அல்லது செவ்வாயன்று இடம்பெறும் என அறியமுடிகின்றது. இதற்கான ஏற்பாடுகள் குறித்து மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் அ.லோறன்ஸுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆலோசனை நடத்தியுள்ளது.
13 ஆவது திருத்தச் உட்பட அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்கென அரசு நியமித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காதிருக்க முடிவு செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இவ்விவகாரங்கள் தொடர்பில் சிறுபான்மையின கட்சிகளுடன் பேச்சு நடத்திவருகின்றது.
இதற்கமைய ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு நடத்தியுள்ளது.
இதன் அடுத்தகட்டமாகவே நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இதர சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சு நடத்தக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.
முதற்கட்டமாக மலையக மக்கள் முன்னணியைச் சந்திக்கவுள்ள கூட்டமைப்பு, அதன் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியவற்றுடனும் பேச்சு நடத்தவுள்ளது எனத் தெரிய வருகின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மலையக மக்கள் முன்னணிக்குமிடையில் இடம்பெறும் இடம்பெறவுள்ள சந்திப்பில் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவி சாந்தினிதேவி சந்திரசேகரன், செயலாளர் அ.லோறன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வுள்ளனர்.

வேலை வாய்ப்பு
* கணினி ரைப்செற்றிங் தெரிந்த விற்பனையாளர் தேவை.
* விற்பனைப் பிரதிநிதி / வெளிக்கள வேலை செய்யக்கூடியவர் தேவை.
* சுய விவரத்துடன் விண்ணப்பிக்கவும்.
சி.முருகேசன்,
இல. 70, கச்சேரிநல்லூர்வீதி, யாழ்ப்பாணம்.
077 2174741
(38726)(17.6)

மாபிள் பதித்தல்
10 வருடம் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால் உங்கள் விருப்பத்துக்கு ஏற்றவகையில் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் மாபிள் பதித்து தரப்படும். (டோகா அரசாங்கத்தினால் பாராட்டு பெற்றவர்)
தொடர்பு: 0773824871 (பாபு)
(35085)(10.6)



நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

பிரணவன் என்ரபிறைசஸ்
பருத்தித்துறைவீதி. நல்லூர்
யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)
0773818799
பல்வேறு வடிவமைப்புக்களைக் கொண்ட நிலப்பதிப்புக்கற்களை யாழ், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களிலுள்ள காட்சியறைகளில் பார்வை இடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.